# உதயன்

கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
மேகமூட்டம், மழை

சுடர் 30 | கதிர் 165 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 28, திங்கட்கிழமை 11.05.2015


## மத்தள விமானநிலையம் மூடப்படாது

கொழும்பு, மே 11

"மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் எக்காரணம் கொண்டும் மூடப்படாது" – என சிவில் விமான சேவைகள் அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்தைக் கண்காணிப்பதற்காக முதற் தடவையாக அமைச்சர் ரெஜினோல்ட் நேற்று அங்கு சென்றார். இதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"மத்தள விமான நிலையத்தை மூடாமல் இலாபமீட்டக்கூடிய நிறுவனமாக அதைக் கட்டியெழுப்ப வேண்டும். இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டுள்ளன" என்றும் அவர் கூறினார். (ற–சி)

# தமிழினப் படுகொலை: நீதி கோரி போராட்டம்

## தமிழகத்தின் பல பகுதிகளில் நேற்று முன்னெடுப்பு
## இலங்கை வர்த்தக நிறுவனங்களை அகற்றவும் கோரிக்கை




சென்னை, மே 11

தமிழினப்படுகொலைக்கு நீதிகோரியும், தமிழகத்திலுள்ள இலங்கை வர்த்தக நிறுவனங்களை அகற்றக் கோரியும் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் நேற்றுப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தமிழகத்தில் உள்ள சகல இலங்கை வர்த்தக நிறுவனங்களும் வெளியேறும் வரையில் இந்தப் போராட்டங்கள் தொடரும் என்று மாணவர்கள் மற்றும் இளைஞர் இயக்கங்கள் அறிவித்துள்ளன.

தமிழகத்திலுள்ள 'தம்ரோ' தளபாட விற்பனை நிலையத்தின் 8 கடைகளுக்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் காரணமாக குறித்த விற்பனை நிறுவனங்கள் நேற்று முழு நாளும் மூடப்பட்டிருந்தன.

லட்சக் கணக்கான ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்துவிட்டு, இலங்கை நிறுவனம் தமிழகத்தில் வர்த்தக நிலையத்தை ஆரம்பித்து ஆண்டுக்கு 30 கோடி ரூபாவுக்கு மேல் லாபத்தைப் பெற்று வருகின்றது. அதனால் தமிழகத்திலுள்ள தமிழர்கள் நாம்

பக்.24

## இன அழிப்பின் 6ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே. 11

இலங்கை அரசால், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பின் ஆறாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், வடக்கு – கிழக்கு மாகாணங்களில் கடைப்பிடிக்கவுள்ளது. இதற்குரிய ஒழுங்குகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மேற்கொண்டுள்ளது.

நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. தாயகத்திலும், தரணியில் தமிழர் வாழும் தேசம் எங்கும் நினைவேந்தல் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்படவுள்ளன.

தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

பக்.24

## வெற்றி நாளல்ல மே 18 நினைவுகூரும் நாளே

*மைத்திரி அரசு தீர்மானமாம்*

கொழும்பு, மே 11

எதிர்வரும் மே 18 ஆம் திகதி போரில் சாவைத் தழுவிய அனைவரையும் நினைவு கூரும் நாளாகவே அரசு கடைப்பிடிக்கவுள்ளது. மஹிந்த அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்டதைப் போன்று, போர் வெற்றி நாளாக மே 18 கொண்டாடப்பட மாட்டாது.– இவ்வாறு அரச உயர் மட்டத்தினர் தெரிவித்துள்ளனர் என்று சண்டே ரைம்ஸ் ஆங்கில நாளிதழ் நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி, தமிழீழ விடுதலைப் புலிகளை – தமிழ் மக்களை – வெற்றி கொண்ட நாளாகப் பிரகடனப்படுத்திய மஹிந்த அரசு, அன்றைய தினம் போர் வெற்றி நாளாக தென்பகுதியில் பெரும் எடுப்பில் கொண்டாட்டங்களை நடத்தி வந்தது. தமிழர் தாயகப் பகுதிகளில், உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்வதற்கு மக்கள் அனுமதிக்கப்படவில்லை.

தற்போது மைத்திரி தலைமையிலான புதிய அரசு மே 18 ஆம் திகதியை வித்தியாசமான

பக்.24

## காணாமல்போனோர் தொடர்பான ஐ.நா. குழு இலங்கை வருகின்றது

கொழும்பு, மே 11

காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா. விசாரணைக்குழு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. ஓகஸ்ட் 3 ஆம் திகதி தொடக்கம், 12 ஆம் திகதி வரை இந்தக் குழு இலங்கையில் தங்கியிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு 2013 ஆம் ஆண்டு அனுமதி கோரியிருந்தது. எனினும், அப்போது ஆட்சியிலிருந்த மஹிந்த அரசு, இந்தக் குழுவின் பயணத்துக்கு அனுமதி வழங்கவில்லை.

புதிய அரசு அனுமதி

பக்.24

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

தென்மராட்சி, மே 11

மீசாலை, அல்லாரையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் நடந்துள்ளது.

புதிய கட்டடம் ஒன்றுக்கு மின் இணைப்பு வேலைகள் செய்து விட்டு சோதனை செய்தபோதே மின் தாக்குதலுக்கு உள்ளானார் என்று கூறப்படுகின்றது.

அதே இடத்தைச் சேர்ந்த விநாயகமூர்த்தி உதயசந்தர் (வயது–32) என்பவரே உயிரிழந்தவராவார். அவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ற–9)

## காணாமல்போன குடும்பஸ்தர் 3 நாள்களின் பின் சடலமாக மீட்பு

வன்னேரிக்குளத்தில் சம்பவம்



கிளிநொச்சி, மே 11

மூன்று நாள்களுக்கு முன் காணாமல் போன குடும்பஸ்தர் ஒருவர் கிளிநொச்சி வன்னேரிக்குளம் காட்டுப் பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான நாகராசா பரமேஸ்வரன் (வயது–47) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பக்.24

## 19இல் சபைக்கு வருகின்றது '20'

கொழும்பு, மே 11

புதிய தேர்தல் முறைமை உள்ளடக்கப்பட்ட 20ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டத்தை எதிர்வரும் 19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என அறியமுடிகிறது.

புதியதேர்தல்முறைமைதொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்வதற்கு கட்சித் தலைவர்களுடனான விசேட கலந்துரையாடலொன்றை ஜனாதிபதி செயலகத்தில் இன்று நடத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன ஏற்பாடு செய் துள்ளார்.

இதில், இறுதித் தீர்மானம் மேற்கொண்டதன் பின்னர் அத்தீர்மானம் எதிர்வரும் 13ஆம் திகதி அமைச்சரவை அனுமதி பெற்றுக் கொண்டு அன்றைய தினமே வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடுவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

அதன்பின்னர் சட்டமூலத்தை நீதிமன் றத்தில் சமர்ப்பிப்பதோடு 19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (ற–சி)



## கோத்தபாய ராஜபக்ஷ இன்று கைதாவாரா?

கொழும்பு, மே 11

நிதி மோசடி தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு இன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ள, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், முன்னாள் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ

பக்.24

## ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை?

கொழும்பு, மே 11

நாடாமன்றத்தில் 42 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதும் விரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுமென முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன

பக்.24

## ஜூலை மாதம் பொதுத்தேர்தல்

கொழும்பு, மே 11

20ஆவது திருத்தச்சட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் ஜூலை மாத இறுதியில் நடத்தப்படவுள்ளது என்று தெரியவருகின்றது.

கடந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன , பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரச அதிகாரிகளுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கம் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

புதிய தேர்தல் முறைமை உள்ளடக்கப்பட்ட 20 ஆம் திருத்தச்சட்டம் சமர்ப்பிக்கப்

பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கட்சியிலேயே மஹிந்த களமிறங்குவது அவசியம்

## ஆலோசனை கூறுகின்றார் வாசுதேவ

கொழும்பு, மே 11
எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதிய கட்சியில் இணைந்து போட்டியிடுவது அவசியம் என்று இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பு தோல்வியுற்றதால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதிய கட்சியினூடாக தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
புதிய கட்சியின் சின்னம் மற்றும் பெயர் பற்றி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்று கூறியுள்ள அவர் மஹிந்த பிரதமர் வேட்பாளராக நியமிக்கப்படாவிட்டால் மைத்திரி, மஹிந்த சந்திப்பை தொடர்ந்து நடத்துவது அநாவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
வாசுதேவ இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்றே செய்தி வெளியிட்டுள்ளது.
மஹிந்த ராஜபக்ஷ இன்றி சிறிலங்கா சுதந்திர கட்சி ஒரு போதும் வெற்றி பெற முடியாதென்றும் அவர் கூறியுள்ளார். (ற)

# தாதியர் பல்கலைகளை உருவாக்க நடவடிக்கை

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



கொழும்பு, மே 11
தாதியர் பயிற்சிப் பாடசாலைகளை, தாதி யர் பல்கலைக்கழகங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
ஐக்கிய அரச தாதியர்கள் சங்கத்தால் சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் முற்பகல் சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெற்றது.
உலகில் வேறு எந்தவொரு நாட்டிலும் இல்லாதளவில் இலவசக்கல்வியையும் தரமான சுகாதார சேவையையும் ஏற்படுத்துவதற்காக அரசு அனைத்து வகையிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.
இந்த நிகழ்வில் ஐக்கிய அரச தாதியர்கள் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மற்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, அமைச்சின் செயலாளர் டாக்டர் பி.பி. திசாநாயக்க, முன்னாள் சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் அத்துல கஹந்தலியனகே, சுகா தார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பாலித மஹிபால, வைத்தியர் அணில் ஜயசிங்க, வைத்தியர் சுனில் மென்டிஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற)

## சு.கட்சியின் சம்மதத்துடனேயே ஐ.ம.சு.மு. கூட்டங்கள்

கொழும்பு, மே 11
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுக் கூட்டங்கள் எதிர்காலத்தில் சுதந்திரக்கட்சியின் இணக்கப்பாட்டுடன் நடத்தப்பட வேண்டும் என அக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர்.
குருநாகலில் இடம்பெற்ற கூட்டத்துக்கு பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எந்தவொரு கூட்டமும் சுதந்திரக்கட்சியின் அனுமதி இன்றி நடத்தப்படமாட்டாது என்று கூறப்படுகின்றது.
சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தனித்தனியாக பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்வது கட்சியின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் என்பதால், உறுப்பினர்கள் கட்சிக்கு அறிவித்து விட்டு கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற)

# புதிய தேர்தல் முறையால் பாதகநிலைமை இல்லை

## கபே அமைப்பு கூறுகின்றது

கொழும்பு, மே 11
புதிய தேர்தல் முறையால் சிறு கட்சிகளுக்கு பாதிப்பு ஏற்படப் போவதில்லை என 'கபே' அமைப்புத் தெரிவித்துள்ளது. புதிய தேர்தல் முறைமை நன்மையை ஏற்படுத்தும் என்று 'கபே' என்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.
புதிய தேர்தல் முறையால் சிறு கட்சிகள் தங்களது பிரதிநிதித்துவத்தை இழக்க நேரிடாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
2004 மற்றும் 2010ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளை ஆய்வு செய்த போது சிறு கட்சிகள் புதிய முறைமையில் போட்டியிட்டாலும் அதேயளவு ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் என தெரியவந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் கணக்கீடு செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். (ற)

# வெளிநாடு செல்வதற்கு கொழும்பு சென்ற சகோதரர்கள் விபத்தில் சிக்கிப் படுகாயம்



கொழும்பு, மே 11
வெளிநாட்டில் பணிபுரிவதற்காக மட் டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி பஸ்ஸில் வந்த இரு சகோதரர்கள் விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்துள்ளனர். கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்குக்கு அருகில் வைத்து நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணியளவில் இந்த விபத்து நடத்துள்ளது.
மட்டக்களப்பைச்சேர்ந்த 35 வயதுடைய சிறிதரன் மற்றும் 24 வயதுடைய டிலக்சன் ஆகியோர் வெளிநாட்டில் பணிபுரிவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் செல்வதற்காக மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு பஸ்ஸில் வந்துள்ளனர். கொழும்பு சுதந்ததாஸ விளையாட்டு அரங்குக்கு அருகில் பஸ்ஸில் இருந்து இறங்கி பஸ்ஸின் பின்புறமாக இருந்த தமது பொதிகளை எடுத்துக்கொண்டிருந்த போது வேகமாக வந்த டிப்பர் ரக வாகனமொன்று சகோதரர்கள் மீது மோதியுள்ளது. அதில் பலத்த காயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பொலிஸார் விபத்துக்குறித்தமேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# ஊழலில் ஈடுபட்டவர்கள் பாதுகாக்கப்படமாட்டார்கள்

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



கொழும்பு, மே 11
ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் பாதுகாக்கப்படமாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார் துறைமுக மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க.
வெயாங்கொடயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
முன்னாள், இந்நாள் ஜனாதிபதிகளுக்கிடையில் எவ்வாறான பேச்சு நடத்தப்படினும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் பாதுகாக்கப்படமாட்டார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
"முன்னாள் ஜனாதிபதிக்கும் தற்போதைய ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது என்ன பேசப்பட்டது என என்னிடம் பலர் கேள்வி எழுப்புகின்றார்கள். நான் அதில் பங்கேற்கவில்லை.
எனினும் ஜனாதிபதி மைத்திரிபாலவைச் சந்தித்த போது ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை பாதுகாக்க எவ்வாறான நிபந்தனைகளை விதித்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என ஜனாதிபதி கூறினார் என்று அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள் ளார். (ற)

## பொதுபலசேனா கட்சி அமைப்பது சிறந்ததல்லவாம்

கொழும்பு, மே 11
பொதுபல சேனா அமைப்பு புதிய அரசியல் கட்சியொன்றை உருவாக்குவது தொடர்பில் ஒருமுறைக்கு இருமுறை சிந்திக்க வேண்டும். சிங்கள பௌத்த சக்திகள் அனைத்தும் மஹிந்த ராஜபக்ஷவுடன் சூழ்ந்துள்ள இச்சந்தர்ப்பத்தில் பொதுபல சேனா தனியான கட்சியொன்றை அமைப்பது தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டும். – இவ்வாறு சிங்கள மொழி ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.
பொதுபல சேனா இலங்கையின் பலம்மிக்க சமயம் சார்ந்த அமைப்பாக இருக்க வேண்டும் என்பதே எமது அபிப்பிராயமாகக் காணப்படுகின்றது.
இந்நிலையில் அரசியல் கட்சியாக இருப்பதை எம்மால் ஏற்க முடியாது எனவே அரசியலுக்குள் நுழைவது தொடர்பில் பொதுபல சேனா ஒருமுறைக்கு இருமுறை சிந்திக்க வேண்டும். – என்றும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.
புத்திசாதுரியமாக சிந்திப்பது எந்தவொரு தேசிய அமைப்பினதும் முக்கிய கடப்பாடாகும். தேர்தலை இலக்கு வைத்து தீர்மானங்களை மேற்கொள்வதுதேசியஅமைப்பொன்றிற்கு பொருத்தமானதல்ல.– எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# தேசிய நிறைவேற்றுச் சபையை முன்னெடுப்பதில் சிக்கல்நிலை

கொழும்பு, மே 11
100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டதேசியநிறைவேற்று சபையின் நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.
தேசிய நிறைவேற்று சபையின் பணிகளை தொடர்வதா என்பது குறித்து ஆளும் கட்சியிலும் வேறுதரப்பினரும் ஆராய்ந்து வருவதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.
அரசின் 100 நாள் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆலோசனை பெற்றுக் கொள்ளும் நோக்கில் தேசிய நிறைவேற்றுச் சபை நிறுவப்பட்டது. 100 நாள் திட்டத்தை நடைமுறைப்படுத்த தேசிய நிறைவேற்றுச் சபை நிறுவப்பட்டதாகவும், [illegible] தொடர்ந்தும் பணிகளை முன்னெடுக்க வேண்டியதில்லை என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.
19ஆம் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இதுவரையில் தேசிய நிறைவேற்றுச் சபை கூடவில்லை என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.
தொடர்ந்தும் கூடுவதா இல்லையா என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவும் இல்லை, அறிவிக்கப்படவுமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.
எனினும், 'சுயாதீன ஆணைக் குழுக்கள் நிறுவப்பட்டு, தகவல் அறிந்து கொள்ளும் சட்டம் நிறைவேற்றப்படும் வரையில் தேசிய நிறைவேற்றுச் சபை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென சில உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

பக்கம்-03

# உயர் பாதுகாப்பு வலயத்தில் மாற்று வீதி அமைப்பதற்கு 27 ஏக்கர் காணி தேவை

## விடுவிக்குமாறு இராணுவத்திடம் யாழ். அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 11

வல்லை – அராலி பிரதான வீதியில், உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் அடங்கும் வீதிக்குப் பதிலாக மாற்று வீதி அமைப்பதற்கு, இராணுவத்தினர் மேலும் 27 ஏக்கர் காணியை விடுவிக்க வேண்டும் என்று, யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இராணுவத்தினரிடம் நேரடியாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

வல்லை – அராலி பிரதான வீதியில் சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான வீதி இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலய எல்லைக்குள் அகப்பட்டுள்ளது. இதனால், அண்மையில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட பலாலி தெற்கு மற்றும் வயாவிளான் கிழக்கு மக்கள், தமது



தேவைகளை நிறைவு செய்ய தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு வருவதற்கு சுற்று வீதிகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அகப்பட்ட வீதிக்குப் பதிலாக மாற்று வீதியை அமைப்பதற்கு இராணுவத்தினர் முற்பட்டுள்ளனர். இதன்போது பொதுமக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளையும் அவர்கள் எடுப்பதற்கு முயற்சித்துள்ளனர். வெள்ளிக்கிழமை காலை, தமது பெக்கோ இயந்திரங்களின் உதவியுடன் தனியார் காணிகள் ஊடாக மாற்று வீதி அமைப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் அந்தப் பகுதிக்குச் சென்று இராணுவத்தினரின் நடவடிக்கையை நிறுத்துமாறு கேட்டுள்ளார். அங்கு திரண்ட பொதுமக்களும், தனியார் காணி ஊடாக வீதி அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அதனை அடுத்து இராணுவத்தினர் குறித்த நடவடிக்கையைக் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை, யாழ்.மாவட்டச் செயலகத்தில் வெள்ளிக் கிழமை காலை மீள்குடியமர்வு தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் போது, வல்லை – அராலி வீதிக்கு மாற்று வீதி அமைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. மாற்று வீதி, பொதுமக்களின் காணிகள் ஊடாக அமையாமல் இருக்க வேண்டுமாயின் இராணுவத்தினர் இன்னமும் 27 ஏக்கர் காணியை விடுவிக்க வேண்டியுள்ளது.

இராணுவத்தினர் அவ்வாறு 27 ஏக்கர் காணியை விடுவித்தால், மாற்று வீதி அமைக்கப்படும் என்று தெரிவித்த அரச அதிபர் நா.வேதநாயகன், இது தொடர்பில் கலந்துரையாடலில் கலந்து கொண்ட இராணுவ அதிகாரியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (வ-5)

## மருத்துவமனை உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம், மே 11

யாழ்.போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் ஆண் தாதிய உத்தியோகத்தர்கள் இருவருக்கு, உண்பதற்காக பழைய ரொட்டிகளை கொடுத்த மருத்துவமனை உணவக உரிமையாளருக்கு எதிராக பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் யாழ் நீதிவான் நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த 2 தாதிய உத்தியோகத்தர்கள் உண்பதற்காக ரொட்டிகளைக் கேட்டபோது குளிர் சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த ரொட்டியை உணவக உரிமையாளர் எடுத்துக் கொடுத்ததாகவும், ரொட்டிகள் பழுதடைந்து இருந்தமை தொடர்பாக தாதிய உத்தியோகத்தர்கள் வினவியபோது அவர்களை மரியாதைக் குறைவாக உணவக உரிமையாளர் பேசியதாகவும் முறையிடப் பட்டுள்ளது.

உணவக உரிமையாளரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை மருத்துவமனை உணவகத்தில் காணப்படும் சுகாதார சீர்கேடுகள் தொடர்பாக தீர்வு காணுமாறு ஏற்கனவே யாழ்.நீதிவான் நீதிமன்றால் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-103)

## இனந்தெரியாதோரால் காணி வேலி தீயிட்டு எரிப்பு



தென்மராட்சி, மே 11

வடமாகாண முதலமைச்சர் வருகை தரவிருந்த வேளையில் அந்தப் பகுதியில் உள்ள காணியின் வேலி தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் அண்மையில் மிருசுவில் உசனில் இடம் பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள பொது அமைப்பின் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மாகாண முதலமைச்சர் வருகை தரவிருந்தார். இதனையொட்டி அந்தப் பகுதி வீதிகள் முழு வீச்சில் மக்களால் துப்புரவு செய்யப்பட்டன.

முதலமைச்சரை வரவேற்கும் பணியில் ஈடுபட்டவரின் வளவு வேலி இரவு இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டது. வேலிக்கு வைத்த தீ வளவு முழுவதும் பரவியதால் வளவில் காணப்பட்ட பயன்தரு மரங்கள் எரிந்து சேதமடைந்துள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக காணி உரிமையாளர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.

வேலிக்கு தீயிட்டவரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வேலிக்கு தீயிட்டமை திட்டமிட்ட செயலா அல்லது தற்செயலானதா என்று பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## உணவகங்கள், வெதுப்பகங்கள் குருநகரில் திடீர் பரிசோதனை



யாழ்ப்பாணம், மே 11

உணவு பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு குருநகர் பிரதேசத்தில் உள்ள உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்கள் மீது திடீர் சோதனை மேற்கொள்ளப் பட்டதோடு அவற்றின் தரச் சான்றிதழ்களும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன என்று மாநகர சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

குருநகர் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.ராஜா தலைமையில் சென்ற சுகாதார குழுவினர், பிரதேசத்தில் உள்ள சகல உணவு கையாளும் நிலையங்கள், தேநீர்க் கடைகள், வெதுப்பகங்கள் மீது சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

சகல நிலையங்களிலும் உள்ள எச் 800 படிவம் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டதோடு அவற்றுக்கான தரச்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

போதிய சுகாதார வசதி இன்றி இருந்த நிலையங்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன் அவை ஒரு மாதகாலத்துக்குள் சீர் செய்யப்படவேண்டும் என்றும் அவகாசம் வழங்கப்பட்டது. ஒரு மாதத்துக்குள் சுகாதார நடைமுறையைப் பின்பற்றாத நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

குறித்த நிலையங்களில் பயன்படுத்தப்படும் குடிதண்ணீரும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

அனேகமான நிலையங்களில் பயன்படுத்தப்படும் குடிதண்ணீர் மாதிரியை மிகவும் பாதுகாப்பாக சுகாதாரப் பகுதியினர் எடுத்துச் சென்றனர்.

இந்த உணவு பாதுகாப்பு மாதத்தில் இந்தப் பிரதேசத்தில் உள்ள ஏனைய வர்த்தக நிலையங்களிலும் சுகாதார நடைமுறை சோதனைக்கு உட்படுத்தப் படும். சுகாதார வசதி இன்றி காணப் படும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைமேற்கொள்ளப்படும். (வ-17)

## சாவகச்சேரி நகரசபையினர் நடத்தும் நடமாடும் சேவை

தென்மராட்சி, மே 11

சாவகச்சேரி நகரசபையினர் நடமாடும் சேவைகள் மூலம் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து தீர்ப்பதற்கான செயற்றிட்டத்தை ஆரம்பிக்க வுள்ளனர்.

இதன் முதலாவது நிகழ்வை எதிர் நாளையும் நாளை மறு தினமும் நகரசபையின் நான்காம் வட்டாரமான கல்வயலில் ஆரம்பிக்க வுள்ளனர்.

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள பொது நோக்கு மண்டபத்தில் இந்த நடமாடும் குறை கேள் சேவை நிலையம் இரு தினங்களும் இடம்பெற வுள்ளது. சபை உறுப்பினர் த.சுதர்சனின் ஏற்பாட்டில் நடைபெறும் நடமாடும் சேவையில் வட்டாரத்தில் வரியிறுப்பாளர்களுக்கு ஏற்படும் குறைகளைத் தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆதனவரி, வியாபார வரி, சைக்கிள் இலக்கத் தகடுகள், நாய்களுக்கான இலக்கத் தகடுகள் போன்றவை அறவிடும் விசேட கருமபீடமும் இயங்க வுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (வ-9)

## தொலைக் காட்சியில் தவறான செய்தி; பணிப்பாளருக்கு பிடியாணை

கொழும்பு, மே 11

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு நேரம் தொடர்பாக தவறான செய்தியை ஒளிபரப்பியதாகத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக் கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதி பதித்தேர்தலில் வாக்களிப்பு நேரம் மாலை 6.30 மணிவரை நீடிக்கப்பட்டதாகத் தெரிவித்து குறித்த தொலைக்காட்சியில் செய்தி வெளியிடப்பட்டது. அதனை உண்மை என்று நம்பி , நேரம் தாழ்த்தி தான் வாக்களிக்கச் சென்ற போது வாக்களிப்பு நிறைவுபெற்றிருந்ததாகவும் இதனால் தனது வாக்களிக்கும் உரிமை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து பொதுமகன் ஒருவர் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு மீதான விசாரணைக்கு சமுகமளிக்குமாறு குறித்த ஊடகத்தின் பணிப்பாளருக்கு நீதிமன்றினால் அழைப்புக்கட்டளை பிறப்பிக் கப்பட்டிருந்தது. எனினும் அவர் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கத் தவறியமையால் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (வ-103)

## மறு அறிவித்தல் வரை பற்சிகிச்சைப் பிரிவு இயங்காது

தென்மராட்சி, மே 11

சாவகச்சேரி மருத்துவமனை பற்சிகிச்சைப் பிரிவு மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

அந்தப் பகுதிக்கு பொருத்தப்பட்டிருந்த மின் ஆளி (பியூஸ்) நேற்று முன்தினம் எரிந்துள்ளதால் மீண்டும் பொருத்தப் படும் வரை மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே மருத்துவமனை பற் சிகிச்சைப் பிரிவின் மின் ஆளி எரிந்ததால் சீர் செய்யும் வரை பிரிவு மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட போது உரிய பகுதியினருக்கு அறிவித்துள்ளதாகவும் புதிய மின் ஆளி பொருத்தும் வரை பற்சிகிச்சைப் பிரிவு இயங்காது என்றும் தெரிவிக் கப்பட்டது.

மருத்துவமனைகளில் மின்சாரம் தொடர்பான பாதிப்புக்கள் ஏற்படும் போது [illegible] சுகாதாரத் திணைக்களத்திலிருந்து தொடர் புடைய உத்தியோகத்தர் வரும் வரை காத்திருக்க வேண்டிய நிலை



நோயாளர் களுக்கு ஏற்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள ஆதார மருத்துவமனை களுக்கும் மின்னியலாளர்கள் அல்லது மின்னிணைப்பாளர்களை சுகாதாரத் திணைக்களம் நியமித்தால் அந்தப் பிரதேசத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளில் ஏற்படும் மின் பாதிப்புக்களையும் சீர் செய்து நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க முடியும் என்று நோயாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்விளநீர் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 11

யாழ்.குடாநாட்டில் செவ்விளநீருக்குத் தட்டுப்பாடும் பற்றாக் குறையும் நிலவி வருகின்றது. தற்போது ஒரு செவ்விளநீர் 70 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது.

குடாநாட்டில் உற்பத்தியாகும் செவ்விளநீர் போதியளவு சந்தைக்கு வராததால் தெற்கில் இருந்தே அதிகளவில் அவை எடுத்துவரப்படுகின்றன.

தற்போதைய கடும் வெப்பம் வறட்சி காரணமாக மக்கள் செவ்விளநீரை கூடுதலாகப் பயன் படுத்தி வருகின்றனர்.

குடாநாட்டில் இம்முறை செவ்விளநீர் மரங்களின் காய்க்கும் தன்மை குறைந்ததால் அதற்குப் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. (வ–17)

# சைக்கிளில் சென்ற இரு பெண்களை பின்தொடர்ந்து துணிகரக் கொள்ளை

வலி.மேற்கு,மே 11



பட்டப்பகலில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு இளம் பெண்களை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்த வாலிபர் ஒருவர் சைக்கிள் கூடையில் வைக்கப்பட்டிருந்த பணம், தொலைபேசி உட்பட தங்க நகைகள் அடங்கிய கைப் பையைப் பறித்துக் கொண்டு மின்னல் வேகத்தில் ஓடி மறைந்து விட்டார்.

இந்தத் துணிகரமான சம்பவம் வழிப்பறிக்கு பெயர்போன இடமாகக் கருதப்படும் மானிப்பாய் மத்திய சந்தைக்கு முன் பாக உள்ள மூத்ததம்பி வீதியில் இடம்பெற்றுள்ளது. மானிப்பாயில் இருந்து சுதுமலை நோக்கி பிற்பகல் 3 மணியளவில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு பெண்களை மோட்டார் சைக் கிளில் பின் தொடர்ந்த வாலிபர் ஒருவர் மேற்படி வீதியில் வைத்து மக்கள் நடமாட்டம் இல்லாத சமயம் பார்த்து சைக்கிள் கூடையில் வைக்கப்பட்டிருந்த பணம், கைத்தொலைபேசி,தங்கநகைஅடங்கிய கைப்பையை எடுத்துக் கொண்டு மறைந்து விட்டார். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (வ–115)

## குமுதினிப்படகை 6.30 மணிக்கு சேவையில் ஈடுபடுத்துங்கள்

யாழ்ப்பாணம், மே 11

நெடுந்தீவில் இருந்து காலை 6.30 மணிக்கு குமுதினிப் படகு சேவையில் ஈடுபட வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். தற்போது காலை 6.30 மணிக்கு தனியார் படகுகளே சேவையில் உள்ளன என்றும் குமுதினிப் படகு காலை 7.15 மணிக்கே அங்கிருந்து புறப்படுவதாகவும்–

நெடுந்தீவுக்கான படகுச் சேவையில் அரச படகுகள் இலவச சேவையை மேற்கொள்வதால் அதிகாலை 6.30 மணிகுப் பயணிக்கும் மக்கள் தனியார் படகுகளில் கட்டணம் செலுத்தியே செல்லவேண்டியுள்ளதால் கூடுதலான மக்கள் அரசின் சலுகையைப் பயன்படுத்த வாய்ப்பற்றவர்களாகவே உள்ளனர்.

முதலாவது சேவையை அரச படகு மேற்கொண்டால் அது மக்களுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் தனியார் படகுகள் அரச படகைத் தொடர்ந்து தமது சேவைகளை ஆரம்பிக்கலாம் என்றும் அதற்கு ஏற்றாற்போல் படகுச் சேவைக்கான நேர அட்டவணையை அதிகாரிகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ–7)

# நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குக

### மாவை எம்.பியிடம் நேரில் கோரிக்கை விடுத்தனர்

### வலி.வடக்கு, வலி. கிழக்கில் மீளக்குடியமர்ந்துள்ளோர்

யாழ்ப்பாணம், மே 11

காணிகளைத் துப்புரவு செய்வதால், தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை இருக்கின்றது. மீண்டும் தொழில் நடவடிக் கைகளுக்குச் செல்லும் வரையில் நிவாரண வசதிகளை ஏற்படுத்தித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர் வலி. வடக்கு மற்றும் வலி.கிழக்கில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா, விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினார். இதன்போதே, மக்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

வளலாயில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் குடியமர்ந்துள்ள மக்கள், கடற்றொழில் செய்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். இராணுவத்தினர் அமைத்த மண் அணைகள் இன்னமும் அகற்றப்படவில்லை. இதனால், தமது கடற்றொழில் நடவடிக் கைகள் மேற்கொள்வதற்கு இடையூறாக இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். அத்துடன் இறங்குதுறையை ஆழமாக்குவது தொடர்பிலும், அவர்கள் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினருக்குச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

25 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளமையால் சகல பிரதேசங்களும் காடாகியுள்ளன. இதனைத் துப்புரவு செய்து வருவதாகவும், இதனால் முழு நேரத்தையும் இதிலேயே செலவிட வேண்டியிருப்பதால் தமது அன்றாடத் தொழில் நடவடிக்கைகளுக்குச் செல்ல முடியாமல் இருப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர். எனவே தினசரி வருமானம் இல்லாமல் இருக்கின்றது. துப்புரவு நடவடிக்கைகள் முடியும் வரையிலாவது நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், வீதிகள் திருத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், இதனால் இங்கு துப்புரவு செய்வதற்கு வந்து செல்வதற்கே சிரமமாக இருக்கின்றது என்பதையும், போக்குவரத்து வசதிகள் எவையும் இல்லை என்றும் அந்த மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சேனாதிராசாவிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி, மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது மக்களிடம் தெரிவித்தார். (வ–5)

## பச்சிலைப்பள்ளி இறங்குதுறை விரைவில் புனரமைக்கப்படும்

பளை,மே11

கடற்றொழிலாளர்களின் நலன் கருதி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள இறங்குதுறை 15லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப் படவுள்ளது. இதற்கான நிதியை கடற்றொழில் அமைச்சு வழங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் புலோப்பளை கிழக்கில் 60 மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அவர்கள் பயன் படுத்தி வரும் அல்லிப்பளையிலுள்ள இறங்குதுறை சேதமடைந்த நிலையில் உள்ளதால் மீனவர்கள் தொழில் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதுடன் வள்ளங்களைக் கட்டமுடியாமல் திண்டாடுகிறார்கள்.

அவர்களின் நிலை குறித்து புலோப்பளை கிழக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத்திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து அல்லிப்பளை இறங்கு துறையைப் புனரமைப்பதற்கு கடற்றொழில் அமைச்சு 15லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. (வ–115)

# மந்துவில் பகுதியில் நடைபெற்ற வாழ்வாதார உதவி வழங்கல்

வரணி, மே 11

வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்கள் மற்றும் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மந்துவில் றோ.க.தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் வே.இரத்தினசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு குறித்த உபகரணங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் நான்கு குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டதுடன் 4 பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு கற்பித்தல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா மற்றும் உபதலைவர் க.யோகராசா, றோட்டேரியன் கே.ஜெபநேசன், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் வே.இரத்தினசிங்கம் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

தையல் இயந்திரங்கள் றோட்டரிக் கழகத்தின் அனுசரணையுடனும், கற்றல் உபகரணங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி உதவியுடனும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ–122)

# இளம் எழுத்தாளரால் மீண்டும் புத்துயிர்பெறும் வரலாறுகள்

முல்லைத்தீவு, மே 11

முல்லை மாவட்டத்தில் வரலாறுகள் மறைந்து செல்லும் இந்த வேளையில், இளம் சந்ததியினரில் புதிய எழுத்தாளர்கள் உருவாகி வரலாறுகளை மீண்டும் புதுப்பித்து வருகின்றனர்.

அன்றைய காலகட்டங்களில், எழுத்தாளர்களான முல்லை மணி வே.சுப்பிரமணியம், பாலமனோகரன், அருணா செல்லத்துரை, முல்லையூரான் க.சிவராசா, மதுபாலன் என்பவர்கள் மாவட்டம் சார்ந்த வரலாறுகளைப் படைத்தனர். நிலக்கிளி, குமாரபுரம் நந்தாவதி கனவுகள் கலைந்தபோது, தாய் வழித் தாகங்கள், மல்லிகை வனம், மழைக் கோலம், கமு கஞ்சோலை, வன்னியர்திலகம், புதிய அலைகள், ஈழம் எழுந்து வருகின்றது, பண்டார வன்னியன் போன்ற நாவல்களைப் படைத்தனர். ஆனால் காலப்போக்கில் அவர்களின் படைப்புக்கள் வெளி வருவது அருகிய இந்த வேளையில், இளம் தலைமுறையினர் கிராமங்களின் வரலாறுகள், ஆலயங்களின் வரலாறுகள், பண்டைய மக்களின் வாழ்க்கை முறையும் இன்றைய மக்களின் வாழ்க்கை முறையும் போன்ற நாவல்களைப் படைத்து இறுவட்டுக்களையும் வெளியிடுகின்றனர். அத்துடன் மூதாதையர்களிடம் சென்று தகவல்களைத் திரட்டி மறைந்து செல்கின்ற வரலாறுகளை மீண்டும் புதுப்பித்து வருகின்றனர்.

மூதாதையர் காலத்தில் பாடி ஆடி வந்த நாட்டார் பாடல்களையும் வெளியிடுவதில் ஆர்வமாக [illegible]னர். சிலம்பு கூறல், கோலாட்டப் பாட்டு, கும்மிப்பாட்டு, அருவிவெட்டுப் பாட்டு, ஒப்பாரி போன்ற பாடல்களையும் வெளியிட்டு வருகின்றனர். மறைந்த வரலாறுகளை வெளிக் கொண்டு வரும் எழுத்தாளர்களுக்கு ஊக்கமளித்து உதவுவது ஒவ்வொருவரினதும் கடமையாகும். தற்போது வன்னியூர் செந்தூரன் (இளம் தலைமுறையினர்) என்பவரின் நாவல்கள் மக்களின் மனதில் இடம் பிடித்துள்ளன. மறைந்து கொண்டிருக்கும் வரலாறுகளை மீண்டும் நூல் வடிவில் வெளியிட்டு வரும் எழுத்தாளர்கள் மீண்டும் மீண்டும் வரலாறுகளைப்படைத்து இளம்தலைமுறையினருக்கு உதவ வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். (வ–500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்களைச் சுரண்ட அனுமதிக்க முடியாது

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 11

கொக்கட்டிச்சோலையில் வெளி மாவட்ட சிங்கள மீனவர்கள் இறால் வளர்க்க அனுமதிக்க முடியாது என்று தமிழ் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தி லேயே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அக்கூட்டத்தில் பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் மண்முனை வாவியை அண்டிய முதலைக்குடா மகிழடித்தீவு கிராம சேவையாளர் பிரிவுகளில் வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்கள் இறால் பண்ணை களை அமைப்பதை உடன்நிறுத்தி அப்பகுதியில் உள்ள மக்கள் இறால் பண்ணைகளை நடாத்த அனும திக்க வேண்டும் எனவும் வேண்டு கோள் விடுத்தார்.

கடந்த மஹிந்த அரசின் காலத்தில் முன்னாள் பிரதி அமைச்சர் முரளி தரன் சிலாபத்தில் உள்ள சிங்கள வர்களுக்கு எந்தவித முறையான அனுமதிகளுமின்றி பட்டிப்பளை பிரதேச செயலாளரின் அனும தியை முறைகேடான வகையில் கள்ள கையொப்பம் இட்டு பத்திரம் தயாரிக்கப்பட்டு இறால் பண்ணை கள் ஏற்பாடு செய்து கொடுக்கப் பட்டது.

இது ஊழல் நடவடிக்கையாகும். இனிமேல் கொக்கட்டிச் சோலைப் பகுதியில் உள்ளவர்கள் இறால் பண்ணைகளை அமைக்க முன்வரு வோருக்கு மாத்திரமே அனுமதி வழங்கவேண்டும். வெளிமாவட் டத்தை சேர்ந்த சிங்களவர்கள் எமது வளத்தை சுரண்ட எக்கார ணம் கொண்டும் அனுமதிக்க முடி யாது என்று நாடாளுமன்ற உறுப் பினர் மேலும் தெரிவித்துள்ளார்.(ற)

# பதவிக்குச் சோரம் போகாதது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



மட்டக்களப்பு, மே 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடு தலைப்புலிகளின் முக்கியஸ்தர்களா கவும் பொறுப்பாளர்களாகவும் இருந்தவர்கள் அரசிடம் கைக்கூலி களாக மாறியுள்ளனர். தமது உற வினர்களின் பெயரில் வெளிநாட்டு வங்கிகளில் பணம் வைப்புச் செய் துள்ளதுடன், சொத்துக்களையும் சேகரித்து வைத்துள்ளனர். – என்று நாடாளுமன்ற உறுப்பினர் சீனித் தம்பி யோகேஸ்வரன் தெரிவித் துள்ளார்.

இறுதியாக எமது இனத்திற்காக குரல் கொடுத்தவர்களை அவர்க ளுக்கு ஆதரவு வழங்காமையால் கொலை செய்தமை மற்றும் கப்பம் பெற்றமை தொடர்பிலான தகவல்க ளைச் சேகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

செங்கலடி கரடியனாறு மணிப்புரம் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந் திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள்தமிழர்கள்.எமக்குநீண்டபாரம் பரிய வரலாறு இருக்கின்றது, தமிழர் களுக்கான நியாயமான தீர்வினை வழங்கவேண்டியகடமைதற்போதைய அரசுக்குக் காணப்படுகின்றது.

தமிழர்களாகிய நாம் தேசிய இன மாகவும், பூர்வீக இனமாகவும் இருக் கின்றோம். எமது பல போராட்டங் கள் இந்த மண்ணில் இடம்பெற்றது. தந்தை செல்வா அவர்களின் தலை மையில் அகிம்சைப் போராட்டங் களை நடத்தினோம், பல ஒப்பந்தங் கள் இந்த நாட்டின் வட, கிழக்கு பகுதி கள் தமிழர்களின் பூர்வீக பகுதிகள் என்பதனை தெளிவுபடுத்துகின்றன. ஆனாலும் அதனை பொய்யாக்க நாட்டில் இருக்கின்ற பேரினவாதி கள் முயற்சித்து கொண்டிருக்கின் றனர். ஆளும் கட்சியால் எடுக்கப் படும் தீர்மானங்களை எதிர்க்கட்சி எதிர்த்து வருகின்ற நிலையே நாட் டில் காணப்பட்டு வருகின்றது.

அகிம்சை ரீதியில் போராடி அதற்கு சரியான தீர்வு கிடைக்காத பட்சத் தில் எம்மீது கட்டவிழ்த்து விடப் பட்ட அநீதிகளுக்கு எதிராக எமது இளைஞர்கள் ஆயுத ரீதியில் போரா டினார்கள். 2009ஆம் ஆண்டு மே மாதத்துடன் இந்த ஆயுதப் போராட் டம் மௌனித்ததன் பின்னர் அதனை மேற்கொண்டு நடத்த வேண்டிய பாரிய பொறுப்பு எம்து மக்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்டது.

அந்த வகையில் 2010ம் ஆண்டு தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பின ராக தெரிவு செய்யப்பட்டு அன்றிலி ருந்து இன்றுவரை எமது மக்களுக் காகவே உழைத்துக் கொண்டிருக் கின்றோம்.

கடந்த மஹிந்தவின் அரசு எல்லாக் கட்சிகளையும் உடைத்தது. இலஞ் சம், அமைச்சுப் பதவிகளை காட்டி அனைவரையும் பிரித்தது. ஆனால் அதற்கெல்லாம் இடம்கொடுக்காத கட்சியாக எமது தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருந்தது. நாம் இவர் களின்- பின்னால் போயிருப் போமாக இருந்தால் அவர்களின் அத்தனை தியாகங்களும் கொச் சைப் படுத்தப்பட்டிருக்கும்.

ஆனால் எவ்வளவு தூரம் கடந்த அரசு எம்மை நசுக்கியும் அரசின் கையாளிகளும் நசுக்கியும் நாங் கள் தர்மத்திற்காக எமது மக்களுக் காக எமது கொள்கையில் மாறா திருக்கும் போது, எமது சகோதரர்க ளுடன் ஒன்றாக ஆயுதம் தூக்கிப் போராடியவர்கள் அரசின் சொகுசு வாகனங்கள், வாழ்க்கைக்காக, அமைச் சுப் பதவிகளுக்காக, கோடிக் கணக் காக உழைப்பதற்காக எமது இனத்தை விற்று சென்றார்கள்.

தற்போது இருக்கின்ற அரசு கூட எமக்கு அமைச்சுப் பதவி தருவதாக அழைத்தது. நாம் போயிருந்தால் அரசு விடுகின்ற தவறைக் கூட நாம் பார்த்துக் கொண்டிருக்கத்தான் வேண்டும். ஆனால் நாம் எமது மக் களின் அபிலாசைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று வந்த வர்கள் அதற்காக இனியும் நாம் குரல் கொடுத்துக் கொண்டுதான் இருப்போம் அதற்காக தொடர்ந் தும் நடவடிக்கைகளை மேற்கொள் வோம்."– என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வ ராசா, பா.அரியநேத்திரன் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற)

# உறுதியளித்ததை போன்று காணி உறுதிப் பத்திரம்
*– ரணில்*



கொழும்பு, மே 11

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசின் 100 நாள் வேலைத்திட்டத் தில் உறுதியளித்தது போல் தோட்ட தொழிலாளிகளுக்கு 7 பேர்ச் காணியுடன் வீடு அமைத்து காணி உறுதி பத்திரம் கொடுக்க முடிந்தது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று இடம் பெற்ற தொழிலாளர் தேசிய சங்கத் தின் பொன் விழாவில் கலந்து கொண்டு பெருந்தோட்ட தொழிலா ளர்களுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் வைபவத்தில் உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்த தாவது:–

இந்த வீடமைப்புத்திட்டம் இலகுவாக செய்வதற்கு அமைச்சர் திகாம்பரத் தின் ஒத்துழைப்பு பாராட்டுக்குரிய விடயம் எனவும் மலையகத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவி யுடன் அமைக்கவிருக்கும் வீடு களுக்கும் இலங்கை அரசின் மூலம் அமைக்க விருக்கும் வீடுகளுக்கும் காணி உறுதி பத்திரம் வழங்கப்படும் எனவும் கடந்த அரசில் இருந்த வர்கள் தோட்டத் தொழிலாளர் களை ஏமாற்றியது போல் இந்த அரசு ஏமாற்றப்போவதில்லை.

எதிர்வரும் தேர்தலின் பின் மலை யக பகுதிக்கு விஞ்ஞான பாட ரீதி யில் மலையகத்தில் கல்வி நட வடிக்கையை மேற்கொள்வதற்கும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ் வாதாரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ அவரது குடும்பத்துக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் செய் தது போல் இல்லாமல் இந்த அரசு மைத்திரிபால சிறிசேன தலைமை யில் பெருமளவில் சேவை செய் கின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்க ளுக்கு முதன்முறையாககாணிஉறு திப் பத்திரம் வழங்கியது அமைச் சர் திகாம்பரத்தின் உன்னதமான செயல்பாட்டினூடாகவே.– என் றார். (ற)

# ஒற்றுமையால் தேசிய ஐக்கியத்தை எதிர்காலத்தில் நிரூபிக்க வேண்டும்

## கிழக்கு மாகாண அமைச்சர் துரைராஜசிங்கம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 11

சிறுபான்மையின மக்கள் அனைவ ரும் ஒன்றிணைந்து சர்வாதிகா ரத்தை வீழ்த்தியதை போன்று எதிர் காலத்திலும் எமது ஒற்றுமையால் தேசிய ஐக்கியத்திற்கான பலத்தை நிரூபிக்க வேண்டும் – இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய, கால் நடை, மீன்பிடி, நீர்ப்பாசன, கூட்டு றவு அபிவிருத்தி அமைச்சர் கே. துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

ஏறாவூர் நகரில் நிர்மாணிக்கப்பட் டுள்ள கூட்டுறவு வைத்தியசாலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற் றும்போது தெரிவித்ததாவது:

நாம் மனச்சாட்சியோடு செயற்படு வோமேயானால் பிரிவினைகளை யும் தடைகளையும் அறுத்தெறிந்து பல நல்ல விடயங்களை சாதிக்க முடியும். நமது சிறுமைத்தனத்தின் காரணமாக நாம் பல்வேறு சோத னைகளுக்கு முகங்கொடுக்கின் றோம். இந்நிலை தொடரக்கூடாது. அதற்கு நாம் இடமளித்து விடவும் கூடாது. இந்த நாட்டில் சுதந்திரம் என்கின்ற வார்த்தை எப்பொழுது பேசப்படத் தொடங்கியதோ அன்றி லிருந்து சிறுபான்மை மக்களின் சுதந்திரமும் பறிக்கப்பட்டு விட்டது. வடக்கில் தந்தை செல்வா, கிழக்கில் காரியப்பர், அஷ்ரப் போன்ற பெரி யார்கள்; தமிழ், முஸ்லிம் மக்க ளின் ஒற்றுமையைக் கட்டிக் காக்க கடுமையாகஉழைத்தார்கள்.ஆனால், எங்கிருந்தோ வந்த சிலர் எங்க ளைப் பிரித்து துயரத்தில் ஆழ்த்தி இழப்புக்களை ஏற்படுத்தி விட்டுச் சென்று விட்டனர். அவற்றை நாங் கள் அடியோடு மறந்து அவற்றிலி ருந்து அறிவார்ந்த சில விடயங் களை பாடமாக எடுத்துக்கொண்டு, அடுத்த ஆக்கபூர்வமான நகர்வுக்கு ஆயத்தமாக வேண்டும். அதுதான் நல்லாட்சியின் பலாபலனாக இருக் கும். இந்த நாடு பன்மைத்துவ முள்ள நாடு என்பதைக் கேட்க நாம் ஏங்கித் தவித்தோம். அதை ஜனாதி பதி தனது தேசிய தின உரையில் தெளிவாகச் சொன்னார். இந்நாடு பெரும்பான்மையின மக்களின் விருப் பப்படி சிறுபான்மை இன மக்கள் வாழவேண்டும் என்கின்ற அடிமைத் துவ நாடு அல்ல. மாறாக பன்மைத்து வத்தையும் ஒவ்வொரு சமூகத்தா ரின் தனித்துவத்தையும் அங்கீகரிக் கின்ற பண்புகளைக் கொண்ட நாடா கும்.

நீண்ட காலத்துக்குப்பின் இவ்வா றான ஒருநிலை உருவாகியிருப் பதை சகித்துக்கொள்ள முடியாத சில விஷமிகள் அதனை குழப்ப நினைக்கின்றனர். அனைவரும் ஒன்றிணைந்து சர்வாதிகாரத்தை வீழ்த்தியுள்ளோம். அதேபோன்று எதிர்காலத்திலும் நாம் அவ்வா றானதொரு தேசிய ஐக்கியத்திற் காக எமது பலத்தை நிரூபிக்க வேண் டும்.மனிதனை,மதங்களோமொழியோ ஒரு போதும் பிரித்து வைத்த தில்லை. எங்களுடைய குறுகிய மனப் பாங்குகள்தான் மனிதர்களை பிரித் தாழுகின்றது.– என்றார். (ற)

# வாய்ப்புக்களை மாணவர்கள் பயன்படுத்த வேண்டும்

## வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் ஸ்ரீமோகனன் அறிவுரை

யாழ்ப்பாணம், மே 11

எதிர்கால இளம் தலைமுறையின ராகிய மாணவர்களுக்கு இன்றைய சூழ்நிலையில் வசதி, வாய்ப்புக்கள், கற்றல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள் ளன. இவ்வசதி வாய்ப்புக்களை மாணவர்கள் சரிவர பயன்படுத்திக் கொண்டு அறிவாற்றல் மற்றும் படைப்பாக்கத்திறன் உடையவர்க ளாக உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும் – இவ்வாறு வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் க.ஸ்ரீ மோகனன் தெரிவித்தார்.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் தெல்லிப்பழை பிரதேச கலாசார பேரவையின் ஏற்பாட்டில் நடை பெற்ற கவிதைப் பயிற்சிப் பட்டறை யில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை பிரதேச [illegible] நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எமது இயலுமைகளை மாற்றவர்க ளிடம் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இந்த கவிதைப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படுகின் றது. ஒவ்வொருவரும் தங்களுக் கிடையில் காணப்படுகின்ற திறன் களை வெளிக்கொண்டு வருவ தற்கு முயற்சி மேற்கொள்ள வேண் டும். இதற்காக ஏற்படுத்தப்படுகின்ற வசதிகளையும் சந்தர்ப்பங்களை யும் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எங்களுடைய காலம் யுத்த காலமாக காணப்பட்டது. இடப் பெயர்வுகளையும் அவலங்களை யும் சந்தித்தமையால் இத்தகைய வசதிகளும் வாய்ப்புக்களும் அப் போது இருக்கவில்லை. மாணவர்க ளாகிய உங்களுக்கு இன்றைய சூழ் நிலையில் வாய்ப்புக்கள் எற்படுத்தப் பட்டுள்ளன. அந்த வாய்ப்புக்களை சரிவர பயன்படுத்திக்கொண்டு உங் களது சிந்தனை ஆற்றலை வளர் த்துக்கொள்ள வேண்டும்."– என் றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பெண்கள் சாமர்த்தியமான பேச்சின் மூலம் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். மாணவர்களுக்கு கல்வி, விளையாட்டில் இருக்கும் போட்டிகள் நீங்கும்.

**இடபம்:** நீங்கள் பயமின்றி எந்த காரியத்திலும் இறங்கலாம். அவசரமாக எதையும் செய்யத் தோன்றும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் எல்லா அனுகூலமும் கிடைக்கப்பெறும்.

**மிதுனம்:** தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் திட்டமிட்டுச் செயற்படுத்துவது வளர்ச்சிக்கு உதவும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும்.

**கடகம்:** குடும்பத்தில் இருப்பவர்களுடன் தன்மையாகப் பேசுவது நல்லது. பிள்ளைகளுக்காகச் செய்யும் வேலைகளில் தடை ஏற்படலாம். கலைத்துறையினருக்கு நன்மைகள் நடக்கும் காலகட்டம்.

**சிங்கம்:** எந்தக் காரியத்திலும் அவசரம் காட்டத் தோன்றும். நிதானமாகச் செய்தால் வெற்றி நிச்சயம். வீண் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி:** தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். எனவே எதிலும் மிகவும் கவனத்துடன் ஈடுபடுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக்கை தேவை.

**துலாம்:** கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. மற்றவர்களுக்கு உதவி செய்யப்போய் தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரலாம். கவனம் தேவை.

**விருச்சிகம்:** சிறிய வேலையையும் செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கலைத் துறையினருக்கு எதிர்பார்த்த வாய்ப்புகள் வந்து சேரும். எல்லாவிதமான முன்னேற்றமும் வந்து சேரும்.

**தனுசு:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். உத்தி யோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறன் அதிகரிக்கும்.

**மகரம்:** குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். திருமணம் தொடர்பான விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவும்.

**கும்பம்:** தொலைதூர தகவல்கள் நல்ல தகவல்களாக வரும். கடினமான காரியங்களையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். மனதில் இருந்த குழப்பம் நீங்கி திருப்தி நிலவும்.

**மீனம்:** தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாள்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும்.



# அட இதுக்காக இப்படியா!

மெக்சிகோவில் அடுத்த மாதம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. ரபெல்லா ஒரொஸ்கொ (வயது – 47) என்ற பெண் அங்குள்ள ஒரு மாவட்டத்தில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட மனுதாக்கல் செய்திருந்தார்.

அவர் தனது தேர்தல் செலவு தொடர்பான விவரங்களைக் குறிப்பிட வில்லை, என்று கூறி மெக்சிக்கோ தேர்தல் ஆணையம் அவரது வேட்பு மனுவை தள்ளுபடி செய்தது.

தனது மனுவை வேண்டுமென்றே தள்ளுபடி செய்த தேர்தல் ஆணையத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக ரபெல்லா தேர்தல் ஆணைய அலுவலகத்திற்கு எதிராக தன்னைத் தானே சிலுவையில் அறைந்து கொண்டு போராட்டம் நடத்தியுள்ளார்.

அட இதுக்காக இப்படியெல்லாமா செய்வாங்க...

# குட்டிச் சலவைக்காரன்



கனடாவைச் சேர்ந்த ஒரு நிறுவனம் சிறியரக சலவை இயந்திரத்தைத் தயாரித்துள்ளது.

7 கிலோ எடை கொண்ட இந்த இயந்திரத்தை கையாளுவது மிக இலகு. ஒரு முறை சுத்தம் செய்ய 10 லீற்றர் தண்ணீர் எடுத்துக் கொள்ளும்.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்....

டேய்! சோமு! நீ சின்னப் பையன், அதனால் தான் இருட்டில் மாடிக்குப் போகப் பயப்படுறாய்.

நான் ஒன்னும் பயப்படேல்ல.

பொய் சொல்லாதடா. உன் முகத்தைப் பார்த்தாலேயே பயம் தெரியுதே.

நீ வேணும்னா என் கூட வா, நான் சிறிது கூட பயப்படவில்லை என்று உனக்கே தெரியும்.

# நாய்களுடன் செல்பிக்கு தடை



சுவிற்சர்லாந்தில் உள்ள வலஸ் பனிமலைகளில் நாய் களுடன் சேர்ந்து செல்பி படம் எடுக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

வலஸ் பகுதியில் உள்ள ஸெர்மட் என்ற இடம், பனிச் சறுக்குக்கு மிகவும் பிரபலமானது. இங்கு பனிச்சறுக்கு மற்றும் சுற்றுலாவுக்கு வருபவர்கள் செய்ன்ட், பெர்னார்ட் போன்ற தங்களின் உயர் ரக நாய்களுடன் செல்பி படங்களை எடுத்துக்கொள்வார்கள். இந்த உயர் ரக நாய்கள் மீட்புப் பணிகளில் பெரிதும் உதவி செய்வன. அவற்றுடன் சேர்ந்து பல கோணங்களில் செல்பி எடுக்கும்போது நாய்கள் பெரும் சித்திர வதைக்கு உள்ளாக்கப்படுகின்றன.

மிகுந்த குளிர் உள்ள இந்தப் பகுதியில் நாய்களை மணிக் கணக்கில் உணவில்லாமல் நிற்கவைத்து செல்பி எடுக்கும் போது அவற்றின் உடல்நலம் பாதிக்கப்படுகின்றது. இதனை யடுத்தே, இந்தப் பகுதியில் நாய்களுடன் இணைந்து செல்பி எடுப்பதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது.



# பேயாக வருகிறார் ஹன்சிகா

சுந்தர்சியின் அரண்மனை – 2 படத்திலும் பேயாக நடிக்கவுள்ளார் ஹன்சிகா. அரண்மனை, படத்தில் வினய், சந்தானம், ஹன்சிகா, லட்சுமிராய், அண்ட்ரியா உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். இந்தப் படம் கடந்த ஆண்டு வெளியாகி மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது. இந்த வெற்றியைத் தொடர்ந்து அரண்மனை படத்தின் இரண்டாம் பாகத்தை எடுக்கவுள்ளார் சுந்தர்.

இதில் சித்தார்த் நாயகனாகவும் திரிஷா நாயகியாகவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. ஹன்சிகா இந்தப் படத்தில் இல்லை என்று கூறப்பட்டது. ஆனால் இப்போது ஹன்சிகாவும் நடிக்கவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை உறுதி செய்த ஹன்சிகா கூறுகையில், நான்காவது முறையாக என் மனம் கவர்ந்த இயக்குநர் சுந்தர்சியுடன் இணைகிறேன். மீண்டும் அரண்மனை, [illegible] தெரிவித்துள்ளார்.

[illegible] உள்ள சுந்தர்சியின் மனைவி குஷ்பு, நீ இல்லாமல் இந்தப் படம் முழுமை அடையாது, என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அபிவிருத்தித் திட்டத்தை செப். 30 இற்குள் நிறைவேற்றுக

## கிராம அபிவிருத்திக்கான மக்கள் குழுவிடம் வேலணைப் பிரதேச செயலர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 11

நூறுநாள் விசேட அபிவிருத்தித் திட்டத்துக்கு இணைந்ததாக கிராமங்களை அபிவிருத்தி செய்யும் 2015 இற்கான நிகழ்ச்சித்திட்டம் அனைத்தையும்எதிர்வரும்செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னதாக நிறைவேற்றுமாறு கிராம அபிவிருத்திக்கான மக்கள் குழுவிடம் வேலணைப் பிரதேச செயலர் மஞ்சுளா தேவி சதீசன் கேட்டுள்ளார்.

ஒவ்வொரு வேலைத்திட்டம் தொடர்பான முன்னேற்ற அறிக்கையை ஒவ்வொரு மாதமும் 2 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும் படியும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போதும் வேலைத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட நிறைவேற்று நிறுவனங்கள் ஊடாக காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் நிதிப் பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கு அமைவாக நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை சமூக மட்ட அமைப்புக்களுக்கு வழங் குவதற்கு முன்னுரிமையளிப்பதுடன் இதன் மூலம் பெறுமதி சேர்வரியை தங்கள் செயற்றிட்டத்துக்குப் பயன்படுத்த முடியும்.

வேலைத்திட்டங்களுக்குரிய ஒப்பந்தங்களை மேற்கொண்ட பின்னர் ஒவ்வொரு வேலைத்திட்டமும் ஒப்பந்தம் செய்யப்பட்ட அமைப்புக்களின் விவரம் அவர்களின் தொடர்பு இலக்கங்கள் குறித்த விவரங்களைச் சமர்ப்பிக்குமாறும்– அனுமதிக்கப்பட்ட திட்டங்களில் எதுவித மாற்றங்களும் எனது எழுத்து மூலமான முன் அனுமதியின்றி மாற்றப்பட முடியாது என்றும் இந்த வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக ஏதேனும் தடைகள் அல்லது காலதாமதங்கள் காணப்படுமாயின் அதன் விவரங்களை உடன் அறியத்தரும் படியும் கேட்டுள்ளார்.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் நூறுநாள் விசேட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபை 14 திட்டங்களையும், பிரதேச செயலகம் நான்கு திட்டங்களையும், கல்வித் திணைக்களம் 7 திட்டங்களையும், நீர்ப் பாசனப் பகுதி 3 திட்டங்களையும் வீதி அபிவிருத்தித் திணைக் களம், சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தலா ஒவ்வொரு திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளன.

(வ–7)

# நீர்வேலி மேற்கில் பொது மண்டபம் அமைக்க நடப்பட்டது அடிக்கல்

யாழ்ப்பாணம், மே 11

நீர்வேலி மேற்கில் கிராம அலுவர் பிரிவில் பொது மண்டபங்களோ, பாடசாலை மண்ட பங்களோ இல்லாததால் அந்தப்பகுதியில் பொது நிகழ்வுகளோ, பொதுக் கூட்டங்களோ நடத்த இடமின்றிப் பொதுமக்கள் பெரிதும் அசௌகரியங்களை அனுபவித்து வந்துள்ளனர். இதைக் கருத்திற் கொண்டு நீர்வேலி மேற்கில் கிராம அபிவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டு அவர்களின் முயற்சியால் காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு அந்தக் காணியில் பொது நோக்கு மண்டபம் ஒன்று அமைக்க அத்திபாரமிடப்பட்டுள்ளது.

மேற்படி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ.சிவஞான சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்ட மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கௌரவ விருந் தினராகக் கலந்து கொண்டு சித்திரா பௌர்ணமி தினத்தன்று அத்தி பாரக் கல்லை நட்டார். சுமார் 65X25 அளவு கொண் டதாக இருமாடியில் அமைய வுள்ள குறித்த கட்டடத்தில் கிராம அலுவலர் அலுவலகம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம், குடும்பநல உத்தியோகத்தர் அலுவலகம், முன்பள்ளி என்பன கீழ் மாடியிலும், மா நாட்டு மண்டபம் மேல் மாடியிலும் அமைக்கப்படவுள்ளதாகத் தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் க.துரைசிங்கம், மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன் உட்பட பலர் நிகழ்வில் கலந்து கொண் டனர்.

அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு 10 லட்சம் ரூபா என ஒதுக் கப்பட்ட நிதியிலிருந்து குறித்த மண்டப வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் அச்சுவேலி இராசவீதியின் மேற்குப் பக்கமாக கரந்தன் சந்திக்கு அண்மையில் இந்த மண்டபம் அமையவுள்ளது.

(வ–110)

# புதிய அரசு ஏற்படுத்தும் இணைந்த பொறிமுறை பொறுப்புக்கூறலை தாமதமாக்கும் முயற்சியே

## நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் கூறுகிறார்

சென்னை, மே 11

எந்தவொரு சர்வதேச நீதி நடவடிக்கையையும் பிரதியீடு செய்யும் நோக்குடன் இலங்கையின் புதிய அரசால் உருவாக்கப்படும், உள்நாட்டு அல்லது இரண்டும் இணைந்த (உள்நாடு–சர்வதேசம்) பொறிமுறையானது சர்வதேச குற்றவியல் நீதி மன்றின் அழைப் பைத்திசை திருப்புவதற்கான அல்லது பொறுப்புக் கூறல் தொடர்பான எந்தவொரு காத்தி ரமான செயற்பாடுகளையும் தாமதப்படுத்துவதற்கான முயற்சியாகவே நோக்கப்பட முடியும்.

இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ள நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன், சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தால் விசாரணை மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும், கையெழுத்துப் பரப்புரையையும் தமிழகத்தில் ஆரம்பித்து வைத்துள்ளார்.

கையெழுத்துப் பரப்புரையை, நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கடந்த புதன் கிழமை இணைய வழி மூலம் தமிழகத்தில் ஆரம்பித்து வைத்துப் பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக சர்வதேச சமூகத்தின் ஆத ரவைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ்நாட்டு மக்களின் முனைப்பான பங்களிப்பு மிகவும் அவசியமானது.

ஈழத்தமிழ் மக்கள் இனப்படு கொலை செய்யப்பட்டமை தொடர்பாக சர்வதேச குற்ற வியல் நீதிமன்றம் விசாரணையை மேற்கொள்வதற்கு ஐ.நா. சபை அழுத்தம் கொடுக்க வேண்டும். அல்லது போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு தண்டனை வழங்குவதற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு ஒத்ததாக நம்பகமான சர்வதேச நீதிசார் பொறிமுறையை உருவாக்க வேண்டும்–என்று குறிப்பிட்டுள்ளார். (வ–5)

# நூறு நாள் வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடல்

சாவகச்சேரி, மே 11

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதி யிலுள்ள கிராமங்களில் 100 நாள் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தி வேலை களை முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் இன்று தொடக்கம் நாளை மறுதினம் வரை பிரதேச சபையின் உப அலுவலகர் ரீதியாக நடைபெறவுள்ளது.

முதலாவது கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு கைதடி உப அலுவலகத்திலும், தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு நாவற்குழி உப அலுவலக பொதுமண்டபத்திலும் நாளை செவ்வாய் காலை 9.30 மணிக்கு வரணி உப அலுவலகத்திலும், முற்பகல் 11 மணிக்கு கொடிகாமம் உப அலுவலகத்திலும், பிற்பகல் 2 மணிக்கு மிருசுவில் உப அலுவலகத்திலும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சரசாலை உப அலுவலகத்திலும் பிரதேச சபையின் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடை பெறவுள்ளன.

இந்தக் கலந்துரையாடல்களில் பிரதேச அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால், கிராம உத்தியோகத்தர்கள், சனசமூக பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் அனை வரையும் கலந்துகொள்ளுமாறு பிரதேச சபையின் செயலாளர் தி.தர்சினி தெரிவித்துள்ளார். கலந்துரையாடல்கள் குறித்த நேரத்துக்கு ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ–131)

# பொதுநலவாய மாநாட்டையொட்டி செலவழித்த நிதி கிடைக்கவில்லை

## கொழும்பு மா நகர ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 11

கொழும்பில் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இடம் பெற்றிருந்த பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு கொழும்பு நகரை அலங்கரிப்பதற்காக செலவழிக் கப்பட்டிருந்த 84 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை கொழும்பு மாநகர சபைக்குக் கிடைக்க வேண்டியிருப்பதாக கொழும்பு நகர ஆணையாள ரான கே.ஏ.அனுர தெரிவித்தார்.

மேலும், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திகள் அமைச்சின் முன்னாள் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷவின் கோரிக்கைக்கு அமைவாகவே கொழும்பு நகரை அலங்கரிப்பது தொடர்பாக மாநகர சபை பணத்தைச் செலவழித்திருந்ததாகவும் கொழும்பு நகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அந்தப் பணத்தொகையைப் பெற்றுத் தருமாறு முன்னைய அரசுக்கு எழுத்து மூலமான கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும்கூட எந்தப் பயனும் கிடைத்திருக்கவில்லை என்றும் ஆணையாளர் அனுர தெரிவித்துள்ளார்.

புதிய அரசுக்கும் கூட அது தொடர்பாகத் தெரியப்படுத்தப் பட்டுள்ள போதிலும் இன்று வரையிலும் திறைசேரியிடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ–22)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08

## இளைஞனை தீண்டியது பாம்பு

அளவெட்டி, மே 11

நண்பர்களுடன் சேர்ந்து விளையாட்டு மைதானத்தில் விளையாடி விட்டு வீடு திரும்பியவரை வீதியில் வைத்து பாம்பு தீண்டியது.

இந்தச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது.

சூராவத்தை சுன்னாகத்தைச் சேர்ந்த சிறிகாந்தன் சிவதர்சன் (வயது–20) என்பவரே பாம்பு தீண்டி தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார். (வ–36)

# வில்பத்தில் மக்கள் குடியேற்றம்: தகவல்களில் உண்மையில்லை

### மறுக்கிறது வடக்கு முஸ்லிம் பிரஜைகள் குழு

மன்னார், மே 11

மன்னார் வில்பத்து வனப் பகுதியில் தமிழ், முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் என்று வெளிவரும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என்று வடக்கு முஸ்லிம் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

வடக்கு முஸ்லிம் பிரஜைகள் குழு இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'வடக்கு முஸ்லிம்கள் உள் நாட்டுப் போர் முடிவடைந்ததன் பின்னர் தமது சொந்த நிலங்களுக்குச் சென்று மீள் குடியேறும் நோக்கில் பற்றைகளை அழித்து வீடுகள், வயல் நிலங்களை துப்புரவு செய்து மீள்குடியேறி வருகின்றார்கள். எனினும் கடந்த இரண்டு வருடங்களாக பொது பலசேனா, ஹெல பொது சவிய போன்ற சிங்கள தீவிரவாத அமைப்புகள், முஸ்லிம்கள் இலங்கைக்குள் இஸ்லாமிய தீவிரவாதம் மற்றும் போதைப் பொருள்களை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரும் நோக்கில் தமது மீள்குடியேற்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வகையில் வில்பத்து இயற்கை சரணாலயத்தை அழித்து சூழலுக்கு மாசுபடுத்துகிறார்கள் என்று குற்றஞ்சாட்டி வந்தன. சமூக ஊடகங்கள் வாயிலாகவும் திட்டமிட்ட முறையில் வடக்கு முஸ்லிம்களது மீள்குடியேற்றம் வில்பத்து காடுகளை அழித்தே இடம்பெறுகின்றது என்ற போலிப் பரப்புரை சிங்கள மக்கள் மத்தியில் மேற் கொள்ளப்படுகின்றது.

வடமாகாண முஸ்லிம்களது மீள்குடியேற்றத்தை அரசியல்வாதிகளுடன் சம்பந்தப்படுத்தி தாமதப்படுத்துகின்ற அல்லது சிக்கல்களுக்குள் மாட்டி விடுகின்ற மோசமான கைங்கரியத்திலும் சில தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் வடபுல முஸ்லிம்கள் நிம்மதியாக வாழமுடியாத சூழல் உருவாகியுள்ளது.

வில்பத்து வனப்பகுதியின் ஒரு எல்லை மன்னார் முசலிப் பிரதேச கிராமங்களின் எல்லையாகும். வில்பத்து வனப் பிரதேசத்தின் முடிவுக்கும் முசலி கிராமங்களுக்குமான பிரிப்பு தெளிவற்றுக் காணப்படுகிறது. நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக வடக்கு முஸ்லிம்கள் இடம்பெயர சுமார் 24 வருடங்களாக ஆள் நடமாட்டம் இன்றிக் கிடந்த கிராமங்கள் அடர்ந்த காடுகளுடன் இணைந்தன. காடுகளும் கிராமங்களும் ஒன்றாகிப்போனது. கிராமங்களுக்கான எல்லைகள் சில அடையாளங்களினூடாகவே உறுதிப்படுத்தப்பட்டன.

ஆனால் 2011ஆம், 2014ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட செயற்கைக் கோள் ஒளிப் படங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு காடுகள் பரவிக் காணப்பட்ட வில்பத்து காட்டுப்பகுதியில் முஸ்லிம்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டை முன் வைத்து சிங்கள இனவாதிகள் குரல் எழுப்புகின்றனர். அவ் வாறே வில்பத்து காடுகள் அழிவதற்கு அமைச்சர் ரிசாத் பதியுதீன் மக்களை மீள்குடிய மர்த்தினார் என்றும் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

அரசு வடக்கு முஸ்லிம்களது மீள் குடியேற்ற விடயத்தில் திட்ட மிட்ட அடிப்படையில் எத்தகைய நடவடிக்கைகளையும் செய்திராத நிலையில் வடக்கு தமிழ் முஸ்லிம் மக்கள் தமது சொந்த நிலங்களில் மீள் குடியேறி வாழும் உரிமையைத் தடுக்கும் நோக்கில் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவது கண்டிக்கத்தக்கதாகும். ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பது வடக்கு முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்தை வெகுவாகப் பாதிக்கும் எனவும் ஊடகங்கள் இது தொடர்பில் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ–10)

## மாணவருக்கு வீதி விபத்து தவிர்ப்பு குறித்து விளக்கம்

தென்மராட்சி, மே 11

வீதி பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு பொலிஸாரும் சுகாதாரப்பகுதியினரும் இணைந்து மாணவர்களுக்கான வீதி விபத்துத் தவிர்ப்புப் தொடர்பான செய்முறை விளக்கங்களை பாடசாலைகளில் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வ[illegible] அனுஷ்டிக்கப்பட்ட வீதிப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் இந்தச்செய்முறை விளக்கம் நடைபெற்றது. மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் அந்தப் பிரிவு பொது சுகாதாரப் பிரிவினரும் கொடிகாமம் பொலிஸாரும் இணைந்து வீதி விபத்துத் தவி[illegible]ப் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக் களையும் செய்முறை விளக்கங் களையும் வழங்கினர்.

யாழ். மாவட்ட தொற்றாநோய் சிகிச்சைப் பிரிவு பொறுப்பதிகாரி மருத்துவர் வைதேகி உமாசுதன் நிகழ் வில் கலந்து கொண்டு உரையாற்றினார். (வ–9)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.04.2015 சனிக்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்ப ஒளிவிளக்கு
அமரர்
**சரவணமுத்து விஜயரத்தினம்**
அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்
இன்று (11.05.2015)
திங்கட்கிழமை அன்னாரது
இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள்
குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

பெரியதம்பிரான் கோயில் வீதி.
இமையாணன் மேற்கு. உடுப்பிட்டி.
குடும்பத்தினர்.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மயிலிட்டி வடக்கு, காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும் நாகம்மாள் கோயில் வீதி, உடுவில், சுன்னாகத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

**கதிரன் பூபாலசிங்கம்**

தோற்றம்
03.02.1947

மறைவு
11.05.2005

ஆண்டுகள் பத்து சென்றாலும் ஆறவில்லை எங்கள் மனம்
எம் வாழ்வில் ஒளிவிளக்காய் என்றென்றும் ஒளிர்ந்தவரே!
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் என்றும் மறவோம் உங்கள் அன்பை

நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில், சுன்னாகம்.
குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவு



அமரர் **தம்பு சற்குருநாதன்**

மலர்வு
01.01.1942

உதிர்வு
06.05.2010

திதி: அட்டமி

ஆண்டாண்டு காலம் அழுதாலும் தீருமோ
அப்பா உங்கள் இழப்பு
கானாமிர்த வயலின் இசைச் சிகரம்
கண்ணிமைக்கும் கணப்பொழுதில்
கரைந்ததுவோ இப்பொழுது
ஐந்தாண்டு காலம் ஓடிவிட்டது
இவ்வாண்டல்ல எவ்வா[illegible]
உங்கள் நினை[illegible]

ஏழாலை தெற்கு.
மயிலங்காடு.
சுன்னாகம்.
பாசமுள்ள குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
24.11.1967

மறைவு
12.04.2015

### அமரர் ஆழ்வாப்பிள்ளை மதியரசன்

(சமுர்த்தி உதவி முகாமையாளர் - உடுப்பிட்டி.
வடமராட்சி- தெற்கு மேற்கு, பிரதேசசபை உறுப்பினர்)

கடந்த 12.04.2015 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்த ஆழ்வாப்பிள்ளை மதியரசன் அவர்களது அந்தியேட்டிக் கிரியையும், சபிண்டீகரணக் கிரியையும் நாளை (12.05.2015) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு ஓடோடி வந்து, எமக்குப்பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசி, பதாதைகள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் மலர்வளையம் சாத்தியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
கொற்றாவத்தை.
(59703)(45.3.7)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 09

# தோட்டப்பகுதி மக்களுக்கு வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிப்பு

## தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு

கொழும்பு, மே 11
தோட்டங்களிலுள்ள லயன் வீடுகளில் தமது வாழ்க்கையை நடத்தி வரும் தோட்டப்பகுதி மக்களுக்கு அனைத்து வசதிகளையும் கொண்டுள்ள 377 தனித் தனியான வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரச தகவல்கள் திணைக்களத்தில் இடம்பெற்றிருந்த ஊடகச்சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்திருந்த அமைச்சர் திகாம்பரம், மூன்றுமாத காலத்துள் அந்த மக்களிடம் இந்த வீடுகள் கையளிக் கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரசால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி கொட்டகலை, ஹப்புத்தளை, இரத்தினபுரி, ஹற்றன், கேகாலை, புஸ்ஸலாவ, நமுனுகுல, மஸ்கெலியா, அக்கரப்பத்தனை, மாத்தளை, நுவரெலியா மற்றும் பொகவன்தலாவை ஆகிய பிரதேசங்களில் இந்த 377 வீடுகளும் நிர்மாணிக்கப் படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஒவ்வொரு வீட்டுக்கும் 12 லட்சங்களுக்கு மேற்பட்ட தொகை செலவு செய்யப்படவுள்ளதோடு அவற்றுள் 75 வீடுகள் அண்மையில் மண் சரிவுகளுக்கு உள்ளாகியிருந்த மிரியபெத்தை பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப் படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தோட்டப்பகுதி மக்களுக்காக இந்தியாவும் கூட 4 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து வழங்குகிறது. முதற் கட்டமாக அவற்றுள் 1134 வீடுகள் அமைப்பது தொடர்பாக இந்தத் தினங்களில் அவற்றின் அடிப்படைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அடுத்த வாரத்தில் இந்தப் பணிகள் ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளதாகவும் அமைச்சர் திகாம்பரம் தெரிவித்தார்.

இந்த அரசு அடிக்கல்லை மட்டுமே நடுவதாக எதிர்தரப்பு அரசியல் கட்சிகளின் தலைவர் கள் எம்மீது குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்திருப்பதன் மூலம் நான் அந்தக் குற்றச்சாட்டுகளைப் பொய்ப்பித்து விட்டுள்ளேன் என்றும் நான் மக்களுக்குச் சேவையாற்றும் அரசியல்வாதியே எனவும் அதன் போது அவர் தெரிவித்திருந்தார். தோட்டப் பகுதிகளில் உள்ள லயன் அறை களைத் தனித்தனி வீடுகளாக மாற்றியமைக்கும் செயற்றிட்டம்கூட மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தற்போது தோட்டப் பகுதிகளில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் வரையிலான லயன் அறைகள் இருப்பதாகவும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் தோட்டப்பகுதி மக்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங் குவது தொடர்பாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட வேண்டியுள்ளது என்றும் அந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் படாது போகுமானால் தாம் வீதியில் இறங்கிப் போராடப் போவதாகவும் அமைச்சர் திகாம்பரம் தெரிவித்தார்.

இந்த ஊடகச் சந்திப்பில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் வீ.சிவஞானசோதி உள்ளடங்கும் தரப்பும் கருத்துக்களை வழங்கியிருந்தது. (வ–22)

## நல்லூரில் 45 அபிவிருத்தி திட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 11
கிராமத்துக்கு ஒரு மில்லியன் நூறு நாள் விசேட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள நாற்பது கிராம அலுவலர் பிரிவுகளிலும் மொத்தம் 45 அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

பிரதேச செயலகம் மூலம் 14 திட்டங்களும் பிரதேச சபை மூலம் 17 திட்டங்களும் யாழ். மாநகர சபை ஊடாக 14 திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்படும். (வ–7)

## புனித பத்திமா அன்னை திருத்தலத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 11
பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை திருத்தல திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது. கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்த திருவிழாவில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் திருநாளும் நடைபெறும்.

நாளைமறுதினம் புதன்கிழமை காலை 5.30 மணிக்கு முதற் திருப்பலியும் 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் நண் பகல் 12 மணிக்கு நோயாளர்களுக்கான திருப்பலியும் மாலை 4 மணிக்கு மாலைத்திருப்பலியும் நடைபெறவுள்ளன. (வ–10)

## திறந்தவெளி மிருகக்காட்சிசாலை 4 நாள் வருமானம் 3 மில்லியன்

கொழும்பு, மே 11
புதிய மிருகக்காட்சிச்சாலைகள் என்ற எண்ணக்கருக்களுக்கு அமைவாக மிருகங்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய புதிய திறந்தவெளி மிருகக்காட்சிச் சாலை அண்மையில் பின்னவலவில் திறந்து வைக்கப் பட்டது.

கடந்த மே முதலாம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரையில் அந்த பின்னவல மிருகக்காட்சிச் சாலைக்குக் கிடைத்துள்ள வருமானம் மூன்று மில்லியன்களையும் கடந்துள்ளது. உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை, சாதனை படைக்கும் அளவுக்கு அதிகரித்திருந்ததே அதற்குக்காரணமாகி யுள்ளது. (வ–22)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியாமல் திண்டாட்ட நிலைமை

யாழ்ப்பாணம், மே 11
அண்மையில் இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள் கல்வி அமைச்சால் கோரப் பட்ட அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியாத நிலையில் உள்ளனர். இடமாற்றலாகி புதிய நிலை யங்களில் பொறுப்பேற்று ஒரு மாதமாகியும் ஆசிரியர்களின் தனிநபர் கோவை இன்னமும் வலயங்களுக்கு வந்து சேராத தால் விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பரிந்துரை செய்ய மறுக்கின் றனர்.

முடிவுத் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டியுள்ள போதிலும் ஆசி ரியர்கள் எந்த வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையொப்பம் பெற்று அனுப்புவதென குழப் பம் அடைந்துள்ளனர். இட மாற்றலாகி ஒரு மாதமாகியும் ஆசிரியரின் தனிநபர் கோவை இன்னமும் வந்து சேராததால் புதிய நிலையத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆசிரியரின் கோவையை சரி பார்க்காமல் பரிந்துரை கையொப்பம் இடவும் பழைய நிலைய வலயக் கல்விப் பணிப்பாளர், குறித்த ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச் சென்ற [illegible]ல் புதிய நிலைய வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையொப்பம் பெறுமாறு தட்டிக் கழிப்பதாலும் அதிபர் சேவைக்கு விண்ணப்பிக்க முடியவில்லை என்று தெரிவிக் கப்பட்டது. (வ–9)

## மாணவருக்கான பற் சிகிச்சை முகாம்

தென்மராட்சி, மே 11
வரணிப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான பற்சிகிச்சை முகாம் இன்று திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் வரணி பிரதேச மருத்துவமனையில் நடைபெறும்.

பிரதேச பொதுச்சுகாதார பரி சோதகரால் பாடசாலைகளில் நடத்தப்பட்ட பற்சுகாதார பரி சோதனைகளின்போது தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சாவகச்சேரி பாடசாலை பற் சிகிச்சைப் பிரிவினரால் பற் சிகிச்சை முகாம் நடத்தப்படவுள்ளது. (வ–9)

## ஓட்டோக் கட்டணம் குறைத்தல் குறித்து தீர்மானம் நிறைவேற்றவில்லை

தென்மராட்சி, மே 11
ஓட்டோக் கட்டணம் குறைப்பது தொடர்பாகச் சபையில் தீர் மானம் நிறைவேற்றப்பட வில்லை என்று சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

சபை உறுப்பினர் ஞா.கிஷோர் சாவகச்சேரி நகரம் தவிர்ந்த ஏனைய இடங்களில் தரித்துள்ள ஓட்டோக்களின் மாதக் கட்டணம் 300 ரூபாவிலிருந்து 200 ரூபாவாகக் குறைக் கப்படல் வேண்டும் என்று தனிநபர் பிரேரணை சமர்ப்பிக்கப் பட்டு உறுப்பினர்களால் விவாதிக் கப்பட்ட போதிலும், அந்தப்பிரேரணை தொடர்பாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட வில்லை என்றும் தெரி வித்தார். (வ–9)

பணிப்பெண் தேவை
வயது முதிர்ந்த பெண் ஒருவரை வீட்டில் தங்கி நின்று பராமரிக்கக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
சம்பந்தப்பட்டவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும். (59704)
தொடர்பு: 077 028 0271 (4.3.7)

விற்பனைக்கு
அலங்கார மீன்கள், ஊர்க்கோழிக்குஞ்சுகள் (30, 45, 60 நாள் குஞ்சுகள்), ஒரு நாள் புறொயிலர் குஞ்சுகள் மற்றும் இறைச்சிக் கோழிகள் பளை, சண்டிலிப்பாய் பிரதேசத்தில் விற்பனைக்குண்டு.
Kay Farm (Pvt)Ltd (சி/17705)
தொடர்பு: 021 320 4233, (4.3.7)
078 880 3483, 077 235 1028

DIPLOMA IN SPOKEN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம்
16.05.2015 காலை 10 மணி
(காலை 10.00 - 12.30 வரை இடம்பெறும்)
வடமாகாணத்தின் தலைசிறந்த ஆங்கிலக் கல்லூரி
(இங்கே கற்றவர்கள் எவரும் ஆங்கில மொழி கதைக்காமல் சென்றதில்லை)
E-CITY College of English
City & Guilds
இல-372, முதலாவது மாடி, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212217106, 0212217898, 0773400418

பிரத்தியேக வகுப்புக்கள்
தரம் 9, 10, 11 வகுப்பு மாணவர்களுக்கான வரலாறு பாடம் தனியாகவோ அல்லது குழுவாகவோ வீடு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: 076 661 8468
(59642)(4.3.7)

விற்பனையாகின்றது
மானிப்பாயில் அரச வேலை விண்ணப்பப்படிவம், பல்கலைக்கழக அனுமதி முதல் படிவம் என்பன விற்பனையாகின்றன.
தொடர்பு: ஐங்கரன் புத்தகசோலை, ரோதி வேம்படி.
(59660) (4.3.7)

GROUP AND PERSONAL CLASSES
ACCOUNTING -O/L A/L
(ENG/TAMIL MEDIUM)
ENGLISH LANGUAGE -ANY GRADE
077 331 6402 (59640)(4.3.7)

வேலையாள்கள் தேவை
சண்டிலிப்பாயில் இயங்கும் விற்பனை நிலையங்களுக்கு காசாளர்கள், மனேஜர் தேவை. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் அல்லது தங்கி நிற்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(59633)(4.3.7) தொடர்பு: 077 161 8268

வீடு, காணி விற்பனைக்கு
பருத்தித்துறை வீதியில் கட்டைப்பிராய்ச் சந்திக்கு அருகில் "பென்லிச்சலொட்டி" எனும் நிலப்பரப்பு 3, குழி 13.5 விஸ்தீரண ஆதனம் வீடு, கிணறு, கடைக் கட்டடம் என்பவற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 021 6359, 075 851 0332
(41132)(4.3.7)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 36 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் பற்றிய அறிவித்தல்
இடம் : சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி
காலம் : 24.05.2015 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நேரம் : முற்பகல் 10.00 மணி
எமது மன்றின் விடயமாகப் பிரேரணைகள் இருப்பின் 18.05.2015 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் மன்றச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பிவைக்கவும்
01. அமரர் ச. நமசிவாயம் புலமைப்பரிசு நிதியம்
02. அமரர் கு. தவராஜசிங்கம் விதவை நிதியம்
03. சன்றைஸ் ஊனமுற்றோர் நிதியம்
04. அமரர் ச.இரத்தினம் வறிய மாணவர் நிதியம்
05. பொ. தாமோதரம் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதியம்
06. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற மாணவர் நிதியம்
07. பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கௌரவிப்பு விழா ஏற்பாட்டுக்குழு மாணவர் நிதியம்
08. அமரர் செ.சபாரத்தினம் மாணவர் நிதியம்
09. அமரர்களான சுப்பிரமணியம் நேசரத்தினம் மாணவர் நிதியம்
10. முத்துமாரியம்மன் மாரிமைந்தன் திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராசா மாணவர் நிதியம்
11. ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர் ச.சந்திரகுமார் மாணவர் நிதியம்
12. கலாநிதி முருகப்பா பஞ்சாபிகேசன் மாணவர் நிதியம்
13. அமரர் ச.சண்முகானந்தம் மாணவர் நிதியம்
14. கணபதிப்பிள்ளை முரளி மாணவர் நிதியம்
15. பொ.தாமோதரம் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதியம்
16. சாவகச்சேரி Hunt Family மாணவர் நிதியம்
17. அமரர் ஆ.பரமநாதன் மாணவர் நிதியம்
18. சாவகச்சேரி குகன் ஸ்ரூடியோ உரிமையாளர் அமரர் அ.சித்திரவடிவேலு மாணவர் நிதியம்
19. அமரர் செ.மகேஸ்வரன் மாணவர் நிதியம்
20. வைத்திய வள்ளல் டாக்டர் ச.அம்பிகைபாகன் மாணவர் நிதியம்
21. அமரர் க.பொன்னம்பலம் மாணவர் நிதியம்
22. தெய்வேந்திரம் கமலாம்பிகை மாணவர் நிதியம்
மாதாந்தம் எமது உறுப்பினர்களின் பங்களிப்புடன் வழங்கப்படும் மாணவர்களுக்கான கொடுப்பனவு போன்ற நிதியங்கள் வழங்கப்படவுள்ளன 2015ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபைக்கான தெரிவு நடைபெறவுள்ளது.
மேற்படி கூட்டத்துக்கு அனைத்து மன்ற உறுப்பினர்களையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.
செயலாளர்,
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்
(சி.15798) (45.3.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைசெய்த வலை பாவிப்போரை பிடிக்க அதிகாரம் வழங்குக

### ஹிஜ்ராபுரம் மீன்பிடிச் சங்கத்தினர் வேண்டுகோள்

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு, நந்திக்கடலில் தடை செய்யப்பட்ட வலை களைப் பயன் படுத்தி மீன் பிடித்தொழிலில் ஈடுப்டு வோரை பொலிஸாரின் உதவி யுடன் பிடிக்க, மீன்பிடிச் சங்கத்தின ருக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று ஹிஜ்ராபுரம் மீன் பிடிச் சங்கத் தலைவர் முத்து முஹம் மது ஜாபிர் நேற்று முன்தினம் சனிக் கிழமை தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதி பருக்கும் மீன்பிடிச் சங்கத்தினருக் கும் இடையில் இன்று விஷேட சந் திப்பொன்று இடம் பெறவுள்ளது. அந்த சந்திப்பில் மேற்குறித்த கோரிக் கையை விடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு நந்திக்கடலில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன் படுத்தி இறால் மற்றும் மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

இது நந்திக்கடலில் தொழில் செய் யும் மீனவர்களுக்கு பொருளா தார ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்யும் மீனவர்கள் பலர், கடற்றொழில் திணைக்களத்தால் கைது செய் யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத் தப்பட்டுள்ளனர்.

எனவே, தடை செய்யப்பட்ட வலை களைப் பயன் படுத்துபவர்களை பிடிப்பதற்குரிய அதிகாரங்கள் தெரிவு செய்யப்பட்ட மீனவ சங்கங் களுக்கு வழங்கப்பட்டால், பொலி ஸா ரின் உதவி யுடன் எந்த நேரமும் கண்காணித்து தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்டுத்துபவர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் – என்றார். (வ)

# மன்னார் பாலத்தில் விபத்து கூலர் வாகனச் சாரதி காயம்

மன்னார், மே11




மன்னார் பிரதான பாலத்தில் நேற்று முன் தினம் சனிக் கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். கொழும்பில் இருந்து மன் னாருக்கு உண வுப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக வருகை தந்து கொண் டிருந்த கூலர் ரக வாக னமே விபத்துக்குள் ளாகியுள்ளது.

மன்னார் பிரதான பாலத்தினூடாக பயணித்துக் கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்த குறித்த கூலர் ரக வாகனம் விபத்துக்குள்ளானது. வாகனத்தைச் செலுத்திய சாரதி சிறு காயமடைந்தார். குறித்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மன்னார் வீதி போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ–56)

### வெசாக்தினத்தில் மது விற்ற மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 11

வெசாக் பண்டிகை தினத்தில் மது பானம் விற்பனை செய்த குற்றச் சாட்டில் கைது செய் யப்பட்ட மூவ ருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றி னால் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பொலிஸாரால் குறித்த மூவரும் கைதுசெய்யப் பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட் டிருந்தனர்.

அவர்களிடமிருந்து பெருந் தொகை யான மதுபானப் போத் தல்களும் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட மதுபானப் போத் தல்களை அழிக்குமாறும் அப[illegible] தத்தை செலுத்த தவறினால் சாதா ரண சிறைத்தண்டனை அனுப விக்குமாறும் நீதிவான் பெ. சிவ குமார் உத்தரவிட்டார். (வ–103)

# நீர்வேலியில் திருநாவுக்கரசர் திருநாள் நிகழ்வுகள் நாளை

யாழ்ப்பாணம், மே 11

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் முன்னெடுக்கும் திருநாவுக் கரசு நாயனார் திருநாள் நிகழ்வு களும் ஸ்ரீ கணேச அறநெறிப் பாட சாலையின் 14 ஆவது ஆண்டு பரி சில் தினமும் நாளை செவ்வாய்க் கிழமை மாலை 5 மணிக்கு இடம் பெறவுள்ளது.

தகைசார் வாழ்நாள் பேராசிரிய ரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவருமாகிய பேராசிரி யர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வுகளில் ஆலய பரி பாலன சபைத் தலைவர் தொழிலதிபர் க.கிருபாகரன் தம்பதி யர் மங்கல விளக்கேற்றுவர். நீர்வை மணி கு.தியாகராசக் குருக்கள் ஆசி யுரையையும் இந்து கலாசார அபி விருத்தி உத்தியோகத்தர் மகிந்தினி விஜய குமார் வாழ்த்துரையையும் வழங்குவர்.

மின்னம்பலத்தில் நாவுக்கரசர் என்ற பொருளில் மறவன்புலவு க.சச்சி தானந்தத்தின் சிறப்புரையைத் தொடர்ந்து பன்முக நோக்கில் நாவுக் கரசர் என்ற பொருளில் கருத்தரங்கு இடம்பெறும். இதில் பக்தி நோக்கில் நாவுக்கரசர் என்ற பொருளில் கோப் பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் இலக்கிய நோக் கில் நாவுக்கரசர் என்ற பொருளில் விரிவுரையாளர் கு.பாலஷண்முக னும் பண்பாட்டு நோக்கில் நாவுக் கரசர் என்ற பொருளில் கலாநிதி மனோன்மணி சண்முக தாஸும் கருத் துரைகளை வழங்குவர்.

நாவுக்கரசரின் திருத்தாண்டகம் பாடற்றொகுதி நூல் வெளியீடு செய் யப்படும். இதன் வெளியீட்டு ரையை நூலின் பதிப்பாசி ரியரும் அரசகேசரிப் பிள்ளையார் ஆலயப் பிரதம குருவுமாகிய சா.சோம தேவக் குருக் கள் ஆற்றுவார். நூலின் முதற் பிரதியை நீர்வேலி கந்தசுவாமி கோவிற்பிரதமகுரு இரா.சுவாமிநாதக் குருக்களும் சிறப்புப் பிரதியை தொழிலதிபர் பொ.கிருஷ்ணானந் தனும் பெற்றுக்கொள்வர். தொடர்ந்து அற நெறிப் பாடசாலைப் பரிசளிப் பும் மாணவர்களின் கலைநிகழ்வு களும் இடம்பெறும். (வ)

# தூத்துக்குடி-கொழும்பு இடையே கப்பல் சேவையை ஆரம்பிக்குக

### இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில தலைவர் வலியுறுத்து

சென்னை, மே 11

தூத்துக்குடி மற்றும் கொழும்புக்கு இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்தை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்று இந்திய யூனியன் முஸ் லிம் லீக் மாநில தலைவர் காதர் மொய்தீன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகளுடன் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையில் தமிழ் மக்களின் உணர்வுகளைப்புரிந்துகொள்ளும்அரசுஆட்சிக்குவந்துள்ளது.எனவேவியாபார அபிவிருத்திக்காகதூத்துக்குடி – கொழும்பு இடையே பயணிகள் கப்பல் போக்கு வரத்தை ஆரம்பிக்க வேண்டும். அதுமாத்திரமல்லாது கச்சதீவை மீட்பதற் கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் குறிப் பிட்டுள்ளார். (வ)

## மரண அறிவித்தல்கள்



### இரத்தினம் ஞானேந்திரம்

சுன்னாகம், செல்லாச்சி அம்மையார் வீதி யைப் பிறப்பிடமாகவும், இளவாலையை நிரந்தர வதிவிடமாகவும், 8 ஆம் கட்டை மல்லாகம் மற்றும் வேரவில் பூநகரியில் வசித்தவருமான இரத்தினம் ஞானேந்திரம் 07.05.2015 வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விசாகப் பெருமாள் - அன்னம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானேஸ்வரி, ஞானகௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலஸ்கந்தன் , சதானந்தன் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான புவனேந்திரம், கோவேந்தி ரம், இராஜேந்திரம் தெய்வேந்திரமணி ஆகியோரின் சகோதரனும், லக்ஸ்மன், லக்ஸ்சன், கம்சிகா, சுவேதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08.05.2015) வெள்ளிக்கிழமை அவரது வேரவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மணற்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
திரு.திருமதி பாலஸ்கந்தன்,
திரு.திருமதி சதானந்தன்.

8ஆம் கட்டை,
மல்லாகம்.
(59683) (45.3.7)

### திருமதி பிறேமாவதி முத்துலிங்கம்



யாழ் கொட்டடியைப் பிறப்பிடமாகவும் பெரியமணல் வலந்தலை , காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறே மாவதி முத்துலிங்கம் 08.05.2015 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரேசன் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மக ளும் காலஞ்சென்ற முத்துலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணப திப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ரவீந்திரன், காந்திமதி, இந்துமதி, ரஞ்சிதமலர், கோகுலவாணி, மோகனதாசன், பாலமுரளி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாந்தகுமாரி, மயில்வாகனம், கந்தவனம், பிரான்சிஸ், காலஞ்சென்ற ரவிச்சந்தர் மற்றும் திருமகள், விக்கினேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், செல்லம்மா, பாக்கியம், அன்னலட்சுமி, பாலகிருஷ்ணன் மற்றும் செல்வரத்தினம் அன்னபாக்கியம், சீதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான சியாமளா, சங்கீதா மற்றும் துஷ்யந்தினி, பகீரதி, அஸ்வினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபாகரன், ஜெயசந்திரன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், சியாமளா, தமிழினி, ஸ்ரீராம், அக்ஷயன், ஆதர்சன், ஆர்த்திகா, ஆரபி, ஆதித்தன் ஆருஜா ஆகியோரின் அன்புப் பேர்த் தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2015) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அவாது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியமணல்,
காரைநகர். 077 603 1995

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னையா சிவக்கொழுந்து (சிவராசா)



முகமாலை தெற்கைப் பிறப் பிட மாகவும் சோதியம்மா வீதி, மீசாலை மேற்கை தற்காலிக வதிவிட மாகவும் கொண்ட முகமாலை கத்தியறுத்தான் தோட்ட கணக்கருமான சின்னையா சிவக்கொழுந்து (சிவராசா) 08.05.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான சின்னையா - தேவகுஞ்சரிதம் பதியரின் அன்பு மருமகனும், கனகம்மா வின் பாசமிகு கணவரும், காலஞ் சென்ற பொன்னம்மாவின் அன்புச் சகோ தரரும், காலஞ்சென்ற சிவானந் தம் மற்றும் சிவலோகநாதன் (ரவி - மீசாலை), சிவசுந்தரராஜன் (சிவா -ஜேர்மனி), சிவஞானசோதி (மீசாலை), சிவநாதன் (மீசாலை), சிவஞானவதி (அமுதி - கனடா), சிவகுமார் (கனடா), சிவமாலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கேதாரம் (முன்னாள் முன்பள்ளி ஆசிரியை - அல்லாரை) மற்றும் இராஜேஸ்வரி மாலா (ஜேர்மனி), சிவப்பிரகாசம் (ஓய்வுநிலை செயலாளர் பிரதேச சபை பளை), குணமதி (ஆசிரியை கைதடி - நுணாவில் அ.த.க. பாடசாலை), செல்வானந்தம் (கனடா), மதிவதனி (கனடா), காந்தரூபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், பாமினி கஜன் (ஆஸ்திரேலியா), கஜனி (மாணவி - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), தர்சன் (மாணவன் - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), சிந்துஸன் (ஜேர்மனி), சுபாஸ் (ஜேர்மனி), சிவநேந்திரா (உதவி விரி வுரையாளர் - முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் யாழ். பல்கலைக்கழகம்), தேவரூபன் (கிழக்கு பல்கலைக் கழகம்) துவாரகன் (ஆசிரியர் - வவுனியா), சிவகௌரிகா (மாணவி சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தர்ஜி (கனடா), பிரியன் (கனடா), பிரதிக்ஸா (கனடா), பிரதிக்ஸன் (கனடா), ரக்ஸயன் (கனடா), ரக்ஸனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக வதிவிடத்தில் இன்று (11.05.2015) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம் முன்பாக
[illegible]
077 366 7302, 077 964 6453
(சி.15797)
(45.3.7)

தகவல்:
குடும்பத்தினர்

# உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நீடிக்கப்படாது

மட்டக்களப்பு, மே 11

உள்ளூராட்சி மன்றங்க ளின் பதவிக் காலம் நீடிக் கப்படமாட்டாது என்று அரசு நேற்றுமுன்தின[illegible] அறிவித்தது.

நாட்டிலுள்ள பெரும் பாலான உள்ளூராட்சி மன்றங்களின் நான்கு வருடபதவிக்காலம்கடந்த மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. எனி னும் குறித்த மன்றங்க ளின் பதவிக் காலம் மே 15ஆம் திகதி வரை விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நீடிக்கப்பட்டது.

இந்த நிலையில் 'உள்ளூ ராட்சி மன்றங்களின் பத விக் காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக் குமாறு ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் முக்கி யஸ்தர்கள் கோரிக்[illegible] விடுத்து வருகின் றனர். ஆனால் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நீடிக்கப்படாது என்று அமைச் சரவை பேச்சாளரான டாக்டர் ராஜித சேனாரத்ன தெரி வித்துள்ளார்.

இதனால் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் நாட்டிலுள்ள பெரும் பாலான உள் ளூராட்சி மன்றங் கள் கலைக்கப்பட்டு ஆணை யாளர்களின் கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவரப் படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (வ–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனின் மாபெரும் கலை இலக்கியத் தேர்வின் பரிசில் நாள்















உதயன் நாளிதழால் நடத்தப்பட்ட மாபெரும் கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக் கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள், பரிசில்கள் பெறும் மாணவர்கள், கலை நிகழ்வு நடத்தும் சிறுவர்கள் ஆகியோரைக் காணலாம். இந்தப் பரிசுக் கொண்டாட்டத்தின் ஏனைய நிகழ்வுகள் நாளைய உதயனில் வெளிவரும். விழாவில் பரிசு பெற்ற மாணவர்களுக்கான ஒளிப்படங்கள் தேவைப்படின் பின்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம்: 0718628380.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலைக்காக சண்டை 47 பேர் சாவு

**பாகிஸ்தானில் துயரம்**

இஸ்லாமபாத்,மே11
பாகிஸ்தானில் மலையைக் கைப் பற்றுவதில் இரு குழுவினருக்கு இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 47 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.
வடக்கு வசிரிஸ்தானின் லயோ ஆரா மந்தி என்ற கிராமத்தில் மாடா கெல் மற்றும் பைபாலி காபூல் கெல் பழங்குடியினர் வசித்து வருகின் றனர்.
இந்தப் பழங்குடியினருக்கிடையே அருகில் உள்ள மலையை கைப் பற்றுவதில் தகராறு ஏற்பட்டுள்ளது. அந்தத் தகராறு வன்முறையாக மாறி இரு கும்பலும் துப்பாக்கி யால் சுட்டுக்கொண்டதில் 47 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தான் இராணுவம், வடக்கு வசிரிஸ்தானில் சிறிய பகுதியை தங்களது கட்டுப்பாட்டில் வைத்தி ருந்தாலும் தீவிரவாதக் குழுக்கள் இங்கு அதிகரித்துக் காணப்படுவதா கத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## தென் கொரிய கடற்படையை எச்சரிக்கிறது வட கொரியா



சியோன்,மே11
மஞ்சள் கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்தால் தாக்குதல் நடத்து வோம் என்று தென் கொரிய கடற்படைக்கு வட கொரியா எச்ச ரிக்கை விடுத்துள்ளது. மஞ்சள் கடற்பகுதியில் வட, தென் கொரியா நாடுகளுக்கு இடையே எல்லைப் பிரச் சினை நீண்ட காலமாக இருந்து வரு கிறது. தென் கொரியக் கடற்படையினர், வட கொரியாவின் எல்லைக்குள் நுழைந்து வருவதால், இது தொடர் பாக அவசர சிறப்பு எச்ச ரிக்கை ஒன்றை வடகொரிய இரா ணுவம் வெளியிட்டுள்ளது.
அதில், சீன மீன்பிடிப் படகுகளை கட்டுப்படுத்துகிறோம் என்ற போர்வையில், இந்த மாதம் முதல் வாரத்தில் 17 தென்கொரிய அதிவேக ரோந்து படகுகள் எங்கள் கடல் எல்லைக்குள் நுழைந்துள் ளன. இனிமேல், எங்கள் பகுதியில் தென்கொரியக் கடற்படையினரின் கப்பல்களோ, படகுகளோ வந்தால் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி தாக்குவோம். அப்போது தென் கொரியாவினர் எதிர்த்து தாக்கி னால் தொடர்ந்து வெற்றிகரமான தாக்குதல்களை நடத்துவோம் என்றும் கூறப்பட்டுள்ளது. (14)

## நேபாளத்துக்கு நிதியுதவி போதியளவில் இல்லை

**கவலை தெரிவிக்கிறது ஐ.நா.**



காத்மண்டு,மே11
நேபாள நாட்டில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டோருக்கு தேவைப் படும் உதவிகளைச் செய்யப் போதுமான நிதி கிடைக்கவில்லை என்று ஐ .நா கவலை தெரிவித் துள்ளது.
நேபாள நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் 7.9 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டு அந்த நாட்டையே உருக்குலைத்து விட் டது. தலைநகர் காத்மண்டில் ஏரா ளமான வீடுகள், கட்டடங்கள், ஹோட்டல்கள், வர்த்தக நிறுவனங் கள், பழைமை வாய்ந்த புராதனச் சின்ன கட்டடங்கள் இடிந்து விழுந் தன. மேலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எட்டாயிரமாக உயர்ந்துள்ளது. இது தவிர 17 ஆயி ரத்து 803 பேர் காயம் அடைந் துள்ளனர்.
நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர் களுக்கு பிற நாடுகளில் இருந்து நிதி உதவி கிடைத்வருகின்றன. ஆனால், இந்த நிதி போதுமானதாக இல்லை என ஐ.நா தெரிவித்துள் ளது. இது வரை நிவாரண நிதியாக 22 மில்லியன் டொலர்கள் மட் டுமே கிடைத்துள்ளதாக நேபாள பணிகளுக்கான ஒருங்கிணைப் பாளரான ஜேம்ஸ் மெக்கோல்ட் ரிக் தெரிவித்துள்ளார்.
சுமார் இரண்டு வாரத்துக்கும் முன்பு நேபாளத்தில் இடம்பெற்ற பூகம்பத்தால் பாதிக்கப்பட் டோருக்கு உதவ 415 மில்லியன் டொலர்கள் வேண்டும் என்று ஐ.நா கோரியிருந்தது. நிதி உதவிகள் வேகமாகக் கிடைத்தால்தான், மலைப் பகுதிகளில் இருக்கும் தொலைதூர கிராமங்களில் உள்ள மக்களுக்கு உதவிப் பொருள்களை எடுத்துச் செல்ல முடியும் என்று ஐ.நா அதிகாரி கூறியுள்ளார். (14)

## வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன்

***டேவிட் கமரூன் உறுதி***



லண்டன்;மே11
பிரிட்டனில் நடந்து முடிந்த நாடாளு மன்றத் தேர்தலில் 331 ஆசனங் களைக் கைப்பற்றி டேவிட் கமரூன் இரண்டாவது முறையாக ஆட்சி யைப் பிடித்துள்ளார்.
வாழ்த்து மழையில் நனைந்து வரும் கமரூன், இந்த வெற்றி குறித்து தெரிவிக்கும் போது,
எனக்குக் கிடைத்துள்ள இனிப்பான வெற்றி இது, தனிப்பெரும்பான்மை பெற்று அமையும் அரசால் அனைத் துவித வாக்குறுதிகளை யும் நிறை வேற்ற முடியும். ஸ்கொட் லாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்து பகுதிகளில் அதிகாரங் களைப் பரவலாக்குவேன் என்றும் பிரிட்ட னின் பொருளாதாரத்தை உயர்த்து வேன் எனவும் தெரி வித்துள் ளார். (14)



பிரான்ஸ் நாட்டுக்குச் சுற்றுலா வந்த சீன நாட்டைச் சேர்ந்த பயணிகள் உலகளவில் கின்னஸ் சாதனை புரிந்து வியக்க வைத்துள்ளனர். ஒரே விதமான ஆடையில் 6 ஆயிரத்து 400 பேர் குவிந்ததால், அந்நகரமே விழாக்கோலம் பூண்டது.

# அமோக வெற்றி பெற்றார் டேவிட் கமரூன்

லண்டன்,மே11
பிரிட்டன் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ஆளும் கட்சி பிரதம வேட்பாளரான டேவிட் கமரூன் தனிப் பெரும்பான்மையை நிரூ பித்து 331 ஆசனங்களை வென்று இரண்டாவது முறையாக ஆட் சியை பிடித்துள்ளார்.
650 ஆசனங்களின் வாக்கு எண் ணிக்கை முடிவுகள் அதிகாரபூர்வ மாக அறிவிக்கப்பட்டுள்ளன. பிரிட் டன் நாடாளுமன்றப் பொது தேர் தல் பெரும் எதிர்ப்பார்ப்புகளுக் கிடையே நடைபெற்றது. அந்த நாட்டின் இரண்டாவது முக்கிய கட்சியான தொழிலாளர் கட்சி தான் முன்னிலையில் இருந்தது. ஆனால், வாக்குகள் எண்ணும் பணி தொடர்கையில், ஆளும் கன்சர்வேடிவ் கட்சி, தொழிலாளர் கட்சியை பின்னால் தள்ளி முன் னேறத் தொடங்கியது.
கன்சர்வேடிவ் கட்சி அசைக்க முடி யாத ஆசனங்களை வென்று, எதிர்க் கட்சியை நிலை குலைய வைத்தது.
தற்போது பொதுத் தேர்தலின் 650 ஆசனங்களின் வாக்கு எண்ணிக் கையும் முடிவடைந்துள்ளதால், ஆளும் கன்சர்வேடிவ் கட்சி 331 ஆசனங்களில் வெற்றி பெற்றுள்ள தாக அதிகார பூர்வமான தகவல்கள் வெளியாகியுள்ளன. முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி 650 ஆசனங்களில் 232 ஆசனங்களைப் பெற்றுள்ளது.
பிரிட்டனின் பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி படுதோல்வியை சந்தித்துள்ள தால், அந்தக் கட்சியின் பொறுப் பிலிருந்து எட் மிலிபாண் விலகு வார் எனத் தகவல்கள் வெளியாகி யுள்ளன. எட் மிலிபாண்ட் கட்சியி லிருந்து விலகும் பட்சத்தில், அவ ரது இடத்துக்கு தொழிலாளர் கட்சி யின் ஆண்டி பர்ன்ஹம் வருவார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஆனால் இது குறித்து அதிகாரப் பூர்வ தகவல்கள் வெளியாக வில்லை.
தேர்தல் முடிவுகள் அதிகாரபூர் வமாக வெளியாகியுள்ளதால், பிரிட் டனின் ராணியான இரண்டாம் எலிசபெத், டேவிட் கமரூனை அரண்மனைக்கு அழைத்து வாழ்த் துக் களை தெரிவிக்கவுள்ளார். ராணியுடனான அந்த சந்திப்பில், அமைச்சர்களை நியமித்து ஒரு வலுவான அரசை உருவாக்குங்கள் என டேவிட் கமரூனுக்கு ராணி ஆலோசனை வழங்குவார். (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 13





இந்தோனேஷியாவில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்ட மயூரன் சுகுமாரனின் இறுதிக் கிரியைகள் நேற்று அவுஸ்தி ரேலியாவின் சிட்னியிலுள்ள டேஸ்பிரிங் தேவாலயத்தில் ஆராதனைகளுடன் இடம் பெற்றுள்ளது. மயூரன்சுகு மாரனின் பூதவுடலுக்கு அருகில் நிறப்பூச்சு மற்றும் தூரிகை வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை மயூரனுடன் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட அன்ட்ரூ சானின் இறு திக் கிரியைகள் நேற்று முன் தினம் சிட்னியில் இடம் பெற்றன.







## மத்தியதரைக் கடலில் 400 அகதிகள் மீட்பு

பேர்லின்,மே11

ஜேர்மனி கடற்படையைச் சேர்ந்த 2 கப்பல்கள் மத்திய தரைக்கடல் பகுதியை கடந்து ஐரோப்பாவுக்கு செல்ல முயன்ற சுமார் 400 அகதிகளை மீட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஜேர்மனி பாதுகாப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த செய்தி தொடர்பாளர் ஒருவர் தெரிவிக்கும் போது: கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இத்தாலி அதிகாரிகளிடம் இருந்து எங்களுக்கு ஒரு அவசர அழைப்பு வந்தது. அதையடுத்து நடந்த முதல் மீட்புப் பணியில், ஜேர்மனியைச் சேர்ந்த கடற்படைக் கப்பல் மீட்புப் பணிக்கு சென்றது. இத்தாலிய தீவின் தென் பகுதியில் சுமார் 250 கிலோ மீற்றர் தூரத்தில், மரத்தினால் ஆன மிகவும் பாதிப்படைந்த கப்பல் ஒன்றில் பயணித்த சுமார் 200 அகதிகளை மீட்டோம். மேலும், இத்தாலி அதிகாரிகளிடம் பேசிய படி அந்த அகதிகளை ஒரு இத்தாலிய துறைமுகத்துக்குக் கொண்டு சென்று சேர்த்துவிட்டோம். இதையடுத்து லிபியக் கடலோரப் பகுதியில் 170 கிலோ மீற்றர் தூரத்தில் பயணித்த சுமார் 180 அகதிகளையும்; மீட்டு வந்தோம் என்று தெரிவித்துள்ளார். ஆனால் கடலில் இருந்து மீட்கப்பட்ட அந்த அகதிகள் எந்த நாட்டினைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றி எந்தத் தகவலும் அளிக்கப்படவில்லை. கடந்த ஏப்ரல் மாதம் லிபியா மற்றும் தெற்கு இத்தாலிப் பகுதியில் சுமார் 750 அகதிகள் நடுக்கடலில் மூழ்கி உயிரிழந்ததை அடுத்து இந்த விடயம் உலகளவில் கவனத்தை பெற்றது. இதையடுத்து ஜேர்மனியைச் சேர்ந்த 2 கப்பல்கள் லிபியா பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த மீட்புக் கப்பல்களில், போர்வைகள், ஆபத்து காலத்தில் தப்பிச் செல்ல சிறிய படகுகள், உயிர் காக்கும் ஆடைகள், மருத்துவப் பொருள்கள் மற்றும் 8 மருத்துவர்கள் இடம்பெற்றுள்ளனர். மேலும், கடந்த 18 மாதங்களில் மத்திய தரைக்கடல் பகுதியில் இருந்து ஆபத்தான கப்பல்கள் மூலம் ஐரோப்பா சென்றடைய முயன்ற சுமார் 5000 அகதிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (14)

# 43 மாணவர்கள் கொலை உடல்களை எரித்த கும்பல்

## மெக்சிகோவில் கொந்தளிப்பு





மெக்சிகோ,மே11

மெக்சிகோவில் 43 மாணவர்கள் மாயமான விவகாரம் தொடர்பாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி, மெக்சிகோவின் தென் மேற்கு நகரான இகுவாலாவில் ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் 43 பேர் மர்மமான முறையில் மாயமானார்கள்.

இது தொடர்பாக நடைபெற்ற விசாரணையில், பொலிஸார் சட்ட விரோதமாக அந்த மாணவர்களைக் கடத்திச்சென்று போதைப் பொருள் கடத்தல் கும்பலிடம் ஒப்படைத்துள்ளனர். அந்தக் கும்பல், மாணவர்கள் 43 பேரையும் கொலை செய்து, அவர்களது உடல்களை எரித்துள்ளது.

இந்தச் சம்பவம் மெக்சிகோவில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கொலை சம்பவம் தொடர்பாக இகுவாலா முதல்வர் ஜோஸ் லூயிஸ் அபார்கா, அவரது மனைவி மரியா உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்தச்சம்பவத்தில் திடீர்த் திருப்பமாக இகுவாலா நகர பொலிஸ் துணைத் தலைவர் பிரான்சிஸ்கோ சல்காடோ வலாதர்ஸ் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தின் போது, 13 மாணவர்களை அந்தப் போதைப்பொருள் கும்பலிடம் ஒப்படைக்க அவர் உத்தரவிட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (14)



# பிலிப்பைன்ஸுடன் கைகோர்க்கிறது கனடா



ரொறான்ரோ,மே11

கனடாவுக்கு பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதி பெனிக்னோ அக்கினோ பயணம் மேற்கொண்டிருந்த போது கனடாவின் பிரதமருடன் சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.

அந்த சந்திப்பின் போது இருதரப்பு வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சு இடம்பெற்றது.

மேலும், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி, ஒட்டாவாவில் உள்ள ஆளுநர் மாளிகைப் பகுதியில் மரக்கன்று ஒன்றை நட்டுள்ளார். அந்த மரக்கன்றை நடுவதற்குத் தனது தாயார் 26 வருடங்களுக்கு முன்னர் பயன்படுத்திய வெள்ளியினால் ஆன சிறு மண்வெட்டியை அவரும் பயன்படுத்தியுள்ளார்.

கனடாவில் வசிக்கும் எட்டு லட்சத்துக்கும் மேற்பட்ட பிலிப்பைன்ஸ் மக்களின் பிரதிநிதிகளை கனடாவின் பிரதமரும், பிலிப்பைன்ஸின் ஜனாதிபதியும் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஒட்டாவாவை அடுத்து ரொறன்ரோ, வன்கூவர் ஆகிய நகரங்களுக்கும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி செல்லவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்று சர்வதேச அன்னையர் தினம்

# நலமான தாய்மையும் சுகமான குழந்தையும்

செல்வி.கௌஷிக்கா தாமோதரம்பிள்ளை.
*4ம் வருட மாணவி பிரயோகபோசாக்கு துறை உணவும்போசாக்கும் வயம்ப பல்கலைக்கழகம்*

இன்றைய உலகமானது நவீனத்திலும் நாகரிகத்திலும் உச்சத்தை அடைந்தாலும் தாய்மையின் நிலைக்கு விலைகொடுக்க யாராலும் முடியாது. தாய்மை நிலையை அடைதல் என்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் புதுமையான அனுபவமாக அமைவதோடு சமூகத்தினதும் உறவுகளினதும் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளவும் வழியமைக்கின்றது. கருவுற்றிருக்கும் தாயானவளுக்கு தனது குழந்தையை பற்றிய கனவுகளும் எதிர்பார்ப்புக்களும் நிச்சயமாக இருக்கும் ஆகவே ஆரோக்கியமான குழந்தையை பாதுகாப்பான முறையில் பெற்றெடுக்க தாயானவள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் ஆரோக்கியமான நிலையில் இருக்க வேண்டியது அவசியமானதாகும். மனிதனுடைய வாழ்க்கை வட்டத்தை நோக்கின் குழந்தையானது தாயின் கருப்பையில் உள்ளபோதே மிகவேகமான வளர்ச்சி நடைபெறுகின்ற அதேவேளை கருவுற்றிருக்கும் தாயின் உடல்கட்டமைப்பிலும் பல வளர்ச்சி மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆரோக்கியமான பெண்ணின் கர்ப்பகாலத்தின் போது அண்ணளவாக 12.5மப நிறை அதிகரிப்பு ஏற்படுகின்றது. இந்நிறை அதிகரிப்பானது சிசுவின் நிறை, மார்பகங்களின் விரிவு, கருப்பையின் வளர்ச்சி, மேலதிக குருதி உற்பத்தி போன்றகாரணிகளால் ஏற்படுகின்றது.

கருப்பையினுள் வளரும் சிசுவிற்கு தாயிலிருந்தே போசணைப் பாதார்த்தங்கள் கடத்தப்படுகின்றன. அதேவேளை குழந்தை பிறந்ததன் பின்னர் சக்தியும் போசணையும் தாய்ப்பாலினூடாக வழங்கப்படுகின்றன. ஆகவே கருவுற்றிருக்கும் சந்தர்ப்பத்திலும் தாய்ப்பாலூட்டும் நிலையிலும் தாயானவள் மேலதிகமான சக்தி மட்டத்தையும் போசணை மட்டத்தையும் கொண்டிருப்பது மிக முக்கியமானதாகும். இம்மேலதிக சக்தியையும் போசணையையும் தாயானவள் தனது அன்றாட உணவு உட்கொள்ளல் மூலமே பெற்றுக்கொள்ளமுடியும. உணவானது தாயின் உடல் நிலைக்கு பொருத்தமானதாகவும, விருப்பமானதாகவும், சக்தி தேவையையும், போசணைத் தேவையையும் அளவிலும், தரத்திலும் பூர்த்தி செய்வதாக அமையவேண்டும்.

காப்பிணித் தாய்மார்களின் உணவுப்பழக்கத்தைப் பொறுத்தமட்டில் பல்வேறு வகையான சமய நம்பிக்கைகளும் கலாசார பிணைவுகளும் குடும்பப் பின்னணியும் பெருமளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனை இன்னுமொரு விதமாக நோக்கின் தாயின் கர்ப்பங்களின் எண்ணிக்கை, குடும்ப வருமானம, வசிக்கின்ற காலநிலை வலயம, மற்றும் பரம்பரை இயல்பு போன்றனவும் தாயின் உணவு உட்கொள்ளலில் குறிப்பிட்டளவில் பாதிப்பை செலுத்துகின்றன. எவ்வாறாயினும் தாயின் நடைமுறை உணவு பழக்கச்செயற்பாடுகளே வளரும் சிசுவின் உடல் வளாச்சியையும் மனவிருத்தியையும் கூடியளவில் தீர்மானிக்கின்றன. ஆகவேதான் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் உணவு பழக்க வழக்கம் தொடர்பான போதுமான விளக்கமும் அதன் போசணை பற்றிய போதுமான அறிவும் இருத்தல் அவசியமானதாகும்.

கர்ப்பகாலத்தில் சாதாரணமாக உட்கொள்ளும் அளவிலும் பார்க்க கூடியளவில் உட்கொள்ளுதல் முக்கியமானதாகும். அதேவேளை உணவுவேளைகளின் எண்ணிக்கையை அதிகாத்தலும், உட்கொள்ளும் உணவின் அளவை அதிகரிப்பதற்கு பொருத்தமானதாக அமையும். இக்காலப்பகுதியில் தாயின் உடலில் நடைபெறும் வழமையான உடற்றொழிற்பாடுகள் நடைபெறுவதோடும் சிசுவின் உடல் அங்கங்கள் ஒவ்வொன்றும் படிப்படியாக உருவாகின்றது. ஆகவே தாயானவள் மேலதிக உணவை உட்கொள்ளுவதன் மூலம் தான் தாய், சேய் இருவருக்குமானசக்திதேவையையும்போசணை தேவையையும் ஈடுசெய்யமுடியும்.

கர்ப்பிணித்தாய்மார்கள் விசேடமான உணவுகளையோ அல்லது விலையுயர்ந்த ஆடம்பர உணவுகளையோ உட்கொள்ள வேண்டும் என்கின்ற தேவையில்லை. ஆனால் உங்கள் சூழலில் கிடைக்கக்கூடிய உணவுகளைப் பொருத்தமான முறையில் தெரிவுசெய்து தகுந்த முறையில் சமையல் செயற்பாடுகளை கையாண்டு போதுமானளவில் உட்கொள்ளுதல் சிறந்தது. உங்களுடைய எல்லா உணவு வேளைகளிலும் எல்லா விதமான போசணைக் கூறுகளும் அடங்கியுள்ளதா? என பரிசோதித்துக்கொள்ளுங்கள். ஒரு முழு உணவானது மாச்சத்து (காபோவைதரேற்று), புரதம், இலிப்பிட்டு (கொழுப்பு), விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். வாரத்தின் எல்லா நாட்களுமே ஒரேமாதிரியான உணவுகளை உட்கொள்ளாமல் ஒவ்வொரு நாளும் வேறு வேறு வகையான உணவுகளை தெரிவுசெய்து உண்ணுங்கள். உங்களுடைய உணவுத் தட்டில் பல வர்ணங்களை அவதானிக்ககூடிய உணவுகள் உள்ளதா? என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள் பல நிறமுடைய உணவுகளானது எல்லா விதமான போசணைக் கூறுகளையும் உள்ளடக்கியதாக அமைகிறது. ஒவ்வொரு உணவுவேளையின் போதும் இரண்டிற்கும் மேற்பட்ட மரக்கறி வகைகளை சேர்த்துக்கொள்ள மறக்காதிருங்கள். ஒவ்வொருநாளும் குறைந்தது மூன்று தடவையாவது பழங்களை ருசித்து உண்ணுங்கள் ஏனெனில் மரக்கறிகளிலும் பழங்களிலும் காப்பகாலத்துக்குத் தேவையான விற்றமின்களும் கனியுப்புக்களும் அதிகளவில் காணப்படுகின்றன. கர்ப்பகாலத்தின் போது இரும்பு, விற்றமின் சி, போலிக் அமிலம், கல்சியம், விற்றமின் டீ, அயடீன் போன்ற போசணைகூறுகளின் தேவை விசேடமாக அதிகரிக்கின்றது.

உடலில் அதிகளவான இரும்புக் கூறானது குருதியில் ஒட்சிசனை காவுகின்ற ஈமோகுளோபின் (hemoglobin) எனப்படும் மூலப்பொருளில் காணப்படுகின்றது. .உடலில் இரும்புச்சத்து குறைவதால் ஈமோகுளோபின் அளவும் குறைவடைகின்றது. அதன் தொடாச்சியாக ஒட்சிசனின் அளவு குருதியில் குறைவடைந்து குருதிச்சோகை நிலமை ஏற்படுகிறது. கருவுற்றிருக்கும் தாய்க்கு குருதிச்சோகை ஏற்படுமானால் சிசு குறை மாதத்திலோ, இறந்தோ அல்லது எடை குறைவாகவோ பிறக்கக்கூடிய சாத்தி யக்கூறுகள் உள்ளது. தாயின் குருதிச்சோகை நிலையை சோர்வு, பசியின்மை, மயக்கம் போன்ற அறிகுறிகள் மூலம் இனங்கண்டு கொள்ளமுடியும். இரும்புச்சத்தானது விலங்கு உணவுகளான இறைச்சி, ஈரல், மீன், முட்டை, நெத்தலி, கருவாடு போன்றவற்றிறிலும் மற்றும் தாவர உணவுகளான தானியங்கள் (அரிசி, குரக்கன்), பருப்புவகைகள் (கடலை, கௌப்பி, பயறு, பருப்பு), அதிக பச்சை நிறமுடைய கீரை வகைகள்(வல்லாரை, பொன்னாங்காணி, பசளிக்கீரை), இலைக்கறி வகைகள்(முருங்கை, தவசிமுருங்கை) போன்றவற்றிலும் அதிகளவில் காணப்படுகின்றது. விற்றமின் சி உடலில் இரும்புக்கூறு அகத்துறிஞ்சப்படும் அளவினை அதிகரிக்கிறது. விற்றமின் சி அதிகம் நிறைந்த உணவுகளான புதிய மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளை நாளாந்த உணவில் அதிகமாக சேர்த்துக் கொள்வதன் மூலமும் உணவு தயாரிக்கும் போது எலுமிச்சம்பழம், தக்காளிப்பழம் போன்றவற்றை சேர்த்துக் கொள்வதன் மூலமும் உடலுக்கு தேவையான விற்றமின் சியை பெற்றுக்கொள்ள முடியும். உணவு உண்ட சிறிது நேரத்தின் பின்னர் அருந்தப்படும் தேநீர், கோப்பி போன்ற பானங்கள் இரும்புக்கூறின் அகத்துறிஞ்சலை தடுக்கின்றது. ஆகவே உணவு உட்கொள்வதற்கு ஒரு மணித்தியாலத்திற்குள்ளோ அல்லது உணவு உட்கொண்டு ஒரு மணித்தியாலத்திற்குள்ளோ பருகுவதனை தவிர்ப்பது பொருத்தமானது.

காப்பகாலத்தில் கல்சியம் அதிகம் நிறைந்த உணவுகளான பால், ... நிறகீரை வகைகள், ... சிறு மீன்கள், பருப்புவகை (... பயறு), தானியங்கள் உணவில் ... கொள்வது சிறப்பானது. ஏனெனில் வளரும் குழந்தையின் எலும்பு வளர்ச்சிக்கு கல்சியம் மிக அவசியமானதாகும். கர்ப்பகாலத்தில் கல்சியம் நிறைந்த உணவுகளை எடுக்கத் தவறும் பட்சத்தில் குழந்தையானது தாயின் உடற்சேமிப்பிலிருந்து கல்சியத்தை எடுத்துக் கொள்ளும். இதன் காரணமாக பிற்காலத்தில் தாய்க்கு எலும்பு சம்பந்தமான நோய்கள் உருவாக அதிக சாத்தியப்பாடு உள்ளது. கல்சியம் உடலில் அகத்துறிஞ்சப்படுவதனை விற்றமின் அதிகரிக்கிறது. உடலுக்குத் தேவையான விற்றமின்னுடைய கடல் உணவுகளை உண்பதால் பெற்றுக்கொள்வதோடு சுரிய ஒளியானது உடலில் விற்றமின், தொகுப்புக்கும் பயன்படுகின்றது. ஒருநாளுக்கு குறைந்த பட்சம் அரை மணித் தியாலமாவது சூரிய ஒளி உடம்பில் படுவது நல்லது.

போலிக்கமிலம் எனப்படுவது டீ விற்றமின் வகையை சேர்ந்ததாகும். கர்ப்பகாலத்துக்கு முன்னரும் கர்ப்பகாலத்தின் ஆரம்பகட்ட பகுதியிலும் போலிக்கமிலம் எடுத்துகொள்வது அவசியமானது. போலிக்கமிலமானது முள்ளந்தண்டு மற்றும் நரம்புக்குழாய் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றுகின்றது. இதன் பற்றுக்குறை ஏற்படுமிடத்து குழந்தைக்கு முள்ளந்தண்டு, நரம்புகள் தொடர்பான நோய்நிலமைகளோ அல்லது குழந்தை இறந்து பிறக்கவோ அல்லது பிறந்த பின் இறக்கவோ அதிக சாத்தியப்பாடு உள்ளது. ஆகவே போலிக்கமிலம் நிறைந்த மாமிச உணவுகளான முட்டை இறைச்சி, தானியங்கள் மற்றும் தாவர உணவுகளான பருப்பு வகை(கடலை, கௌப்பி, பயறு, பட்டாணி), பச்சை இலைவகை, முட்டைகோவா, அவரை, தோடம்பழம், ஆனைக்கொய்யா, வெண்டிக்காய், குடைமிளகாய் போன்ற உணவுகளையும் போலிக்கமில மாத்திரைகளையும் உட்கொள்வது அவசியமானதாகும்.

அயடீன் கர்ப்பகாலத்தில் அவசியம் உணவில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய கனிப்பொருளாகும். கருவுற்றிருக்கும் தாய்மார்களில் அயடீன் பற்றாக்குறை ஏற்படுமானால் கருச்சிதைவு, குழந்தை இறந்து பிறத்தல், மூளை வளர்ச்சி பாதிப்பு, உளவளகுறைபாடு போன்ற பிரச்சினைகள் குழந்தைக்கு ஏற்பட ... அயடீன் அதிகமுள்ள உணவுகளை ... உணவில் சேர்த்துக் ... ருவதை தவிர்த்துக்கொள்ளலாம். மரக்கறி வகைகள, பழவகைகள், கடல் மீன்களான சாளை மீன், நெத்தலி, இறால், சிங்கஇறால், நண்டு, முட்டை மற்றும் அயடீன் கலந்த உப்பு ஆகியனவற்றை உணவில் சேர்த்துக்கொள்வதால் போதுமான அயடீனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காப்பகாலத்தின் போது அதிகளவு தண்ணீர் குடிப்பது மிக நல்லது. அதிகளவு தண்ணீர் குடிப்பதால் கர்ப்பகாலத்தில் ஏற்படும் மலச்சிக்கல், நெஞ்சொவு, சேர்வு, தசைப்பிடிப்பு, உணவு விருப்பமின்மை, தலைவலி போன்ற உபாதைகளிலிருந்து விடுபட உதவியாய் அமையும்.

கர்ப்பகால ஆரோக்கியமானது உணவு பழக்கவழக்கத்தில் மட்டுமல்ல தாயின் அன்றாட வாழ்க்கை முறையிலும் தங்கியுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்கள் புகைப்பதையும் மதுபானம் அருந்துவதையும் முற்றாகத் தவிர்க்க வேண்டும். கர்ப்பிணித்தாய்மார்கள் புகைப்பதால் பிறக்கும் குழந்தையானது எடை குறைவாகவோ, குறைமாதக் குழந்தையாகவோ, இறந்தோ பிறக்க அதிக வாய்ப்புள்ளது கர்ப்பகாலத்தில் மதுபானம் அருந்துவதால் குழந்தையின் உடல் மற்றும் மன வளர்ச்சி நேரடியாக பாதிப்படையும்.. அத்தோடு தேநீர், கோப்பி, மென்பானங்கள் மற்றும் சொக்லேட் போன்ற உணவுகளை அதிகளவில் தவிர்ப்பதும் மிக சிறந்தது. இவ் உணவுகளை அதிகம் உட்கொள்வதால் பிறக்கும் குழந்தைகள் குறைந்த எடையுடனும் குறைபாட்டுடைய குழந்தைகளாகவும் பிறக்கிறார்கள்.

கர்ப்பிணித்தாய்மார்கள் உடற்பயிற்சி செய்வது அவசியமானதாகும். சாதரணமான வீட்டு வேலைகளை கர்ப்பகாலம் முழுவதுமே செய்யலாம். தினமும் கர்ப்பகாலத்தில் நடைப்பயிற்சி செய்வது நல்லது. உடற்பயிற்சி செய்வதால் எலும்புகள் தசைகள் பலமடைவதோடு பிரசவத்தை இலகுவாக்கவும் உதவும் அதாவது குழந்தை சரியான நிறையில் பிறப்பதற்கும், கர்ப்பகாலத்தின் போது ஆரோக்கியமாக இருப்பதற்கும், சுகப்பிரசவத்துக்கும் உதவும்.

எனவே கர்ப்பகாலத்தில் தாய் சரியான உணவு பழக்கவழக்கங்கள் மூலமும் மற்றும் பொருத்தமான வாழ்க்கைமுறையினை கடைப்பிடிப்பதன் மூலமும் முறையான ... செய்வதன் மூலமும் ஆரோக்கியமான குழந்தையை பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீருடையும் சீர்கேடும்

வலிகாமத்தின் ஒரு பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு மதுபோதையில் பொது இடங்களில் நடமாடுவோரைக் கண்ணிலும் காட்டக் கூடாது. அவர்கள் ஜீப்பில் ஏற்றிச் செல்லப்பட்டு வெளிவெட்டைகளில் இறக்கிவிடப்படுவர். பிரபல பாடசாலை ஒன்றின் ஆசிரியர் இருவர் மதகு ஒன்றில் குந்தியிருந்தனர். வந்து நின்ற ஜீப்பைக் கண்டதும் "வி ஆர் ரீச் சேர்ஸ்", "ஐ ஆம் எ ஜேப்பி" வயிற்றில் இறங்கியிருந்த புளித்த கள்ளில் தோய்ந்த ஆங்கில வாக்கியங்கள் வாயிலிருந்து தள்ளாடி வந்தன. "ஜேப்பி எண்டாலும் நாய்ப்பி எண்டாலும் ஏறுங்கோ ஜீப்பிலை." இருவரையும் ஏற்றிச்சென்று வயல்வெளியில் இறக்கிச் சென்றனர். இதே பொலிஸ் அதிகாரி வடமராட்சிப் பிரதேசத்துக்கு மாற்றலாகிச் சென்ற இடத்தில் கைத்தறி நெசவுக்குச் சென்று வரும் ஏழையுவதியை குடையும் செருப்புமின்றி வெயிலில் வருவதாக" கேலியாக பரிதாபப்பட்ட இளைஞனை அழைத்து அவனது பணத்திலேயே செருப்பும் குடையும் வாங்கிக் கொடுக்கச் செய்தார். இவை அந்த நாள் சங்கதிகள்.

அண்மையில் வடமராட்சிப் பகுதியில் பெண் ஒருவர் உடைந்த போத்தலையும் கையில் பிடித்தபடி தெருவில் அட்டகாசம் புரிந்தார். அதுவும் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக. கண்ணுக்குக் குளிர்ச்சி என பொதுசனத்துடன் பொலிஸாரும் வேடிக்கை பார்த்தனராம். வேறு ஒரு பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வந்தது குத்து வெட்டு. அடிதடி என. வாகன வசதி இல்லையென்று பொலிஸார் மறுநாள்தான் போனார்களாம். இன்னொரு பொலிஸ் பிரிவில் இரு வாள்வெட்டுக் குழுக்களையும் பொலிஸாரே சமரசப்படுத்தி வைத்தனராம். வாள்களின் ரிஷிமூலத்தை, நதிமூலத்தை அறிய முடியாதிருக்கிறதாம் பொலிஸாரால்.

பிள்ளையார் கோவிலையண்டிய ஒரு பிரபல நாற்சந்தி அது. தான் வேலை செய்யும் பொலிஸ் நிலையத்தை நோக்கி சந்தியில் திரும்புகிறார் ஸ்கூட்டியில் பெண் பொலிஸ் ஒருவர். திடீரென அவருக்கு சமீபத்தில் சமாந்தரமாக இளைஞர் ஒருவர் உயர்ரக மோட்டார் சைக்கிளில் வந்து சித்தர் விளையாட்டுக் காட்டுகிறார் ஹெல்மட் இன்றி. பக்கவாட்டில் நெருங்கி வந்து வெட்டித் திருப்புகிறார். ஒவ்வொரு தொழிலுக்கும் அதன் செயற்பாட்டைப் பொறுத்துத்தான் மதிப்பும் மரியாதையும், பயமும் பக்தியும். சீருடைக்கும் இந்த மதிப்புத்தானா? சீர்கேடுகள் களையப்பட வேண்டுமானால் சீருடைகள் சீரடைய வேண்டியது அவசியமாகிறது.

*கி.வே.கிருஷ்ணானந்தன், யாழ்ப்பாணம்*

## வாசகர் திருமுகம்



## வீதிக்கு விமோசனம் கிடைக்காதா?

முல்லை வீதியிலிருந்து காட்டா விநாயகர் ஆலய வீதியூடாக நெடுங்கேணி செல்லும் வீதியானது திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக உள்ளதால் வாகனங்கள் ஊஞ்சல் ஆடியபடியே செல்கின்றன. அத்துடன் மழை நேரங்களில் வீதியை மூடி நீர்பாய் வதால் பிரயாணிகள் இடர்படுகின்றனர். இவ்வீதியால் போக்குவரத்து சேவையும் இடம்பெறுவதால் இவ்வீதி உடன் திருத்தப்பட வேண்டும் என் பது மக்களின் கருத்தாகும். இவ்வாண்டிலாவது இதனை விரைவாக திருத்தித்தர வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

*ம.செந்தூரன், முள்ளியவளை.*

## பிரதேச சபையினரின் கடமை

குண்டும் குழியுமாகச் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட சுன்னாகம் நகரில் அமைந்துள்ள புனித அந்தோனியார் வீதி புனரமைக்கப்பட்டுள்ளதைக் கண்ட போது மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்த வீதியின் மோசமான நிலை தொடர்பாக உதயன் பத்திரிகையின் வாசகர் திருமுகம் பகுதியில் வாசகர் ஒருவர் வருத்தம் தெரிவித்து எழுதியிருந்த நிலையில் மேற்படி வீதி புனரமைக்கப்பட்டுள்ளமை இரட்டிப்பு மகிழ்ச்சி தருகின்றது.


இதற்காக வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இதேவேளை சுன்னாகம் ஐயனார் ஆலயத்துக்கு முன்புறமாகச் செல்லும் வீதியின் நிலைதான் மோசமான நிலையில் காணப்படுகின்றது. அதிலும் ஆலயத்தின் வடக்குப் பக்கமாக உள்ள வீதியில் மழைபெய்யும்போது வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள்இடர்களை எதிர்கொள்கின்றனர். ஆலயத்துக்குக் கிழக்குப் புறத்தில் அமைந்துள்ள வீதியும் சேதமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. கடந்த மாதம் இந்த வீதி கிரவல் மண்ணால் தற்காலிகமாகச் சீர் செய்யப்பட்ட போதிலும் அண்மையில் பெய்த மழை காரணமாக மீண்டும் ஓரளவு பழைய நிலைக்கு வந்துள்ளது. இனி வருவது மாரி காலம் என்பதால் அதற்கு முன்னர் இந்த வீதியைச் சீரமைத்து வழங்குவது நல்லது. மேலும் வேறு சில வீதிகளும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

பிரதேச சபையினர் இந்த வீதிகளையும் புனரமைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

*மா.ஜெயபாலன், சுன்னாகம்*

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

## மொழியைக் கற்றுக் கொள்ளுங்கள் முடிந்தால் தமிழர மனதை வெல்லுங்கள்

இலங்கையில் தமிழர்களின் உரிமைக்கான போர் 30 வருடங்களாக நீடித்ததற்கு மொழிப் பிரச்சினையே முக்கிய காரணம் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவரத்தன கூறியிருக்கிறார்.

இலங்கையில் தமிழ் மக்கள் தமது உரிமை, சுதந்திரம், அடிப்படை உரிமைகள் கிடைக்கப்பெறாததனால் வாழும் உரிமைக்காகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தப் போராட்டத்தை தமிழ் மக்களின் – புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்னெடுத்திருந்தார்.

அந்த உரிமைப் பிரச்சினை தீர்க்கப்படாது 30 வருடங்களாக இழுபட்டு வந்ததுக்கு பிரதான பிரச்சினையாகவே மொழிப் பிரச்சினையை அவர் கூறியிருக்கிறார். முன்னைய காலத்தில் வந்தவர்கள் அது பற்றிய ஆராய்வைச் செய்திருக்கவில்லை என்று கூறுவதனை அவர்கள் மறுக்க முடியாது.

தற்போது புலிகள் செயலற்றுப் போன நிலையில் இத்தகைய கருத்தை அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்து கூறியிருக்கிறார். தமிழர்கள் சிங்கள மொழியையும் சிங்களவர்கள் தமிழ் மொழியையும் கற்றிருத்தல் வேண்டும். மொழியின் ஊடாக ராணுவத்தினரும், சிங்கள மக்களும் தமிழர்களை வெல்ல முடியும் என்றும் அவர் கூறியிருக்கிறார். இந்தக் கருத்து எந்தளவுக்கு சாத்தியப்படும் என்பதற்கப்பால் அதனை சிங்களவர்கள் எந்தளவுக்கு சாத்தியப்பட வைப்பர்? என்பது மிகப் பெரிய கேள்வியாகவுள்ளது.

தமிழர்களின் உரிமைகள் வெல்லப்பட மொழி அவசியம். எமது உரிமைகள், பிரச்சினைகளை உரக்கக்கூறித் தீர்வைப் பெறவேண்டும் என்ற பெருவிருப்பு இருந்து கொண்டிருக்கிறது. அதனைச் செயற்படுத்த வேண்டியவர்கள், செயலுருவுக்குக் கொண்டுவரவேண்டியவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காது அந்தப் பிரச்சினைகள் தீரப் போவதில்லை.

மொழி ஆற்றலை வளர்க்க தமிழ் மக்கள் தரப்பால் ஏதோ இயன்றளவு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாடசாலைகளில் ஒரு பாடமாகவும் தற்போது அது கற்பிக்கப்படுகிறது. அதனை மாணவர்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். அதற்கு ஆசிரியர், பெற்றோர் விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

மொழி தொடர்பில் வடக்கிலுள்ள ஆர்வம், செயற்பாடுகள் தென் பகுதியில் எந்தளவுக்கு உண்டு? அங்கு இதனை எந்தளவுக்கு நடைமுறைப்படுத்துகிறார்கள் என்பதில் தெளிவிருப்பதாகத் தெரியவில்லை.

பொதுவாக தமிழ் மக்களில் அரச உத்தியோகத்திலுள்ளவர்கள், குறிப்பாக உயர் மட்டத்திலுள்ளவர்களில் அநேகரும் சிங்கள மொழியைக் கற்றுள்ளனர். தவிர கொழும்புக்குக் கூட்டம் என்று அழைக்கப்பட்டு தனிச் சிங்கள மொழியில் கூட்டம் நடத்தப்படுகிறது.நிர்வாக விடயங்களுக்கு அது பெரிதும் உதவுவதால் அதனை அவர்கள் ஏதோ தெரிந்து வைத்திருக்கின்றனர்.

தமிழ், சிங்கள மொழிகள் தேசிய மொழிகள் என்று ஜனாதிபதி, அமைச்சர்கள் உள்ளிட்ட பலரும் கூறிவருகின்றனர். அது இன்றுவரை எழுத்தில் மாத்திரமே உள்ளது. எவரும் அதனை அக்கறையோடு, பற்றுறுதியோடு செய்திருக்கவில்லை என்பதே உண்மை. இன்றுகூட சில திணைக்களங்களில் இருந்து தனிச் சிங்களத்திலேயே கடிதங்களும், சுற்றறிக்கைகளும் வருகின்றதனைக் காணமுடிகிறது.

தவிர தென்பகுதிச் சிங்கள அதிகாரிகள் தமிழ் மொழியை எந்தளவுக்குத் தெரிந்து வைத்திருக்கின்றனர்? அவர்கள் தமிழ் மொழியில் உரையாடுவது எந்தளவுக்கு உள்ளது என்று பார்த்தால் மிகக் குறைவான சமிக்ஞையே தெரியவரும். அங்குள்ள சிங்கள அதிகாரிகள் தமிழைக் கற்பதில் ஆர்வம் காட்டியிருக்கவில்லை. அங்கு தேவையுமிருக்கவில்லை. காரணம் ஆட்சி மொழி சிங்களமாகவுள்ளது.

தமிழ் மொழியிலும் அனைத்துச் சுற்றறிக்கைகளும் வரவேண்டுமெனத் தமிழர் தரப்பால் கோரப்படுகிறபோதும் ஏனோதானோ என்று உள்ளது.

இந்நிலையில் போர் தொடர மொழிப்பிரச்சினையே காரணம் என்பது உண்மை என்றாலும் அதனைச் சரிப்படுத்த வேண்டிய தென்பகுதி – சிங்கள மக்கள், அதிகாரிகள், அரசியல் வாதிகள் தமிழை எந்தளவுக்குத் தெரிந்து வைத்துள்ளனர். வடக்கு, கிழக்கு வந்து நிகழ்வில் தொடக்கத்தில் வணக்கம் என்றும் முடிவில் நன்றி என்றும் தமிழில் கூறுவதனால் மாத்திரம் தமிழைத் தெரிந்து வைத்துள்ளீர்கள் என்று எடுக்க முடியாதுதானே. அரசியலுக்காக நீங்கள் அவ்வாறு கூறுகிறீர்கள் என்பது பலருக்கும் தெரியும். எனவே செயலில் காட்ட முன்வர வேண்டும்.

இங்குள்ள பிரச்சினை தீர்க்கப்படாதிருக்க சிங்கள மக்கள் – சிங்கள அரசியல்வாதிகளே காரணம். தமிழர் உணர்வு, பிரச்சினைகள், எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றை சிங்களவர்கள் புரிந்து கொண்டிருக்கவில்லை. அதற்கு தமிழ் மொழியைத் தெரிந்திருக்கவில்லை என்பது மிகப்பெரும் உண்மை. அதனை எவராலும் மறுத்து விட முடியாது. தமிழ் மக்கள் சிறுபான்மையினனராகவே உள்ளனர். தமிழர்கள் என்னதான் நடவடிக்கை எடுத்தாலும் அதனை நெறிப்படுத்த வேண்டியது சிங்களவரகள். ஆனால் அதனை அறிந்து கொள்ள முடியாதளவுக்கு சிங்களவர்கள் தமிழ் மொழியைக் கற்றிருக்கவில்லை. எதுவும் கலந்துரையாடுவதனூடாகவே நல்ல முன்னேற்றத்தைக் காணமுடியும். அது சிங்களவர்களைப் பொறுத்த வரையில் நடக்கவில்லை.

தமிழர் மனங்களை வெல்வதென்பதனைச் சாதாரணமாகவே இன்றுவரை சிங்களவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது நடைமுறைக்குச் சாத்தியமில்லை. தமிழர்கள் மிகத் தெளிவாகவே உள்ளனர். எனவே சிங்களவர்கள் முதலில் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ளுங்கள். தீர்வுக்கு அதுவே வழிவகுக்கும். அதேநேரம் தமிழர்கள் சிங்களத்தைக் கட்டாயம் கற்றிருக்க வேண்டும். ஏனிமேலாவது கற்க வேண்டும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போர்க் குற்ற விசாரணையை மழுங்கடிக்க புதுவித வியூகங்களைத் தொடரும் போக்கு

இந்த நாட்டில் நடைபெற்ற -- நடத்தப்பட்ட -- போரின் இறுதிக் கட்டத்தின்போது, இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாதத்தைய அமர்வுக்கு முன்னர் உள்நாட்டுப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படும் --

எமது உள்நாட்டுப் பொறிமுறை, இலங்கைக்கு எதிரான நடவடிக்கையைத் தடுக்கும் திட்டமாகவே அமையும் --

அத்தோடு, எங்கள் நாட்டில் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை அரசு பதில் அளிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் -- என்று விளாசி உள்ளார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

போரின்போது ஆயிரம் பேரோ அல்லது நாற்பதாயிரம் பேரோ இறந்தார்கள் என்பது குறித்து எமக்குத் தெரியாது. ஆனால் இலங்கை மீதான குற்றச்சாட்டுக் குறித்து, உள்நாட்டு விசாரணையை நடத்தி, அனைத்துலகத்துக்குப் பதில் வழங்க வேண்டும் -- என்றும் உறுக்கிக் கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கடந்த மார்ச் மாதக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட இருந்த, இலங்கையின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த, நிபுணர்கள் குழுவின் அறிக்கை வெளிவராமல் தடுப்பதில், இலங்கையின் புதிய அரசு தந்திரமாக வெற்றி கண்டமை உலகு அறிந்த உண்மை.

இலங்கைத்தமிழ் மக்கள், பல்லாயிரக் கணக்கில், போர் என்ற போர்வைக்குக் கீழ் கொன்று ஒழிக்கப்பட்டமை அனைத்துலகமும் அறிந்த ஒன்று.

அது குறித்து, ஐ.நா. சபை நேர்மையுடனும், நடுவுநிலைமையுடனும் விசாரணை நடத்தும் என்ற எதிர்பார்ப்பு, உலகளாவிய ரீதியில் நிலவியது. ஆனால் கொழும்பில் பதவிக்கு வந்த புதிய அரசு, அதனை நரித்தந்தி ரத்துடன் பின் தள்ளியது. தனது தரப்பின் குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்குக் கங்கணம் கட்டியது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் மாதம் ஆராயப்பட இருந்த போர்க் குற்ற விவகாரம், ஏதேதோ சுத்துமாத்துகள் முன்னெடுக்கப்பட்டு, வரும் செப்ரெம்பர் மாதத்துக்குப் பின் தள்ளப்பட்டிருக்கிறது அதன் விளைவு --

இந்த நாட்டின் புதிய அரசு, தனது தந்திரோபாயம் வெற்றி அளித்ததாகக் கருதி, கர்வத்துடன் செயற்படும் நிலைக்கு களமிறங்கிச் செயற்படுகிறது.

ராஜபக்ஷ அரசைவிடக் கர்வம் நிறைந்த போக்கில், புதிய அரசு, போர் என்ற போர்வையில் தமிழ் மக்களைக் கொன்று ஒழித்ததை நியாயப்படுத்தும் வகையில் --

உள்நாட்டுப் பொறிமுறை என்ற போர்வையின்கீழ் செயற்பட முனைகிறது என்பது மிக வெளிச்சமாக மின்னுகிறது.

மனிதாபிமானம் என்றால் துட்டுக்கு எத்தனை என்று கேட்கும் அளவுக்கு, இந்த நாட்டின் ஆட்சிக்கட்டில் ஏறும் சகல சிங்கள அரசுகளும் உடம்புகளில் வெளியே ஒரேவித தோற்றத்தைக் கொண்டிருந்தாலும், உள்ளூர கறுத்து அழுத்துப்போன, வெறித்துப் புளித்துப்போன குரோதம் இரத்தமே ஓடுகிறது என்பதை இது புலப்படுத்துகிறது.




# இலங்கையில் இருந்து ஓரம் கட்டப்பட்டுள்ள சீனா

சீனாவின் புதிய துறைமுக நகரத் திட்டமானது சூழல் சார் சட்டங்களை மீறுகின்றதா அல்லது மோசடிகளைக் கொண்டுள்ளதா போன்றவற்றை ஆராய்வதற்காக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் இடம்பெறும் என சீனா எதிர்பார்க்கவில்லை என ஹைலஸ் நிறுவனத்தின் மூத்த பொருளியலாளர் டெசால் டீ மெல் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷவுடன் நெருங்கிய தொடர்புடைய விமானநிலையமானது சீனா தனது முதலீடு தொடர்பாக பல தடவைகள் சிந்தித்துச் செயற்படுவதற்கான சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் அரசு பதவிக்கு வந்தவுடன் சீனாவின் போட்டியாளர்கள், இலங்கையுடன் நட்புறவைப் பேண விரைந்துள்ளனர்.

உள்நாட்டுப் போரை 2009இல் முடிவுக்குக் கொண்டு வந்த ராஜபக்ஷவுடன் இந்தியாவும் அமெரிக்காவும் சுமுகமான உறவைப் பேணவில்லை.

அதிகளவில் தமிழ் மக்களைக் கொண்ட இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் ராஜபக்ஷ அரசினால் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி ஐ.நா மனித உரிமைகள் சபையில் முன் வைக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருந்தன.

போர்க் காலத்தின் போது சீனா ராஜபக்ஷவுக்கு இராணுவ மற்றும் இராஜதந்திர உதவிகளை வழங்கியிருந்தது.

இலங்கை ஜனாதிபதியின் பதவிக் காலத்தை வரையறுத்ததுடன், நாடாளுமன்றுடன் இணைந்து பணியாற்றும் இலங்கை அரசு புதுடில்லி மற்றும் வொஷிங்டனுடன் மிகவும் வலுவான உறவுகளைப் புலப்படுத்தி வருகிறது.

மே 02 அன்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி இலங்கைக்கான தனது அரச முறைப் பயணத்தை மேற்கொண்டபோது, ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்காக இலங்கை அரசினால் காண்பிக்கப்படும் ஈடுபாட்டைப் பாராட்டியிருந்தார்.

கடந்த பத்தாண்டில் அமெரிக்க அமைச்சரவை உறுப்பினர் ஒருவர் முதன் முதலாக இலங்கைக்குப் பயணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையுடன் இணைந்து அமெரிக்கா பணியாற்ற விரும்புகிறது எனவும் ஜோன் கெரி தெரிவித்திருந்தார்.

கடந்த மார்ச் மாதத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கான தனது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தார். இவர் 1987இன் பின்னர் இலங்கைக்குப் பயணம் செய்த முதலாவது இந்தியத் தலைவராவார்.

இந்தியப் பிரதமர் சிறிலங்காவில் தங்கியிருந்த நாள்களில் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் கலாசார மற்றும் மத சார் தொடர்புகள் தொடர்பாக வலியுறுத்திக் கூறியிருந்தார். புத்தர் சமாதியடைந்த இடத்திலுள்ள பௌத்த விகாரையை பார்வையிட்டதுடன் வழிபாடுகளையும் மேற்கொண்டிருந்தார்.

மின் ஆலைகள் மற்றும் ரயில் பாதைகள் போன்றவை அமைப்பதற்கான நிதியை வழங்குவதாகவும் மோடி உறுதியளித்திருந்தார். இவரது பயணத்தின் போது இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு தரப்பும் 1.5 பில்லியன் டொலர் நாணய மாற்றம் தொடர்பாகவும் உடன்பாடு எட்டப்பட்டது.

மோடியினுடைய துரிதமான செயல் திறன் மிக்க இராஜதந்திரமானது சீனாவிடமிருந்து சிறிலங்கா விலகுவதற்கு உதவியுள்ளது. இதன்மூலம் வர்த்தக மற்றும் இராணுவ உதவிகளினால் தன்னால் கையாளப்படும் முயற்சிக்கப்பட்ட மற்றும் உண்மையான தந்திரோபாயங்களினால் வெற்றிகொள்ள முடியாது என்கின்ற பாடத்தை சீனா கற்றுக் கொள்ள வேண்டும் என ஆய்வாளர் கதிரா பெதியாகொட தனது பத்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு கட்டுமான உதவிகள் தேவையாக உள்ள அதேவேளையில் சீனாவானது இந்தியாவை விட அதிக நிதியைக் கொண்டுள்ளது. சீன ஆதரவு ஆசிய கட்டுமான முதலீட்டு வங்கியுடன் சிறிலங்கா உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டுள்ளது.

நிதித் தேவைகளுக்காக இந்தியா கூட சீனாவின் உதவியை நாட வேண்டி ஏற்படும் என கொழும்பிலுள்ள கொள்கைக் கற்கைகளுக்கான நிறுவகத்தின் பிரதி இயக்குநர் டுஸ்னி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

சீனா உடனடியாக சிறிலங்காவிலிருந்து விலகிச் செல்லும் என நான் கருதவில்லை. சீனாவுடன் ராஜபக்ஷ நெருங்கிப் பழகியதை விட சிறிசேன குறைவான ஆர்வத்தையே காண்பிக்கிறார். சிறிசேனவின் நிர்வாகத்துடன் சீனா மகிழ்ச்சியான தொடர்பைப் பேணும் என சிட்னிப் பல்கலைக்கழகத்தில் வெளியுறவுக் கோட்பாடு தொடர்பாகக் கற்பிக்கும் விரிவுரையாளர் சாரா கிரகம் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விரு நாடுகளும் சுதந்திர [illegible]தக ஒப்பந்தம் தொடர்பான இறுதிக் கட்டப் பேச்சுக்களை மேற்கொள்கின்றன என சீனாவின் அரச ஊடகமான சின்குவா ஏப்ரல் 21 அன்று செய்தி வெளியிட்டிருந்தது.

சிறிசேன புதிய நகரத்திட்டம் தொடர்பாக இன்னமும் அனுமதி வழங்கவில்லை, ஆனால் இந்த விடயத்தில் படிப்படியாக முன்னேறுவதற்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என சீனா தற்போதும் நம்புவதாக சீன வெளியுறவு அமைச்சின் பெண் பேச்சாளர் குவா சன்ஜிங், மே 06 ஆம் திகதி இடம்பெற்ற ஊடக மாநாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

துறைமுக நகரத்திட்டம் தொடர்பான சூழல் சார் ஆய்வில் ஈடுபட்டுள்ளதாக சிறிலங்கா முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது. இது சீன[illegible]கான பங்களிப்பைத் தடைசெய்யவில்லை.

ராஜபக்ஷவுடனான அனுபவமானது சீனத் தலைவர்களுக்கான பாடமாக அமைய வேண்டும் என வொஷிங்டனிலுள்ள குட்சன் நிறுவகத்தின் மூத்த ஆய்வாளர் ஜோன் லீ குறிப்பிட்டுள்ளார்.

மூலோபாய உறவுநிலையை வளர்த்துக் கொள்வதானது சாதாரணமானதல்ல. இவை மிகவும் நடைமுறை சார்ந்தவை. உறுதியானதாக இருக்க வேண்டும். அப்போது அவை மேலும் சிறப்பாக அமையும் என ஜோன் லீ சுட்டிக்காட்டியுள்ளார்.

**நன்றி – புதினப்பலகை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோரிக்கைகளை ஏற்றால்



# மீண்டும் கட்சியில் இணைவேன்

## சோமவன்ச தெரிவிப்பு

ஜே.வி.பி.கட்சியிலிருந்து பிரிந்து சென்றமை, அண்மையில் முன்னெடுத்திருந்த உண்ணாவிரதப் போராட்டம் மற்றும் சமகால அரசியல் நகர்வுகள் தொடர்பில் முன்னாள் ஜே.வி.பி. கட்சித் தலைவரும், அண்மையில் அக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவருமான சோமவன்ச அமரசிங்க உதயனின் சகோதர பத்திரிகையான 'சுடர் ஒளி'க்கு வழங்கிய விசேட செவ்வி இங்கு தரப்படுகிறது.

கேள்வி:– ஜே.வி.பி. கட்சியின் முன்னாள் தலைவராகவும் பிரதான செயற்பாட்டாளராகவும் இருந்த நீங்கள் திடீரென கட்சியிலிருந்து விலகியமைக்கு உண்மையான காரணம் என்ன?

ப:– நிச்சயமாக இலங்கையில் தடை செய்யப்பட்டிருந்த ஜே.வி.பி. கட்சியை பிரதான அரசியல் கட்சியாகப் பரிணாமம் அடையவைப்பதற்கு எனது பங்களிப்பு அளப்பரியது.

சகோதரர் ரோஹன விஜயவீர இக் கட்சியை ஆரம்பித்த நாள் முதல் எமது கட்சிக்கென்று கைவிடப்படாத கொள்கைகள் பல இருந்தன. அவை நிறைவேற்றப்பட்டுவந்த போதிலும் அண்மைக்காலமாக ஜே.வி.பி. கட்சி கொள்கை மறந்து செயற்படுகின்ற நிலையை உணரக் கூடியதாக இருந்தது.

ஜனநாயகமும் ஜே.வி.பி. கட்சியும் ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்துள்ளன. நாங்கள் ஜனநாயகத்துக்காக 1973 – 1994க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பல்வேறு கிளர்ச்சிகளை முன்னெடுத்திருந்தோம். இதனால் ஏராளமான உயிர்களை நாங்கள் இழக்கவேண்டி ஏற்பட்டது.

1994ஆம் ஆண்டு நாங்கள் தடை செய்யப்பட்டிருந்த நிலையில், அரசியலுக்குள் பிரவேசித்து ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் நாங்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதற்கெதிராகக் குரல் கொடுத்தோம். நாட்டு நடப்பு அரசியலுடன் சேர்ந்து போகக்கூடிய வகையில் நாங்கள் எம்மைத் தயார்படுத்தியமையினாலேயே எமக்கு அரசியலை சிறந்த முறையில் முன்னெடுத்து நாடாளுமன்றத்தில் 42 உறுப்பினர்களை 2004 ஆம் ஆண்டு எம்மால் பெறமுடிந்தது.

இதுபோன்று ஜனநாயகத்தைக் கேள்விக்குறியாக்கும் சம்பவம் இடம்பெறும்போது அதனைத் தட்டிக் கேட்கும் நிலைப்பாட்டில் நாங்கள் பலமாக இருந்தோம்.

இவ்வாறான கொள்கைப் பின்னணியைக்கொண்ட ஜே.வி.பி., கடந்த தேர்தலின் பின்னர் நடந்துகொண்ட முறை எமக்கு ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அதாவது, ஜனவரி 9ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்ட சகாக்களினால் நாட்டுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் சூழ்ச்சி அம்பலமாகியது.

ஜனநாயகத்துக்காக அரசியலை மேற்கொள்ளும் ஜே.வி.பி. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சாந்தமாக இருக்க முடியுமா? நிச்சயம் அதனை எமக்கு ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பில் நியாயமான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என அரசை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருக்க வேண்டும். நான் இதனைச் செய்யுமாறு கட்சித் தலைமைப் பீடத்தில் தெரிவித்தேன். எனினும், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

எனினும், நான் எனது போராட்டத்தை அன்று முதல் ஆரம்பித்தேன். ஜனவரி 19ஆம் திகதி ஜனாதிபதிக்கு இது தொடர்பில் கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தேன். இதில் நாட்டுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையெனில் நான் மரணிக்கும் வரை உண்ணாவிரதம் இருப்பதாகத் தெரிவித்திருந்தேன்.

இதனை எனது கட்சியினரின் தலையீட்டால் மேற்கொள்ள முடியாது போனது. அது மட்டுமல்லாது, எனது கருத்துகளுக்கான சரியான முடிவை கட்சி எடுக்கவுமில்லை.

கே:– அவ்வாறெனில், உங்களைக் கட்சியிலிருந்து ஒதுக்கிவைத்துவிட்டா, கட்சி விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன?

ப:– கட்சியிலிருந்து ஒதுக்கி வைத்தார்கள் என்று கூற முடியாது. ஆனால் எனது கருத்துகளையே அவர்கள் ஒதுக்கினார்கள். பொதுவாக கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டங்களில் முக்கிய விடயங்கள் ஆராயப்படும்போது அநேகமானவர்கள் எக்கருத்தில் உள்ளார்களோ அதற்கே முன்னுரிமை வழங்கப்படும். ஆனால் தற்போது அதற்கு மாற்றமான நிலையே காணப்படுகின்றது.

அதுதவிர, ஜே.வி.பியின் வரலாற்றில் எவ்வாறான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் இடமாக மத்திய செயற்குழு உள்ளது. இதில் தீர்வு எட்டப்படாது கூட்டம் நிறைவடையாது.

எனினும், இந்த நிலை தற்போது உரு வாகியுள்ளது. என்னால் முன்வைக்கப்பட்ட மேற்குறிப்பட்ட விடயம் தீர்வு காணப்படவில்லை. இதனால் இதனை வெளியில் பேச வேண்டிய நிலை ஏற்பட்டது.

கட்சிக் கட்டுக்கோப்புக்கு அமைய கட்சி தீர்மானித்த பின்னரே வெளியில் பேச முடியும். எனினும், தற்போது ஜே.வி.பி. கட்சிக்குள் தீர்மானம் எடுக்கமுடியாத செயற்குழு காணப்படுகின்றமையினால் இது தொடர்பில் நாங்கள் நாட்டுக்குத் தெரிவிக்கவேண்டியது எமது கடமையாகும். ஏனெனில், இது நாட்டுக்கு எதிராகவும், ஜனாதிபதிக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சியாகும். இதனை எமக்கு மறைக்க முடியாது.

இதேபோன்று நான் கட்சியிலிருந்து வெளியேறுவதற்கு மற்றுமொரு காரணமும் உள்ளது. அதாவது, இந்நாட்டில் நல்லாட்சி உருவாக்கப்பட்டுள்ளது. இது எமது நாட்டில் ஏற்கனவே இனங்களுக்கிடையில் இருந்தது. ஆகவே, எமது கட்சி இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் வேலைத்திட் டங்களை முன்னெடுக்க அதிதீவிரம் காட்ட வேண்டும் என்று நான் 2002ஆம் ஆண்டிலேயே கருத்துத் தெரிவித்ததுடன், இதனைக் கடந்த காலங்களில் வலியுறுத்தியும் வந்தேன். ஆயினும், இதுவும் பேச்சளவிலேயே எமது கட்சியினால் முன்னெடுக்கப்பட்டது.

கே:– இதற்குக் காரணம் அநுர குமாரவின் தலைமைத்துவத்தில் குறைபாடுகள் உள்ளன என்றா கருதுகிறீர்கள்?

ப:– தலைமைத்துவத்தில் மட்டுமல்ல, மத்திய செயற்குழுவிலும் பெரும் குறைபாடுகள் உள்ளன. இதனாலேயே எமது கட்சி கொள்கை மறந்து செயற்படுகின்றது எனலாம். ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுகின்றது. அவரை இலக்குவைத்து 3 தடவைகள் கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் எவருக்கும் எந்தவித கரிசனையும் இல்லை. எனினும், அவர் நாட்டுக்கும் எமக்கும் கிடைத்த அருட்கொடையாகும்.

அண்மையில் மைத்திரி கலந்துகொண்டிருந்த கூட்டத்தில் துப்பாக்கியுடன் இராணுவச்சிப்பாய் ஒருவர் நடமாடியிருந்தார். அவரது பின்னணியில் அரசியல் சூழ்ச்சி நிச்சயம் உள்ளது.

அவருக்கு ஏதேனும் இடம்பெற்றால் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதி ஆசனத்தில் அமருவார். எனினும், அதிலும் சிக்கல்நிலை உள்ளது.

அண்மையில் இது தொடர்பில் நான் மேற்கொண்ட போராட்டத்தின் பின்னர் ஜனாதிபதியின் பாதுகாப்பில் மாற்றம் செய்யப்பட்டதுடன், எம்பிலிபிட்டிய விவகாரமும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வாறு தமது கொள்கையில் உறுதியாக ஜே.வி.பியினர் இருக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் விருப்புக்கமைய செயற்படுவதல்ல எமது கொள்கை. ரணில் விக்கிரமசிங்கவுக்கும் – அநுர குமாரவுக்குமிடையில் இரகசியத் தொடர்புள்ளதாகப் பலர் தெரிவிக்கின்றனர். அதில் எந்தளவு உண்மைத்தன்மை உள்ளது என்பது எனக்குத் தெரியாது. எனினும், அவ்வாறான ஒரு கருத்து பரவும் வகையில் கட்சித் தலைவர் ஒருவர் செயற்படுவது தவறாகும்.

மஹிந்தவின் சூழ்ச்சி தொடர்பில் மங்கள சமரவீர முறைப்பாடு செய்துள்ளதாக அநுர குமார தெரிவிக்கின்றார். ஏன் அதனை அவரால் மேற்கொள்ள முடியாதா? அதுவா தலைமைத்துவம்?

1994 – ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக் கொண்ட ஜே.வி.பி. 2000 ஆம் ஆண்டு 10 ஆசனங்களைக் கைப்பற்றியது. 16 ஆசனங்களை 2001 ஆம் ஆண்டு பெற்றதுடன், 2004ஆம் ஆண்டு 42 ஆசனங்களையும் பெற்றது. எனினும், தற்போது 3 ஆசனங்களாக வீழ்ச் சியடைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

கே:– நீங்கள் கட்சியிலிருந்து வெளியேறியது கட்சிக்குப் பாதிப்பாக அமையும் எனக் கருதுகிறீர்களா?

ப:– ஜே.வி.பி. கட்சியைப் பொறுத்தவரை ஒருவர் வெளியேறினாலும் அது பெரும் இழப்பாகும். சிலர் எனக்கு வயது போய் விட்டது, என்னால் ஏதும் பயன் இல்லை என்று கருதலாம். எனினும் என்னை நன்கு அறிந்தவர்கள் இவ்வாறு சிந்திக்கவோ – கருதவோ மாட்டார்கள். இதற்கான பதில் மக்களிடமே உள்ளது.

கே:– உங்களை மீண்டும் கட்சிக்குள் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகளை எடுக்கவுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்திருந்தது. அவ்வாறான ஏதும் இடம்பெற்றனவா?

ப:– ஜே.வி.பி. இக்காலப் பகுதியில் பெரிய தவறைச் செய்துள்ளது. எமக்கு அரசியலில் ஈட்டக்கூடிய இலாபம் இதனால் இல்லாது போயுள்ளது. 62 இலட்சம் மக்களும் எங்களுடன் இணையும் சந்தர்ப்பம் அது. இதனைச்சரிப் படுத்தவேண்டும். என்னை மீண்டும் இணைத்துக் கொள்ளவுள்ளதாகத் தெரிவித்திருந்ததுடன் சிலர் என்னை அணுகி பேச்சு நடத்தவும் முன்வந்தனர். எனினும், எனது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை நான் அக்கட்சியில் இணைந்துகொள்ளமாட்டேன். எதிர்காலத்தில் நான் கட்சி ஆரம்பிக்கவுள்ளேன். அக்கட்சி வேண்டுமானால் எதிர்காலத்தில் ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படலாம்.

கே:– மீண்டும் கட்சியில் இணைந்து கொள்வதற்காக நீங்கள் முன்வைத்துள்ள கோரிக்கை என்ன?

ப:– ஜனநாயகத்துக்காக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குரல் எழுப்பிய ஜே.வி.பி., நாட்டுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பெரிய சூழ்ச்சியின் போது மௌனியாக இருந்தமை பெரும் தவறாகும். இதற்கு மக்களிடம் பொதுமன்னிப்புக் கோர வேண்டும். இதனை முறையாக நிறைவேற்றும் பட்சத்தில் நான் மீண்டும் ஜே.வி.பியுடன் இணைந்து செயலாற்றுவதில் ஆட்சேபனை இல்லை. எனினும், இதனை முறையாகச் செய்ய வேண்டும். அதன் பின்னர் அதற்கெதிரான நடவடிக்கைகளில் அதி தீவிரமாக இறங்க வேண்டும்.

கே:–உங்களின் அடுத்தகட்ட அரசியல் நகர்வு எவ்வாறு அமையும்?

ப:– நிச்சயமாக எமது அடுத்தகட்ட அரசியல் நகர்வு பலமாகவும் அதிர்ச்சிகரமானதாகவும் அமையும். இதனை எதிர்காலங்களில் காணக்கூடியதாக இருக்கும். தற்போது நாங்கள் புதிய கட்சி ஆரம்பிப்பதற்கான பேச்சுகளில் இறங்கியுள்ளோம். விரைவில் கட்சியைப் பதிவுசெய்துகொண்டு எதிர்வரும் பொதுத் தேர்தலில் குதிக்கும் நோக்கத்துடன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

நான் ஜே.வி.பியிலிருந்து வரும் போது மற்றவர்களைக் குழப்பிவிட்டு வரவில்லை. எனினும், சிலர் என்னுடன் இணைந்து செயலாற்றுவதாகத் தெரிவித்துள்ளனர். அவர்கள் தொடர்பில் எதிர்காலங்களில் ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.

கே:– பத்தரமுல்ல சீலரத்ன தேரருடன் பேச்சு நடத்தியதாகவும் அவரது ஜனசெத பெரமுன கட்சியில் இணைந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது உண்மையா?

ப:– இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான ஒரு கருத்தாகும். சீலரத்ன தேரர் மீது எனக்கு மரியாதை உண்டு. எனினும், அவர் ஊடக பிரபல்யத்துக்காக இக்கருத்தைப் பரப்பியுள்ளார் என்றே கூறவேண்டும். நான் கட்சியிலிருந்து வெளியேறிய போது பலர் என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு முடிவு குறித்துப் பாராட்டியிருந்ததுடன், எதிர்கால அரசியலுக்காக வாழ்த்துகளையும் தெரிவித்திருந்தனர். எனினும், முதன் முதலாக ஊடகங்களில் வரவேற்று வாழ்த்திய ஒருவர் சீலரத்ன தேரரே. இதற்கு நான் அவரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்திருந்தேன். அவருடன் அரசியல் தொடர்பில் எந்தப் பேச்சும் பேசவேண்டிய அவசியமும் இல்லை. அரசியலில் வங்குரோத்து அடைந்தவர்களே அவரின் கட்சியில் இணைந்து போட்டியிடுவார்கள்.

கே:– அரசுக்கு ஆதரவாகவே நீங்கள் குரல் கொடுத்து வருகிறீர்கள். எதிர்காலத்தில் ஆளும் தரப்புடன் இணைந்து கொள்வதற்காகவா?

ப:– நாங்கள் எதனைச் செய்யப் போகின்றோமோ அதனை முன்கூட்டியே தெரிவிப்போம். சிலர் நான் ஐ.தே.கவுடன் பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இது முற்றிலும் பொய்யான கருத்தாகும். எனது அடுத்தகட்ட அரசியல் நகர்வு நான் குறிப்பிட்டுள்ளது போன்றே இடம்பெறும். அரசுக்காக அன்றி, ஜனாதிபதிக்காகவே நான் குரல் எழுப்பியிருந்தேன்.

மைத்திரிபால சிறிசேன என்பவர் அனைவரினதும் ஜனாதிபதி. அவருக்கு ஏதும் இடம்பெறாமல் தடுப்பது எமது கடமையாகும்.

அரசுக்கு ஆதரவாக ஓர் இடத்திலாவது நான் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மிகவும் கவனமாகவே கருத்துத் தெரிவித்தேன். ஜனாதிபதி என்ற வார்த்தையையே உச்சரித்திருந்தேனே தவிர அரசு என்று கூறவில்லை.

கே:– நீங்கள் அண்மையில் முன்னெடுத்திருந்த உண்ணாவிரதப் போராட்டம் ஏன் நிறுத்தப்பட்டது?

ப:– எனது உண்ணாவிரதப் போராட்டமானது வெற்றியளித்தது என்றே கூற வேண்டும்.

நாட்டுக்கும், ஜனாதிபதிக்கும் எதிராக சூழ்ச்சி செய்தவர்கள் சட்டத்துக்கு முன்நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்படவேண்டும்.

கே:– ஆரம்பிக்கவுள்ள உங்கள் கட்சி தொடர்பில் கூறுங்களேன்?

ப:– இதற்கான முதற்கட்டப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் சில தினங்களில் இதனை உங்களுக்கு அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். நல்லாட்சியைப் பாதுகாப்பதற்காகவும், ஜனாதிபதியைப் பாதுகாப்பதற்காகவும் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இதற்கு இன, மத பேதமின்றி அனைவரும் எங்களுடன் ஒன்றிணைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | | 3 | | | | | |
| 9 | | 7 | 2 | | 4 | | | 3 |
| | | 4 | | 8 | | 9 | | |
| 7 | | 1 | | 3 | | 2 | | 8 |
| | 5 | | | | | | 4 | |
| 6 | | 2 | | 4 | | 5 | | 1 |
| | | 9 | | 1 | | 6 | | |
| 1 | | | 9 | | 5 | 3 | | 4 |
| | | | | | 6 | | 9 | 2 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 3 | 7 | 1 | 8 | 2 | 6 | 9 |
| 9 | 6 | 8 | 2 | 4 | 3 | 5 | 7 | 1 |
| 7 | 1 | 2 | 9 | 6 | 5 | 4 | 8 | 3 |
| 2 | 7 | 5 | 6 | 9 | 4 | 1 | 3 | 8 |
| 1 | 8 | 4 | 5 | 3 | 7 | 6 | 9 | 2 |
| 3 | 9 | 6 | 8 | 2 | 1 | 7 | 4 | 5 |
| 8 | 2 | 1 | 4 | 7 | 9 | 3 | 5 | 6 |
| 6 | 4 | 9 | 3 | 5 | 2 | 8 | 1 | 7 |
| 5 | 3 | 7 | 1 | 8 | 6 | 9 | 2 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# வாழைப்பழத்தை சாப்பிடுவதால் .....



பொதுவாகமுக்கனிகளுள் ஒன்றானவாழைப் பழத்தைச் சாப்பிட்டால், உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்பது தெரியும். ஆனால் அந்த வாழைப் பழத்தைச் சாப்பிட்டால், நன்மைகள் மட்டுமன்றி, சில தீமைகளையும் சந்திக்கக்கூடும் என்பது தெரியுமா? ஆம், எப்போதுமே அளவுக்கு மிஞ்சினால் அது தீமைகளை விளைவிக்கும். அதிலும் எவ்வளவு நல்ல உணவுப் பொருளாக இருந்தாலும், அதனை அளவுக்கு அதிகமாகச் சாப்பிடும் போது, அது உடலுக்குப் பல பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். இங்கு அப்படி விலை மலிவில் கிடைக்கும் மற்றும் தினமும் சாப்பிடும் வாழைப் பழத்தை அளவுக்கு அதிகம் சாப்பிட்டால் சந்திக்கக் கூடிய பிரச்சினைகள் என்னவென்று பார்ப்போம்.

**எடை அதிகரிக்கும்**

உடல் எடை அதிகரிக்க வேண்டுமானால் வாழைப்பழத்தை சாப்பிட வேண்டும். ஏனெனில் இதில் காபோவைதரேற் அதிக அளவில் இருப்பதுடன், கலோரிகளும் நிறைந்திருப்பதால், இது உடல் எடையை அதிகரிக்கும். அதற்காக இதைச் சாப்பிடவே கூடாது என்பதில்லை. இவற்றை தனியாகச் சாப்பிடுவதற்கு பதிலாக, மற்ற பழங்களுடன் சேர்த்து சாப்பிடுவது நல்லது.

**தலைவலி**

ஆம், வாழைப்பழத்தை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டால், அது கடுமையான தலைவலியை ஏற்படுத்தும். ஏனெனில் வாழைப் பழத்தில் தைரமைன் மற்றும் பீனை எத்திலமைன் என்னும் அமினோ அமிலங்கள் இருப்பதால்,இவைமூளைக்கு இரத்த ஓட்டத்தை அதிக ரித்து, தலைவலியை ஏற் படுத்தும்.

**தூக்கமின்மை**

இரவில் பலருக்கு வாழைப் பழத்தை சாப்பிடும் பழக்கம் இருக்கும்.ஏனெனில்வாழைப் பழம் தூக்கத்தை தூண்டும் சக்தி கொண்டவை என்பதால் தான். ஆனால் இதில் காபோ வைதரேற் அதிகமாகவும், புரோட்டீன் குறைவாக வும் இருப்பதால், இது மூளையில் ட்ரிப்டோஃபேனை அதிகரிக் கும். இதன் மூலம் உடலானது தூக்கத்தைக் கெடுக்கும் செரடோனின் மற்றும் மெலடோனின் போன்றவற்றை உற்பத்தி செய்து விடும். எனவே இரவில் அளவுக்கு அதிகமாக வாழைப் பழத் தைச் சாப்பிட வேண்டாம்.

(தொடரும்...)

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## வாழும் வரை போராடு

அறிவோடு ஒன்றி விடு. அப்போது தான் பிழைகளை அகற்ற முடியும்.

அன்பின் மூலமாகச் செய்யும் செயல்க்ள் அனைத்தும் ஆனந்தத்தைத் தரும். உன்னை நேசி. அதுவே வளர்ச் சிக்கான வாசலைத் திறக்கத் துணைபுரியும்.

ஒன்றை இழுத்துக் கொள்ளும் சக்தியைப் போல, விலக்கும் சக்தியும் உன்னிடம் இருக்கிறது. ஒன்றைப் பெற வேண்டும் என்று நினைத்து விட்டால் இறுதிவரைக்கும் போராடி விடு. விளைவுகளைப் பற்றியோ, அதில் ஏற்படும் தோல்வி பற்றியோ கூட கவலைப்படாதே.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 30 | 60 | 30 | 40 | 50 | – |
| கத்தரி | 80 | 40 | 70–90 | 80 | 50–60 | 60 | 80 | 30 |
| கரட் | 100 | 100 | 100–120 | 120 | 100–120 | 160 | 120 | 135 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 60 | 50 | 60 | 60 | 40 |
| பயிற்றை | 100 | 70 | 60–80 | 80 | 70–80 | 40 | 100 | 50 |
| பாகல் | 100 | 100 | 80 | 100 | 80–100 | 120 | 120 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 90 | 80 | 40– 50 | 140 | 100 | 60 |
| பெ.வெங்காயம் | 150 | 120 | 100 | 120 | 110–120 | 140 | 120 | 120 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 60–100 | 100 | 100 | 120 | 80 | 120 |
| பூசணி | 40 | 25 | 40 | 40 | 25–30 | 40 | 40 | 20 |
| தக்காளி | 80 | 80 | 60–80 | 60 | 60–70 | 120 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 | 60 | 40–50 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 40 | 30 | 10 | 30 | 50 | 35 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 40 | 20–30 | 40 | 20 | [illegible] |
| பச்சை மிளகாய் | 40 | 50 | 40 | 50 | 30–40 | 80 | 80 | 30 |
| புடோல் | 70 | 50 | 60 | 60 | 40–60 | 30 | 60 | 40 |
| கோவா | 40 | 50 | 40 | 60 | 30–40 | 80 | 80 | 25 |
| வெண்டி | 100 | 50 | 60–80 | 80 | 80–100 | 80 | 60 | 70–80 |
| போஞ்சி | 120 | 140 | 140 | 140 | 100–140 | 120 | 140 | 135 |
| லீக்ஸ் | 140 | 140 | 160 | 160 | 160–180 | 120 | 120 | 150 |
| தேங்காய் | 60 | 50 | 60 | 50 | 40–60 | 60–70 | 50 | 40–45 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 110 | 90–100 | 120 | 120 | 120 |
| தேசிக்காய் | 180 | 180 | 150–180 | 160 | 180–200 | 200 | 120 | 130 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30–40 | 20 | 20 | 08 |
| குடைமிளகாய் | 80 | 50 | 50 | 100 | 50–60 | 120 | 80 | 40 |
| இராசவள்ளி | 120 | 120 | 140 | 120 | 100–120 | 120 | 160 | – |

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 600 | 600 | 600 | 700 |
| நண்டு | 300 | 400 | 300 | 300 | 200 | 400 |
| கணவாய் | 550 | 550 | 500 | 400 | 400 | 450 |
| பாரை | 500 | 500 | 500 | 600 | 500 | 400 |
| சுறா | 600 | 450 | 500 | 700 | 800 | – |
| சீலா | 300 | 400 | 400 | 450 | 400 | 350 |
| விளை | 600 | 400 | 400 | 500 | 400 | 400 |
| முரல் | 250 | 350 | 350 | 300 | 200 | 350 |
| கும்பிளா | 400 | 300 | 350 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 550 | 650 | 350 | 450 | 300 | – |
| ஒரா | 350 | 300 | 350 | 250 | 200 | – |
| திரளி | 200 | 250 | 250 | 150 | 50 | – |
| நகரை | 200 | 250 | – | 300 | 150 | 350 |
| சூடை | 150 | 150 | 400 | 150 | 150 | 150 |
| ஒட்டி | 250 | 150 | 250 | 150 | 200 | 250 |
| திருக்கை | 150 | 300 | 300 | 300 | 200 | 140 |
| பாலை | 350 | 300 | 280 | 400 | 200 | – |
| வாளை | 100 | 150 | – | 350 | 150 | – |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 250 | 150 | 150 |

## நாளை

சித்திரை—29
செவ்வாய்க்கிழமை
12.05.2015

திதி: நவமி மு.இ. 10.55 வரை
நட்சத்திரம்: அவிட்டம் மு.ப.07.59 வரை
சுபநேரம்: 10.24-11.54 வரை
இராகுகாலம்: 02.54-04.24 வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மே மாத

## துலாம்

(சித்திரை 3, 4 ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதம்)

அடுத்தவரை அனுசரித்துச் செல்வதில் கெட்டிக்காரர்களான துலா ராசியினரே. இந்த மாதத்தின் இறுதியில் எதிர்பார்த்த காரியங்கள் சாதகமாக நடக்கும். ஆரம்பத்தில் எதிலும் கவனமுடன் செயற்படுவது நல்லது. எதிர்பாராத சில சம்பவங்கள் நடக்கலாம். அதனால் உங்களுக்கு நன்மையும் உண்டாகலாம். ஆன்மிக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும்.

குடும்பத்தில் கலகலப்பு காணப்படும். வாழ்க்கைத் துணை உங்களை அனுசரித்துச் செல்வார். இதனால் மனதில் இருந்த கவலைகள் நீங்கும். உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகளின் எதிர் காலம் கருதி சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வழக்கு களில் நிதான போக்கு காணப் படும்.

தொழில், வியாபாரம் எதிர்பார்த்ததை விட சற்று நிதானமாகவே நடக்கும். முன்னேற்ற நிலை காண்பீர்கள். மனதில் இருந்த குழப்பங் கள் நீங்கி தெளிவு உண்டாகும்.

**உத்தியோகத்தர்களுக்கு**

சக ஊழியர்களின் ஆதரவினால் வேலைப்பளு குறையும். சம்பள உயர்வு எதிர்பார்த்த அளவு இல்லா விட்டாலும் பொறுமையாக இருக்கவும். மற்றபடி தயக்கமின்றி உங்கள் எண்ணங்களை மேலதிகாரிகளிடம் எடுத்துக் கூறுவீர்கள். வேலைகளில் கெடுபிடிகள் குறையும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் செய்யும் விடாமுயற்சிகள் பெரும் வெற்றிகளைக் கொடுக்கும் சமூகத்தில் பெயரும் புகழும் உண்டாகும். அதிக முயற்சிகளுக்குப் பிறகே புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். ஆனாலும் உங்களைப் பற்றிக் குறை சொல்லும் சக கலைஞர்களைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டாம்.

**பெண்களுக்கு**

பெண்மணிகள் குடும்ப நலம் சீராகவும், ஒற்றுமையாகவும் இருக்கக் காண்பீர்கள். பெற்றோர்களின் ஆதரவும் அவர்களால் தனலாபமும் உண்டாகும். ஆடை ஆபரணச் சேர்க்கையும் உண்டாகும். பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மாணவர்களுக்கு**

மாணவமணிகள் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து அதிகம் பாடுபட்டுப் படித்தால் நல்ல மதிப்பெண்களைப் பெறலாம். எனினும் பெற்றோர்கள் தக்க ஆதரவைக் கொடுப்பார்கள். உற்சாகத்துடன் விளையாட்டுகளில் ஈடுபடுவீர்கள்.

**அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், வெள்ளி**

**சித்திரை 3, 4 ஆம் பாதம்**

இந்த மாதம் உங்களைப் பற்றி யாராவது வீண் அவதூறாகப் பேசினால் கண்டுகொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ருசியான உணவை உண்பீர்கள். எந்த ஒரு வேலையையும் மனத்திருப்தியுடன் செய்வீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண் டாகும். பணவரத்து கூடும்.




**சுவாதி**

இந்த மாதம் உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். குடும்பத்தில் சாதகமாக பலன் தரும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் இருக் கும். காரிய வெற்றி உண்டாகும். மனதில் மகிழ்ச்சியான எண்ணங்களைத் தரும். திடீரென்று அவசர முடிவை எடுக்க வேண்டியிருக்கும். கோபத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமுகமான நிலை நீடிக்கும். உல்லாச பயணம் செல்லும் வாய்ப்புகளும் கிடைக்கும்.

**விசாகம் 1, 2 ,3 ஆம் பாதம்**

இந்த மாதம் வாகனங்கள் வாங்குவதில் தடை ஏற்பட்டு நீங்கும். மனை, வீடு வாங்க எடுக்கும் முயற்சிகள் சற்று தாமதமாக நடக்கும். எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிப் பது நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். தடைப்பட்ட பணவரத்து தடைநீங்கி கைக்கு வந்து சேரும்.

# பெற்றோர்கள் குழந்தைகளை எப்படி வழி நடத்துவது?

பொதுவாக குழந்தைகள் மிகவும் சுலபமாக நட்பை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றிருப்பார்கள், ஆனால் அது எல்லாக் குழந்தைகளாலும் முடியாது. இவ்வாறான குழந்தைகளை பெற்ற பெற்றோர், 'என் பிள்ளை ஒரு மௌனி எவரிடமும் பேச மாட்டான்' என்று பெருமையாகக்கூட கூறிக் கொள்வது வழக்கம். ஆனால் அது அவர்களுக்கு அப்போதைக்கு சரியாய் இருக்கலாமே தவிர அவன் வளர்ந்து பெரியவனாகும்பொது அந்த பழக்கமே அவனுக்கு எதிராளியாகியிருக்கும். அவன் நினைத்ததைக் கூட வெளிப்படுத்த இயலாமல் எல்லாவற்றுக்கும் தடையாய் அமைந்து விடும். சில நேரத்தில் எவரிடம் எப்படிப் பழகுவது என்று கூட தெரியாமல் தங்களை குழப்பிக் கொள்ளவும் நேரிடும். நல்ல சாப்பாடு, வசதி யான வீடு, உயர்தரக் கல்வி என்று மட்டும் முடிவதில்லை பெற்றோரின் கடமை. வருங் காலத்தில் தங்கள் சொந்த வாழ்க்கையில் மகிழ்ச்சியாகவும், வாழ்க்கையில் வரும் இன்னல்களை சமாளிக்கும் மனப் பக்குவத்துடனும், தனிமையில் இருந்தாலும்கூட எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல் பெற்றும், குறிப்பாக மனரீதியாக எந்தவித தாழ்வு மனப்பான்மையும் ஏற்படவிடாமல் குழந்தைகளை வளர்ப்பதிலும் பெற்றோரின் கடமையாகும். சில குழந்தைகள் தங்களை தனிமைப்படுத்திக் கொள்ள, அதில் பெற்றோரின் பங்கும் இருக்கின்றது . ஏனெனில் வேலை நிமித்தம் பல பெற்றோர்கள் தொடர்ந்து இடமாற்றங்களை மேற்கொள்வது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் குழந்தைகளால் அவ்வளவு சுலபமாக இந்த இட மாற்றங்களுக்கேற்றவாறு தங்களை மாற்றிக் கொள்ள முடியாமல் அவதிக்குள்ளாவார்கள். அவ்வாறான சூழ் நிலையில் தாங்கள் தனித்து விடப்பட்டது போல் உணர்ந்து அதையே பழக்கமாக்கிக் கொண்டும் வளருவார்கள். ஆகவே பெற்றோர் இதை உணர்ந்து குழந்தைகளிடம் நிறைய பேச வேண்டும். அப்போது தான் அவர்களின் மனநிலையை அறிய முடியும். மேலும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் பழக்க வழக்கங்களை கூர்ந்து கவனித்து அதிலிருந்து அவர்களின் குறைகளை பக்குவமாய் பேசி தீர்க்க வேண்டும். குழந்தைகளின் இயலாமையை கேலி பேசுவதோ பிறரிடம் கிண்டல் செய்வதோ கூடாது, மாறாக அவர்களுக்கு நடப்பை பெற எளிய வழிகளை சொல்லித் தரவேண்டும். சில குழந்தைகள் கூச்ச சுபாவம் உடையவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு தைரியத்தையும் மற்றும் குழந்தைகளுடன் பழகும் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கிருக்கும் நட்பு வட்டாரத்தில் மேலும் அவர்களுக்கு ஆர்வத்தை உண்டாக்கி விட வேண் டும். தாம் ஒரு நல்ல மனம் படைத்தவர் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் பெற்றோரின் அணுகு முறை இருக்க வேண்டும். அந்த உணர்வை மற்றவர்களும் அறியும் வண்ணம் அவர்கள் நடத்தை இருக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்ல வேண்டும் மற்றவர்களோடு நாம் அன்போடு பழகினால் அவர்களும் நம்மிடம் அன்பு செலுத்துவார்கள் என்ற எளிய வழியைச் சொல்லி தர வேண்டும். பிறர் எதிர்பார்க்கும் முன்னரே மற்றவர்களுக்கு உதவி செய்யும் உயர்ந்த மனப்பான் மையுடன் வளர வேண்டும் என்று சொல்ல வேண்டும். குழந்தைகள் மற்றவர்களைப் பற்றி புறம் பேசினால் அதில் ஆர்வம் காட்டாமல் தவிர்க்க வேண்டும், மேலும் அந்தப் பழக்கம் தேவையற்றது என்றும் அந்தப் பழக்கம் நட்புறவுகளைத் துண்டித்து விடும் என்றும் சுட்டிக் காட்ட வேண்டும் மற்றவர்களின் கருத்தையும் மதிக்க வேண்டும், குறைந்த பட்சம் அவர்கள் சொல்லுவதை பொறுமையுடன் கேட்க வேண்டும் என்றும் இவ்வாறன குணம் இருந்தால் நிச்சயம் நட்பு வளரும் என்றும் வலியுறுத்த வேண்டும். தான் பிடிச்ச முய லுக்கு மூன்று கால் என்ற பிடிவாதத்தில் இருந்தால், நட்புறவுகளைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது என்று கூறி சிறு பராயத்திலிருந்தே அவர்களுக்கு சகிப்புத் தன்மை, பொறுமை போன்ற குணங்களைப் பழக்க வேண்டும்.

மற்றவர்களோடு அன்போடு பழகவும் யுத்திகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும். பிறருடன் பேசும் போது எப்போதும் புன்சிரிப்போடு பேச வேண்டும் என்று பழக்க வேண்டும் முக்கியமாக முன்பே குறிப்பிட்டது போல், அடிக்கடி ஏற்படுத்தும் இட மாற்றங்கள் குழந்தைகளின் மன நிலையை பெரிதும் பாதிக்கும் என்பதையும் பெற்றோர் உணர வேண்டும். காலங்கடந்து உணர்வதால் பயனில்லை. ஏனெனில் அவர்கள் உணரும் போது அக் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி விடுவார்கள். ஆகவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் குணாதிசயங்களை சிறு பராயத்திலேயே இனங்கண்டு அவர்களுக்கு வேண்டிய உற்சாகத்தை வழங்குவதோடு மட்டுமல்லாமல், நட்பில்லா வாழ்க்கை உப்பில்லாப் பண்டத்தைப் போன்று சுவையற்றதாகிவிடும் என்று நட்பின் அவசியத்தை வலியுறுத்தி அதற்குப் பெற்றோரும் உற்றதுணையாய் இருந்து வருவதும் பெற்றோரின் கடமையே.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டலாம் வாங்க...







# நம்பினால் நம்புங்கள்!

ஒரு கிலோ எடை அதிகரிக்க 7 ஆயிரம் கலோரி உணவு தேவை. ஒரே நாளில் கூட இந்த அளவு சாப்பிட்டுவிட முடியும். ஆனால், இதே அளவு கலோரியைக் குறைக்க வேண்டுமானால் 17.5 மணிநேரம் நீச்சல் அல்லது 35 மணி நேரம் நடை அல்லது 7 மணி நேரம் ஓட்டம் தேவை!

126936598–நம்மில் பலர் இந்த வாக்கியத்தின் முதலில் உள்ள எண்களை முழுமையாகப் படிக்காமல் மற்ற வார்த்தைகளையே படிப்போம்!

நத்தையின் மூளை நம்முடையதைப் போலவே நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது

மனிதனின் விழிகள் சராசரியாக 180 டிகிரி வரை திரும்பும்.

கிசுகிசு பழக்கம் மன அழுத்தத்தைக் குறைக்கிறது. நம் மூளையில் கிசுகிசுக்க ளுக்கென தனிப்பகுதியே உண்டு!

# நரியும் போர் முரசும்

ஒரு நாள் நரி ஒன்று மிகுந்த பசியுடன் அலைந்து கொண்டிருந்தது. அது அரை மயக்கத்துடன் தள்ளாடி கொண்டு நடந்தது. போர்க்களத்துப் பக்கமாகச் சென்றபோது திடீரென பயங்கர சத்தம் ஒன்று கேட்டது.



நரிக்கு உயிரே போய் விட்டது போல் இருந்தது. ஏதோ பயங்கர விலங்கு ஒன்று நமது காட்டுக்குள் வந்து விட்டது என்று எண்ணிய நரிக்கு அடி வயிறு கலங்கியது. பசி நேரத்தில் நம்மால் ஓடக் கூட முடியாதே, எப்படியும் இந்த விலங்கிடம் இன்று இரையாகப் போகிறேன் என்று எண்ணிக் கலங்கியது நரி. சற்று நேரம் அப்படியே நின்று கொண்டிருந்தும் ஏதும் நடக்காமல் போகவே கொஞ்சம் தெம்பு வந்தது. அருகில் இருந்த ஒரு பாறையின் மேல் ஏறி சுற்றும் முற்றும் பார்த்தது. அப்போது தூரத்தில் ஒரு பெரிய பாறை போன்ற ஒரு உருவம் தென்பட்டது.மீண்டும் ஒரு முறை திடீரென சப்தம் உண்டானது. நரிக்கு கலக்கம் அதிகமானது.சற்று உற்றுப் பார்த்த போதுதான் தெரிந்தது அது ஒரு போர் முரசு என்று. அதன் அருகில் மெல்ல மெல்ல சென்று சுற்றி சுற்றிப் பார்த்தது. பார்ப்பதற்கு பயன்படுத்திப் பல நாள்கள் ஆனது போல் இருந்தது. உள்ளே ஏதோ சிறிய மிருகம் ஒன்று இருந்து கொண்டுதான் சத்தம் எழுப்புகிறது என்று எண்ணியது நரி. பசியில் இருந்த நரி பேரானந்தம் கொண்டது. தனது கூரிய பற்கள் மற்றும் நகங்களைக் கொண்டு அந்த முரசைக் கிழித்து உள்ளே இருக்கும் மிருகத்தைத் தின்ன எண்ணிய நரி அவ்வாறே செய்தது. அப்போது நரிக்கு தாடை மற்றும் கைகளில் பலமான காயங்கள் ஏற்பட்டு இரத்தம் வந்தது. உள்ளே இருக்கும் மிருகத்தைப் பிடிக்கத் தயாராக இருந்த நரிக்கு பெருத்த ஏமாற்றமே மிஞ்சியது. ஏனென்றால் அங்கே ஒன்றுமே இல்லை. பசியோடு இருந்த நரிக்கு இரத்தக் காயங்கள் மேலும் சோர்வை ஏற்படுத்த மயக்கமுற்றது. உண்மையில் அருகில் இருந்த புதர்ச் செடிகள் முரசின் மீது காற்றில் உரசி உரசியே அந்த சப்தம் உண்டானது. எந்நிலையிலும் எந்த ஒரு காரியத்தையும் ஆராயாமல் செய்வது நன்மையைத் தராது.

# கறையான்களின் உலகம்



கறையான்கள் ஏறத்தாழ 20 கோடி ஆண்டுகளுக்கு முன்னரும் இப்பூமியில் வாழ்ந்து வந்தன. இதற்கான ஆதாரங்களை அதற்குரிய தொல்லுயிர் எச்சம் மற்றும் அம்பர் உறுதி செய்கின்றன. கறையான்களை வெள்ளை எறும்புகள் என்றும் அழைக்கின்றனர். இன்றைய கறையான்களில் பத்து சத விகிதமே நமக்கு பொருளாதார சீர்கேட்டை உருவாக்கும். மற்றவை தேவையில்லாதவைகளை உண்டே வாழ்கின்றன. இக்கறையான்களின் வாழிடக் காற்றோட்ட நுட்பங்களை நாம் அவசியம் அறிய வேண்டும். கறையான்களின் வளர்சிதை மாற்றங்களால் உருவாகும் வெப்பம் மற்றும் நீராவி ஆகியன ஒருவித மிதவை உந்து விசைகளை உள்ளிழுக்கும். எனவே புற்றின் உள்ளிரு[illegible] காற்று உள்ளீடற்ற குழாய் மூலம் மேலே வருகிறது. அப்போது புற்றின் உள்காற்றிலிருக்கும் ஒட்சிசன் கரியமில வாயு வெப்பம் நீராவி ஆகியன அடிப்பரப்புக் குழாய் வழியாக புற்றின் வெளிக்காற்றுடன் வேதியியல் பரிமாற்றம் செய்துகொள்ளும். என[illegible] புத்தம் புதிய காற்று மீண்டும் புற்றுக்கு[illegible] உள்ளீடற்ற குழாய் மற்றும் அடிப்பரப்புக் குழாய்கள் வழியாக உள்ளிழுக்கப்படும். இவ்வாறு வெளிக்காற்று புற்றினுள் சென்று புற்றின் உட்புறத்துக்குச் சென்றடைந்து புற்றின் உட்புற வெப்பத்தைத் தணித்து குளுமையாக மாற்றும். இக்குளுமை எப்பொழுதும் நிலவுவதால் புற்றினுள் வளர்சிதை மாற்றங்கள் சிறப்பாக அமைய உதவுகிறது.

# நல்ல நேரம் பார்ப்பவரா நீங்கள்?

பலர் குறிப்பாக இங்கு ஒரு வேலை செய்வதாக இருந்தால் முதலில் 'நல்ல நேரம்' எப்போது வருகின்றது என்று கலண்டரை 'பார்ப்பார்கள். சிலர் இதை மனப்பாடமே செய்து வைத்திருப்பார்கள். ஆனால் நல்ல செயல்களெல்லாம் நல்ல நேரத்திலும், கெட்ட செயல்களெல்லாம் கெட்ட நேரத்திலுமா நடக்கின்றன. உங்களுக்கு வேலை கிடைத்திருக்கும் செய்தி, நல்ல வியாபாரம் நடந்திருக்கும் செய்தி, வேலையில் பதவி உயர்வு, சம்பள உயர்வு இது போன்றவைகள் கிடைத்த நேரத்தை பார்த்திருக்கிறீர்களா? அவைகளெல்லாம் வரும்போது 'நமக்கு நல்ல நேரம்' போலிருக்கு என்று சொல்லிக் கொள்வதில்லையா? அதே போல் கெட்ட நிகழ்ச்சிகளெல்லாம் கெட்ட நேரத்திலா நடக்கின்றன. எப்போது கெட்டது நடந்தாலும் நாம் 'இப்போ நேரம் சரியில்லை' போலிருக்கின்றது என்று நாம் ஆறுதல் அடைவதுண்டா! ஆக உங்களுடைய நல்ல நேரத்திற்காக செயல்கள் காத்திருக்காது என்பதை நீங்கள் கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டும். அந்த நல்ல நேரம் அதே நாளில் இருக்கலாம். மறு நாளாயிருக்கலாம். ஏன் மாதங்கள் கூட ஆகலாம்! நல்ல நேரம் எதற்காக, பார்க்கிறாக்லென்றல்



பெரிய காரியங்களின் திட்டங்களைத் தீட்டுவதற் கும், அதைச் செயல்படுத்துவதற்கும் சில நாள்கள் தேவைப்படும். அந்த நாள்களில் அனைவரும் கூடுவதற்கும் தேவைப்படுகிறது. சிலருக்கு மனதளவில் நல்ல நம்பிக்கையளிப்பதற்கும் அது கட்டாயம் உதவும். ஒரு நாளில் நல்ல நேரம் 10 முதல் 20 வீதம் இருப்பதாக வைத்துகொள்வோம். அப்படியென்றால் மீதி நேரத்தில் வருகின்ற வாய்ப்புகளெல்லாம் நீங்கள் தட்டிக்கழிக்கும் நிலை ஏற்படும். அது உங்களுடைய முன்னேற்றத்துக்கு தடைகற்களாக இருக்கும். உலகம் முழுவதும் 24 மணிநேரம் இயங்குகின் றது. இந்தியாவில் பகலென்றால் அமெரிக்காவில் இரவு.அப்போது இங்கு வேலை. அங்கு தூக்கம். இதில் யாருக்கு எது நல்ல நேரம் என்று எப்படி கணிப்பது? ஒருவன் 'இண்டர்வியூவ் ' க்காக நல்லநேரத்தில் புறப்பட்டான். பஸ்ஸுக்காக நீண்ட நேரம் காத்திருந்தான். அருகில் இருப்பவரிடத்தில் தான் செல்லும் பஸ் விவரத்தை விசாரிக்கின்றான். 'அந்த பஸ்ஸா தம்பி, கொஞ்ச நேரம் முன்னாடி தான் போனது. இனி ஒரு மணிநேரத்தின் பின் தான் அந்த பஸ் வரும்.' என்று அவர் கூற அதுவரை 'இண்டர்வியூவ் ' நடத்துபவர்கள் இவருக்காகக் காத்திருப்பார்களா? ஆக பார்க்கின்ற காரியத்தில் தான் நல்ல நேரம் பார்க்கவேண்டும். சும்மா நிற்பதற்கும், நடப்பதற்கும், சாப்பிடுவ தற்கும், தூங்குவதற்கும் நல்லநேரம் பார்க்கத் தொடங்கினால் உங்கள் வாழ்வு சூன்யமாகிவிடும். காரியம் கைகூடி வரும்போததெல்லாம் நல்ல நேரம்வந்து விட்டது என்று எண்ணிக்கொள்ளுங்கள். உங்களுடைய நல்ல நேரம் மற்ற வர்களுக்கு நல்ல நேரமாய் இருக்க வேண்டுமென்கிற அவசிய மில்லை. ஆகையால் இன்று முதல் உங்களுக்கு எல்லா நேரமும் நல்ல நேரம் தான். உங்களுக்கு எந்தக் காரியமும் செய்யக் கிடைக்கின்ற நேரம் நல்லநேரம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 238.85 பில்லியன் ரூபா ராஜபக்ஷ யுகத்தில் நட்டம்

கொழும்பு, மே 11

ராஜபக்ஷ யுகத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 238.85 பில்லியன் ரூபா நட்டமடைந்துள்ளது என்று மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2004ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம்ஆண்டுவரையான10 வருடகாலப் பகுதியில் இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும், கூட்டுத்தாபனத்தால் 377.84 பில்லியன் ரூபா வரி பணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது. குறித்த அமைச்சு, கூட்டுத்தாபனத்திற்கு 309.3 பில்லியன் ரூபா நிதி நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

அதேவேளை, சிறிலங்கன், மிஹின் லங்கா விமான சேவைகள் உட்பட அரச நிறுவனங்களால் 20 பில்லியன் ரூபாவுக்கும் அதிக பணம் செலுத்தப் படவுள்ளதோடு, தரக்குறைவான எண்ணெய் இறக்குமதி, எண்ணெய் திருட்டு மற்றும் ஹெஜின் கொடுக்கல் வாங்கலாலேயே அதிக நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் எரிபொருள் விலை அதிகரிப்பதற்கு கூட்டுதாபனமோ அல்லது அமைச்சோ எவ்வித தீர்மானங்களையும் மேற்கொள்ள வில்லை எனவும் சிலர் விலை அதிகரிக்க போவதாக அறிவிக்கும் கதையில் எவ்வித உண்மையும் இல்லை என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (ற)

## நல்லாட்சிக்கு அச்சுறுத்தல்

*சந்திரிகா கவலை*

கொழும்பு, மே 11

நல்லாட்சியை ஏற்றுக்கொண்டவர்களுக்கும் நல்லாட்சிக்கும் அச்சுறுத்தல் என சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது பல கட்சிகள் அரசுடன் இணைந்து செயற்படுகின்றன. அனைத்து செயற்பாடுகளும் நல்லாட்சிக்காகவே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த அரசில் செயற்பட்டவர்கள் தவறான வழியில் அனுகூலங்களை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக, அவர்கள் நல்லாட்சிக்கு எதிராக செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள்ஜனாதிபதிசந்திரிகாபண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காக போராடியவர்களில் ஒருவர் அதேபோல் போரின் வெற்றிக்காகவும் போராடிய வராவார். (ற)

## விசாரணைக்கு அழைக்கவில்லை

*மகிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு*

கொழும்பு, மே 11

நிதிக் குற்றப் புலனாய்வு பிரிவில் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்காக தன்னை அழைக்கவில்லை என முன்னாள் விளையாட்டு துறை அமைச்சர்மகிந்தானந்தஅளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியாகியதகவல்களுக்குபதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எல்லோரும்என்னிடம்விசாரணை மேற்கொண்டதன் பின்னர் என்னை கைது செய்து விடுவார்கள் என தெரிவித்தார்கள். எனினும் என்னிடம் விசாரணை மேற்கொள்ள அழைக்கவும் இல்லை என்னை கைது செய்யப்போவதுமில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தங்கம் செபமாலை



இருபாலை கிழக்கு கோப்பாயைப் பிறப்பிடமாகவும் லண்டனில் வசித்து வந்தவருமாகிய திருமதி சின்னத்தங்கம் செபமாலை நேற்று (10. 05.2015) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து கதிராசி தம்பதியரின் அன்பு இளையமகளும், காலஞ்சென்ற செபமாலையின் அன்பு மனைவியும், அமுதலிங்கம் (புறமோட்டோர்ஸ் இன்ஜி னியரிங் கம்பனி, முன்னாள் ஊழியர்), அருள்ராஜன் (கனடா), ரவீந் திரராஜன் (லண்டன்), சுகுணராஜன் (லண்டன்), ராஜரூபா (லண்டன்), ராஜசேகர் (கனடா), ரஞ்சினி (லண்டன்) காலஞ்சென்ற ரஜந்தினி ஆகியோரின் அன்புத் தாயும், தர்மாம்பாள் (இந்திரா), கேந்திரா, சுமதி, மகாலட்சுமி, ராகுலன், மீனலோஜினி, தவராசா, குகேசன் ஆகியோரின் பாசமிகு மாமியும், அமுதபிரதீபன் (தேவன், இ.போ.ச), வித்தியா, சுதர்சினி (தேசிய கல்வியற் கல்லூரி), தீபன், சுமனா, பவனுஜா, மதனேஸ், ஜனோத், தர்சன், கிருஷாந், கோபிஷாத், சாயினாத், சாருஜா, டனிஷன், டாறியூஸ், சாஸ்கியா, கார்லன், அங்குஷன், அருட்சன், கர்சியா, யதுர்ஷன், ஆருஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விஷாக்கியின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீரபத்திரர் கோயிலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
அமுதலிங்கம் (மகன், இன்பம்).
077 6109038

## மரண அறிவித்தல்

### கணேசசர்மா இராதாகிருஸ்ணசர்மா (ராதா ஐயா)



கண்டியைப்பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசசர்மா (இரத்தினக்குருக்கள்) இராதாகிருஸ்ணசர்மா நேற்று முன்தினம் (09.05.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கண்டி கணேசசர்மா (இரத்தினக்குருக்கள்) - பத்மாம்பாள் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், கண்டி நாகேந்திரக்குருக்கள் - அமிர்தாம்பிகையம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், மீனாம்பாளின் பாசமிகு கணவரும், கிருபாலினி, கிருஷ்ணவேணி, கிருஷ்ணஜெயந்தி, கிருபானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், றமேஸ்குமாரசர்மா, ஸ்ரீஸ்கந்தராஜகுருக்கள், ஜெயந்தன்குருக்கள் ஆகியோரின் அன்பு மாமனும், வைஷ்ணவி, நிகேஷ், சபரிகீர்த்தனா, சபரிகீர்த்திகா, வருனேஸ் ஆகியோரின் ஆசைமிகு பேரனும், பொ.ரதிதேவி, க.விசுவநாதசர்மா, ப. ரங்கநாயகி, க. மகேஸ்வரசர்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நல்லூர்தாஸக் குருக்கள், பத்நாதக்குருக்கள், நா. பாலசுப்பிர மணியக்குருக்கள், காலஞ்சென்ற ஞா. நாகேஸ்வரி, நா. பாலேந்திரக்குருக்கள், சாந்தநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2015) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

41/2, துரைராஜா வீதி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:- இ. கிருபானந்தசர்மா (மகன்).

## மரண அறிவித்தல்

### பெரியதம்பி நல்லையா



பலாலியை பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி நல்லையா நேற்று (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி – கைராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் கமலம் தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் பாசமிகு கணவரும் சந்திரமதி, காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் பானுமதி, ஜெயமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கமுத்து, இளையாச்சி, பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருளையா, திலகவதி, ராமலிங்கம், செல்வதி, மலர்விழி, காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் மைத்துனரும் நிதர்சனா, ஷாயிராம், டினோஜா, டிலக்சி, சாமிளா, தீபிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2015) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கைதடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி தெற்கு,*
*கைதடி.*

(59673)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பூரணம் செல்லையா



சரவணை கிழக்கைச் சேர்ந்த திருமதி பூரணம் செல்லையா நேற்று(10.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் – செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் வேலாயுத பிள்ளை (பட்டு), பரமேஸ்வரி, தியாகராசா, காலஞ் சென்ற கோவிந்தராசா ஆகியோரின் தாயும் பாலசுப்ர மணியம் மகேஸ்வரி, வேலாயுபிள்ளை இராசலெட் சுமி, தியாராசா சரஸ்வதி, கோவிந்தராசா, சசிகலா ஆகியோரின் அன்பு மாமியும் அமலநாதன் சந்திரகுமாரி, அனிலாதேவி இரத்தினசபாபதி, பமிலாதேவி சிவகரன், சியாமளாதேவி தெய்வேந்திரன், பாலேந்திரன் பவானி, சிவச்சந்திரன் நந்தினி, சிறிகரன் அஜந்தா, சிறிமாலதி விஜியதீபன், சிறிமதி சசிகுமார், சிறிசாரதா, காண்டீபன் கீர்த்திகா, வசீகரன் மயூரிகா, கிரிசாந்த், சசிகுமார் நதியா, சசிரேகா தர்மலிங்கம், சசிமயூரன் துவாரகா, சசிகயனி சதீஸ்குமார், நித்தியா காண்டீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் சரவணை பன்னம்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சரவணை கிழக்கு,*
*9 ஆம் வட்டாரம்,*
*வேலணை*


(59674)

தகவல்:
பிள்ளைகள்
தொடர்புகளுக்கு
0776904715, 0214904093

## மரண அறிவித்தல்

### கனகசபாபதி அருளானந்தம்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்- யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.12.1954 | 09.05.2015 |

பருத்தித்துறை, புலோலி மேற்கு, திருநாவலூரை பிறப்பிடமாகவும் புலோலி மேற்கு, தம்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட க.அருளானந்தம் (பிரபல உயர் கணித ஆசான்) 09.05.2015 இல் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வ.வேலுப்பிள்ளை மற்றும் நவமணி தம்பதியரின் மருமகனும், வசந்தா தேவியின் (பகுதித்தலைவர், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை) அன்புக்கணவரும், அனோஜாவின் அன்புத் தந்தையும், சிவஞானச்செல்வம் (ஓய்வுபெற்ற பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி), செல்வநாயகம் (கிளி-லண்டன்), சதானந்தம் (லண்டன்), சிவானந்தம் (லண்டன்), செல்வராணி, விவேகானந்தம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், விமலாதேவி (கனடா), அருந்தவராஜா (பொறியியலாளர், கனடா), Dr. ஜெயராஜா (பதில் வைத்திய அத்தியட்சகர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), தவராசா (கனடா), சிவராமன் (பொறியியலாளர்), வசந்தி (ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை), சிவசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**146, தம்பசிட்டி வீதி,**
**பருத்தித்துறை, 021 226 4230**

(59523) (4.3.7)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி யோகராணி சிவசுப்பிரமணியம்



வடலியடைப்பைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராணி சிவசுப்பிரமணியம் 08.05.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான 'ஆலாலசுந்தரம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - அன்னம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜெனார்தனன் மற்றும் சிவாணி (நோர்வே), சாமினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற நற்குணராசா மற்றும் பத்மநாதன் (கொழும்பு), சிவயோகமலர் (வடலியடைப்பு), தனபாலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், முருகானந்தன் (நோர்வே), ரவிச்சந்திரன் (லண்டன்) அகியோரின் அன்பு மாமி யும், மிஷல்லா, மிஷானா (நோர்வே), சோபி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2015) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆஸ்பத்திரி வீதி,**
**வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.**
077 287 3312

(59663) (45.3.7)

தகவல் :
**பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலிடத்தில் சென்னை



மக்கலத்தின் அரைச்சதமும் ஜடேயா வின் சுழலும் கைகொடுக்க 12 ஓட்டங்களால் ராஜஸ்தானை வீழ்த்தி மீண்டும் முதலிடம் பிடித் தது சென்னை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானிக்க களத்தில் மக் கலத்துடன் சிமித். வழக்கத்துக்கு மாறாக நேற்று சென்னையின் ஆரம்பம் சறுக்கியது. சிமித் வெறும் ஆறு ஓட்டங்களுடன் விடைபெற் றார். ஆனால் அதற்குள்ளும் ஒரு பவுண்டரி இருக்கத் தவறவில்லை. அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே ரெய்னாவும் பவிலியன் திரும்ப சென்னை 15–2. மக்கலத்துக்கு கைகொடுத்தார் பிளாஸிஸ். இரு வரும் இணைந்து சென்னையின் பலத்தை ஆட்டத்தில் கொண்டுவர படாதபாடுபட்டனர். எடுத்த வேகத்தில் பிளந்துகட்டும் மக்கலம் நேற்று சற்று அடக்கி வாசித்தார். ஆனால் அரைச்சதத்தையும் கண் டார். இணைப்பாட்டமாக 101 ஓட் டங்களைப் பெற்றிருந்த வேளை யில் பிளாஸிஸ் ரண்அவுட் ஆனார். டோனியை எதிர்பார்க்க நெகியை களமிறக்கினார் டோனி. கடந்த ஆட்டத்தில் துடுப்பாட்ட வேளையில் கப்டன் கூலின் நம் பிக்கையை கட்டிக்காத்த நெகி யால் இந்த ஆட்டத்தில் எதுவும் செய்ய இயலாமல் போனது. இரண்டே ஓட்டங்களுடன் ஓட்டம் பிடித்தார். இறுதிக்கட்ட அதிரடியை கையிலெடுத்து சென்னையை மக்கலம் கரைசேர்ப்பார் என்று எதிர்பார்த்திருந்த வேளையில் அதிரடி காட்டவேண்டிய சந்தர்ப்பத் தில் 81 ஓட்டங்களுடன் அணியைக் கைவிட்டுச் சென்றார் மக்கலம். டோனியும் பிராவோவும் இறுதி யில் கிடைத்த ஓரிரு வாய்ப்புக் களைச் சரியாகப் பயன்படுத்த முடிவில் சென்னை 157–5.

120 பந்துகளில் 158 என்பது ராஜஸ் தானுக்கு கடினமான இலக்கல்ல. பலமான துடுப்பாட்ட வரிசையை கொண்ட அந்த அணி சில இலக் குகள் சரிவிலேயே இந்த இலக்கை ஊதித்தள்ளிவிடும். ஆனால் எட் டக்கூடிய இலக்கை நிர்ணயித்து விட்டு எதிரணியை அதற்குள் சுருட்டுவதென்பது சென்னைக்குப் புதியதல்ல. இன்னும் சொல்லப் போனால் சென்னையின் பொழுது போக்கே அதுதான். களத்தில் வற்சனுடன் ரஹானே. வழக்கம் போல் வற்சன் நிதானிக்க அடித்து விளையாட ஆரம்பித்தார் ரஹானே. ஒருவிதத்தில் ஓட்டங்களைக் குவிக்க வேண்டிய கட்டாயமும் ரஹானேக்கு உண்டு. எவ்வாறெ னின் ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பதாக அதிக ஓட்டங்களைக் குவித்த பட்டியலில் 438 ஓட்டங் களுடன் முதலிடத்தில் ரஹானே யும் இரண்டாவது இடத்தில் 436 ஓட்டங்களுடன் வில்லியர்ஸிம் உள்ளனர். எனவே தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்க வேண்டுமா யின் அதற்கேற்ப ஓட்டங்களை ரஹானே குவித்தாக வேண்டும். சுமாராக 23 ஓட்டங்களைக் குவித்து விடைபெற்றார். ராஜஸ் தான் 37–1. அணித்தலைவர் சிமித் ஐந்து ஓட்டங்களையே எட்ட வில்லை. வற்சனை வெளியேற் றினார் ஜடேஜா. பத்தாவது பந்துப் பரிமாற்ற நிறைவில் ராஜஸ்தான் 63–3. நாயரும் கூடாவும் அடுத் தடுத்து ஆட்டமிழந்தாலும் சிறிது நேரம் களத்தில் நின்று சென் னையை அச்சுறுத்தினார் சாம்சன். ஆனாலும் பயனில்லை ராஜஸ் தானின் போராட்டங்கள் அனைத் தும் பயனின்றிப்போக முடிவில் 12 ஓட்டங்களால் வெற்றிபெற்று மீண் டும் முதலிடத்தை கைப்பற்றியது சென்னை.

(ரி)

# கண்ணிவெடி அகற்றல் தாமதப்படலாம்

## கண்ணிவெடி மற்றும் வெடிப்பொருள்கள் ஆய்வு மையத்தைச் சேர்ந்த வித்யா அபேகுணவர்தன கூறுகின்றார்

கொழும்பு, மே 11

இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் தாமதப் படலாம் என கண்ணிவெடி மற்றும் வெடிப்பொருள்கள் ஆய்வு மையத் தைச் சேர்ந்த வித்யா அபேகுண வர்த்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றிற்கு வழங் கிய செவ்வியிலேயே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கண்ணிவெடி அகற் றும் பணிகளுக்கு உதவி வழங்கும் நாடுகளின் நிதியுதவி குறைக்கப் பட் டிருப்பதால் தொடர்ந்தும் இப் பணி களை முன்னெடுப்பதில் தாமதமும், சிக்கல்நிலைகளும் தோன்றியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2020ஆம் ஆண்டளவில் இலங் கையை கண்ணிவெடிகள் அற்ற நாட்ாக மாற்றுவதற்கு நிர்ணயிக்கப் பட்டது. ஆனால் நிதியுதவிகள் குறைக் கப்பட்டுள்ள காரணத்தால் குறித்த காலவரையறைக்குள் அந்த இலக்கை அடைவது சிக்கல் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

2009ஆம், 2010ஆம் ஆண்டுக ளில் முகாம்களில் தஞ்சம் அடைந் திருந்த பெரும் எண்ணிக்கையி லான மக்களை மீள்குடியேற்ற வேண் டியுள்ளமையால் நிதியுதவி வழங் கும் நாடுகள் கண்ணிவெடியகற் றும் பணிகளுக்கு அதிகளவான உதவிகளை வழங்கின. ஆனால் தற் போதைய சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டு போர் நிறைவுற்றதன் பின் னர் பொருளாதார ரீதியில் நாடு முன்னேற்றம் கண்டுள்ளமையினால் உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக் கான உதவிகளை குறைத்துள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போதியளவு நிதியின்மையால் ஒரு சில நிறுவனங்களே கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வரு வதுடன், இராணுவத்தினரும் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட் டுள்ளார்கள்.

2011ஆம் ஆண்டில் 53 சதுர கிலோ மீற்றர் பரப்பிலும், 2012ஆம் ஆண்டு 22 சதுர கிலோ மீற்றர் பரப்பிலும், 2013ஆம் ஆண்டு 8 சதுர கிலோ மீற் றர் பரப்பிலும், 2014ஆம் ஆண்டு 5 சதுர கிலோ மீற்றர் பரப்பிலும் கண் ணிவெடி அகற்றும் பணிகள் இடம் பெற்றுள்ளன.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக் கில் 74 சதுர கிலோமீற்றர் பரப் பளவு கொண்ட பகுதிகளில் இது வரையிலும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ள வேண்டி யுள்ளது.

இந்தப் பகுதிகளில் குடியிருப்புக் களை விட வயல்கள் மற்றும் நிலங் கள் கூடுதலாக காணப்படுகின் றன. அதனால் மீள்குடியேற்ற பகுதிகளில் கண்ணிவெடிகள் மற்றும் வெடிக் காத குண்டுகள் தொடர்ந்து கிடைக் கப்பெறுகின்றதால் மக்கள் பெரி தும் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர். கிளிநொச்சியில் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஒப்பந்த அடிப் படையில் ஈடுபட்டிருந்த வர்களில் 400 பேரை திடீரென ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் கடந்த வாரம் பணி நீக்கம் செய்துள்ள மைக்கும் இவ்வாறான பிரச்சினை களே காரணம்– என்றும் அவர் தெரிவித் துள்ளார். (ற)

# நேபாளத்துக்கு நிவாரணத்துடன் 4ஆவது விமானம் புறப்படுகிறது

கொழும்பு, மே 11

நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நேபாள மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதற்காக மேலும் ஒரு விமானம் இன்று நாட்டில் இருந்து புறப்படவுள்ளது.

அவ்விமானம் காலை 9 மணியளவில் கட்டு நாயக்க விமான நிலையத்தில் இருந்து நேபாளம் நோக்கி புறப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

நேபாள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற் காக இலங்கையில் இருந்து செல்லும் நான்கா வது விமானம் இதுவாகும். குறித்த விமானத்தில் 18 தொன் நிறையுடைய நிவாரணப் பொருள்கள் கொண்டு செல்லப்படவுள்ளன.

இடர் முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியால், குறித்த நிவாரணப் பொருள்கள் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்படுகின்றது.

அதேவேளை [illegible] நிவாரணம் வழங்க சென்ற [illegible] நாட்டிற்கு திரும்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (ற)

# மன்னார் பிரதேச செயலகம் மகுடம்

யாழ்ப்பாணம், மே 11

மன்னார் மாவட்ட பிரதேச செயல கங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இரு பாலருக்குமான உதை பந்தாட்டத் தொடரின் இறுதி யாட்டங்களில் இரு பிரிவிலும் மன்னார் பிரதேச செயலக பிரிவு அணி வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

கடந்த சனிக்கிழமை முருங்கன் பொது விளையாட்டு மைதானத் தில் இடம்பெற்ற இறுதியாட்டங் களில் முதலில் இடம்பெற்ற ஆண் களுக்கான இறுதியாட்டத்தில் மன் னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து நானட்டான் பிரதேச செயலக அணி மோதிக் கொண் டது. இதில் மன்னார் பிரதேச செயலக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத் தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து முசலி பிரதேச செயலக அணி மோதிக்கொண் டது. இதில் மன்னார் பிரதேச செய லக அணி 1:0 என்ற கோல் கணக் கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (ரி–23)

# வவுனியா பிரதேச செயலகம் அபாரம்

வலைப்பந்தாட்டம்

வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டு விழா வின் ஓர் அங்கமான வலைப்பந் தாட்ட தொடர் மற்றும் கரப்பந் தாட்ட தொடர்களின் இறுதியாட் டத்தில் வவுனியா பிரதேச செயலக அணி கிண்ணங்களைக் கைப்பற் றியுள்ளது.

பெண்களுக்கான வலைப் பந் தாட்ட தொடரின் இறுதி யாட்டத்தில் வவுனியா பிரதேச செயலக அணியை எதிர்த்து வெண்கல செட்டிக்குளம் பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது. இதில் வவுனியா பிரதேச செயலக அணி 28:7 என்ற புள்ளிகளின் அடிப் படையில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

கரப்பந்தாட்ட தொடர்

இருபாலருக்குமான கரப்பந்தாட் டத் தொடரின் இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக் கான இறுதியாட்டத்தில் வவுனியா பிரதேச செயலக அணியை எதிர்த்து வவுனியா தெற்கு பிரதேச செய லக அணி மோதிக்கொண்து. 5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் வவுனியா பிர தேச செயலக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண் களுக்கான இறுதி யாட்டத்தில் வவுனியா பிரதேச செயலக அணியை எதிர்த்து வவுனியா தெற்கு பிரதேச செயலக அணி மோதிக்கொண்து. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் வவுனியா பிரதேச செயலக பிரிவு அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (23)

# தலபுராணம் படித்து பயன் சொல்லும் நிகழ்வு

நாகர் கோவில், மே11

நாகர்கோயில் பூர்வீக நாக தம்பிரான் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு மேற் படி ஆலயத்தின் தலபுராணம் படித்து பயன் சொல்லும் நிகழ்வு நடைபெறவுள்ளது. ஆர்வலர்கள், பௌராணிகர் கள் ஆகியோ ரைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டா ளர்கள் கேட்டுக்கொள்கின் றனர். (ஒ)

வேலையாள்கள் தேவை
பரமேஸ்வராச் சந்தியில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு
* அலுவலக உதவியாளர்
* கணக்காளர் (கணினி அறிவுடையவர்)
தேவை.
12.05.2015 செவ்வாய்க்கிழமை நேரில் வரவும்.
தொடர்பு:- நியூரோன் எலற்றிக்கல்ஸ்
169, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

சிங்களம்
Past Paper Class
அரச மொழிகள் திணைக்களம் நடாத்தும் level II
Level III பரீட்சைக்கான Past Paper Class (எவரும் பங்கு பற்றலாம்)
Level III
11.05.2015 (திங்கள்) மாலை 5.30 - 6.30 வரை
Level II
13.05.2015 (புதன்) மாலை 5.30 - 6.30 வரை நடைபெறும்
உங்கள் வசதிக்கு ஏற்ப நேரம் மாற்றி அமைக்கப்படும். அடுத்த வகுப்பு நேரம் வகுப்பு நடைபெறும் தினத்தில் தீர்மானிக்கப்படும்.
ஸ்ரீ மாஸ்டர்
ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்
72, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (மிலேனியம் அருகில்)
0777 033729

பாராட்டுகின்றோம்
உதவிப் பிரதேச செயலராகக் கடமை யாற்றி தனது ஆற்றல்மிகு திறமையினால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு பிரதேச செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும்
திருமதி யசோதா உதயகுமார்
(SLAS I Bsc (Hons) PGD.PA (Merit) MA
(Public Management, Japan)
அவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பல பதவி உயர்வுகளை பெற வேண்டும் என பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நலன்புரி சங்கம்
வலி. தெற்கு, உடுவில்.
பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறைகளுக்கு எதிராக ஜெனிவாவில் முறையிடுவோம்

## அரசை மிரட்டுகின்றது மஹிந்த ஆதரவு அணி

கொழும்பு, மே 11
"அரச பொலிஸ் என்ற எண்ணக் கருவின் கீழ், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மேற் கொள்ளப்படும் அடக்குமுறைகளுக்கு எதிராக ஜெனிவாவிலுள்ள நாடாளுமன்ற ஒன்றியத்திடம் அடுத்த இரு வாரங்களுக்குள் முறைப்பாடு செய்யவுள்ளோம்."
– இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் மஹிந்த ஆதரவு அணியின் முக்கியஸ்தருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
ரணில் விக்கிரமசிங்கவின் பொலிஸ் அரசு தொடர்பில் சர்வதேச சமூகத்துக்குத் தெரிவிப்பது முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.
மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலேயே குறித்த முறைப்பாட்டை செய்யவுள்ள தாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.
மக்களின் பிரதிநிதிகளான எங்களுக்கு சர்வதேச பாதுகாப்பு இருக்கின்றது என்பதை இந்தப் பொலிஸ் அரசு தெரிந்துகொள்ளவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ற)

## நினைவஞ்சலிகள்

**சின்னக்குட்டி மார்க்கண்டு**



தோற்றம்
02.10.1946

மறைவு
26.08.2013

**மார்க்கண்டு றஜினாவதி**



தோற்றம்
30.09.1981

மறைவு
24.03.2014

அன்பான எம் தெய்வங்களே
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்களே
வானுறையும் தெய்வமாய் ஆகி விட்டீர்களே
மண்ணுலகை விட்டு நீங்கள் மறைந்தாலும்
எங்களின் மனங்களில் நீவிர் வாழ்கின்றீர்கள்

சோதி வேம்படி வீதி,
மானிப்பாய்

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# உள்ளூராட்சி மன்ற காலத்தை நீடிக்குமாறு கோரவுள்ளோம்

## சுசில் பிரேம ஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, மே 11
உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்படும் கால எல்லையை நீடிப்பது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவர ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.
இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொது செயலாளர் சுசில் பிரேம ஜயந்த அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.
234 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கால எல்லை எதிர்வரும் 15ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.
கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடையவிருந்த குறித்த கால எல்லை, நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் காரணமாக மே 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.
இந்நிலையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான கால எல்லை மேலும் நீடிக்கப்பட மாட்டாது என நேற்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
புதிய தேர்தல் முறை மாற்றத்துக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமாயின், அதற்கான தயார்படுத்தல்களுக்காக தேர்தல்கள் திணைக்களத்திற்கு குறிப்பிட்ட சில காலம் தேவைப்படும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
ஆகவே உள்ளூராட்சி மன்றங்களுக்கான கால எல்லையை நீடிப்பது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்ல தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ற)

## கண்ணீர்க் காணிக்கை

### கனகசபாபதி அருளானந்தம்

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)



தோற்றம் 18.12.1954 மறைவு 09.05.2015

கணிதப் பேராசான் கனகசபாபதி அருளானந்தம் அவர்களது திடீர் மரணச் செய்தி அறிந்து, நாம் கலங்கரை விளக்கற்ற கப்பலாகித் தவிக்கின்றோம்.
எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக எமது ஆசானுக்கு செலுத்துவதுடன் அவர்தம் குடும்பத்தினருக்கு கவலைகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி

நியூ சயன்ஸ் அக்கடமி
வதிரி.

நிர்வாகம்
ஆசிரியர்களும், மாணவர்களும்,

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தங்கம் செபமாலை



இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத் தங்கம் செபமாலை நேற்று (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குருசுப்பிள்ளை - செபமாலை யின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகமுத்து- கதிராசிப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குருசுப்பிள்ளை- அந் தோனியம்மா தம்பதியரின் அன்பு மருமக ளும், காலஞ்சென்ற அன்னம்மா, ராசரத்தினம் ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், அருள்ராஜா , ரவீந்திரராஜா , சுகுணராஜன் , ராஜரூபா ராஜ சேகரம் , ரஞ்சினி காலஞ் சென்ற ரஜிந்தினி ஆகியோரின் அன்புத் தாயும், கேந்திராதேவி, சுந்தரலக்சுமி,மகாலட்சுமி, ராகு லன், மீனலோசனி, தவராஜா, குகேசன் ஆகியோரின் பாசமிகு மாமியும் , பவ னுஜா, மதனேஸ், ஜனோத், தர்சன், கிருஷாந், கோபிஷாந், சாயினாத், சாருஜா, டனிஷன், டாரியூஸ், ஷாஸ் கியா, கார்லன், அங்குசன், அருட்சன், கர்ஷியா, யதுர்சன், ஆரு ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

C.C பாடசாலை வீதி,
இருபாலை கிழக்கு,
இருபாலை.

தகவல்: சுகுணராஜன் மகாலட்சுமி
T.P: 00447439754110
00447930807293
077 8426185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு சுயாட்சி வேண்டும் என்பதை சிங்களவரிடம் முன்வைப்பார் மைத்திரி

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எம்.பி. நம்பிக்கை

கொழும்பு, மே 11

"சரித்திர ரீதியாக தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில், தமிழ் மக்களுக்குப் போதிய சுயாட்சி வேண்டும் என்ற உண்மையான கருத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிங்கள மக்கள் மத்தியில் முன்வைப்பார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு." – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

"தமிழ் மக்கள் தமது கையில் இருக்கும் வாக்குரிமை என்ற பலத்தை எதிர்வரும் பொதுத் தேர்தலில் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்"– என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கிழக்கு மாகாண அமைச்சர் கே.துரைராஜசிங்கத்தைக் கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு, வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் ஆலய முன்றலில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:–

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிங்கள மக்கள் மத்தியில் சென்று உண்மையைப் பேசுவார் என்று எனக்குத் திடமான நம்பிக்கை இருக்கின்றது. தமிழ் மக் கள் நியாயமான அரசியல் தீர்வைப் பெற்று அவர்கள் சம அந்தஸ்துடன் வாழவேண்டும். அதை வலியுறுத்தி உலகறியச் செய்வதற்கு தமிழ் மக்களாகிய உங்களது கையில் இருக்கும் வாக்குரிமை என்ற பலத்தை நீங்கள் முழுமையாகப் பயன்படுத்தவேண்டும். இதுதான் இங்கு நான் விடுக்கும் பகிரங்கச் செய்தியும் எனது பணிவான வேண்டுகோளுமாகும்.

ஒரு நாட்டில் ஒரு பிரச்சினை சதாகாலமும் முடிவில்லாமல் தொடர்ந்துகொண்டிருக்க முடியாது. அது ஒரு தொடர்கதையாக இருக்க வும் முடியாது. ஏதோவொரு கால கட்டத்தில் முடிவுக்கு வந்தாக வேண்டும்.

சாத்வீகப் போராட்டம், அரசியல் போராட்டம், ஜனநாயகப் போராட்டம், ஆயுதப் போராட்டம், இராஜதந்திரப் போராட்டம் என்று இப்பொழுது எம்மைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் முடிவுறாத பிரச்சினைக்கு முடிவு வரவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது.

தற்போது இலங்கை அரசு குற்றவாளிக் கூண்டில் நிற்கின்றது. மனித உரிமைச் சட்டங்களையும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களையும் மீறி நடந்ததன் காரணமாகவும் போர் நியமங்களை மீறியதன் காரணமாகவும் சர்வதேச விசாரணைக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அந்த விடயம் தொடர்பாக ஒரு சர்வதேச விசாரணை நடைபெற்றிருக்கின்றது. அந்த விசாரணை



அறிக்கை மார்ச் மாதம் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.

இலங்கை அரசின் எழுத்து மூலமான வேண்டுகோளின் அடிப்படையில் – இலங்கை அரசின் சில வாக்குறுதிகளின் அடிப்படையில் அது பிற்போடப்பட்டிருக்கின்றது. எவ்வாறாயினும், அந்த விசாரணை அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளது. அதற்கு முன்பதாக இலங்கையிலே நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றாக வேண்டும்.

தமிழ் மக்கள் அந்தப் பொதுத் தேர்தலிலே என்ன முடிவை எடுக்கப்போகின்றார்கள் என்பதை சர்வதேச சமூகம் மிகவும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது. எமது மக்களின் உடனடித் தேவைகள், காணி விடயங்கள், தடுப்புக்காவலில் உள்ளவர்கள், காணாமல்போனவர்கள் ஆகியவற்றுக்கெல்லாம் மேலதிகமாக என்ன விதமான அரசியல் தீர்வை நாடி நாம் நிற்கப் போகின்றோம் என்பதை அந்தத் தேர்தலின் மூலம் சர்வதேச சமூகத்திற்குச் சொல்லியாக வேண்டும்.

இந்த நாட்டில் ஒரு நல்லிணக்கம் ஏற்படுவதாக இருந்தால், அரசியல் தீர்வின் அடிப்படையில் அது ஏற்படலாம் என்பதைப் பற்றியும் சர்வதேச சமூகத்திற்கு நாம் சொல்லியாகவேண்டும். தமிழ் மக்கள் தங்களின் வாக்களிப்பின் மூலமாக அவ்விதமான ஓர் அரசியல் தீர்வைத் தான் வேண்டி நிற்கின்றார்கள் என்று நாம் நிரூபித்தாக வேண்டும்.

நாங்கள் இந்த நாட்டிலுள்ள ஏனைய மக்களுக்கும், ஆட்சி யாளர்களுக்கும், எதிரணியிலுள்ளவர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இதுதான் தமிழ் மக்களுடைய அபிலாஷை என்கின்ற ஒரு தெளிவான செய்தியை அனுப்ப வேண்டும்.

நீண்டகாலமாக பலவித மான துயரங்களை எதிர்நோக்கும் தமிழ் மக்கள் ஒன்றுபட்ட நாட்டுக்குள் இவ்விதமான ஒரு தீர்வைக் காண்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்பதை நாம் உரத்துச் சொல்லியாகவேண்டும்.

எனவே, பொதுமக்களாகிய நீங்கள் உங்களது கடமையைச் சிறப்பாக நிறைவேற்றி அதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தைப் பலப்படுத்த வேண்டிய கடமை இருக்கின்றது" – என்றார். (ற–சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கோத்தபாய

கைது செய்யப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கோத்தபாயவை கைது செய்வதற்குரிய பரிந்துரையை சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கியுள்ளது என்று கொழும்பு ரெலிகிராப் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே நிதி மோசடி தடுப்பு விசாரணைப் பிரிவால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் மற்றொரு சகோதரர் பஸில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே, கோத்தபாய ராஜபக்ஷ இன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கோத்தபாய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த காலத்தில் இடம்பெற்ற, மிக போர் விமானக் கொள்வனவின் போதான கொடுக்கல் – வாங்கல் மற்றும் லங்கா வைத்தியசாலையின் பங்கு விற்பனை மோசடி தொடர்பிலேயே விசாரணை நடத்தப்படவுள்ளது.

இந்த விசாரணைக்காக நிதி மோசடி தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சட்டமா அதிபர் திணைக்களம் கோத்தபாயவை கைது செய்வதற்கான பரிந்துரைகளை வழங்கியுள்ளதாக, கசிந்துள்ள சில ஆவணங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ரெலிகிராப் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை, கடந்த இரு வாரங்களுக்கு முன்னர், அவன்காட் மற்றும் ரக்ன லங்கா ஆயுதக் களஞ்சியசாலை தொடர்பிலான குற்றச்சாட்டுக்களும் பதிவாகியுள்ளன. மேலும், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிலும் கோத்தபாயவுக்கு எதிரான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்த, முன்னாள் ஜனாதிபதியும் கோத்தபாயவின் சகோதரருமான மஹிந்த ராஜபக்ஷ, தனது ஆதரவாளர்கள் மீதான விசாரணையை நிறுத்துமாறும், நிதி மோசடி தடுப்பு விசாரணைப் பிரிவை கலைக்குமாறு கோரியிருந்தார். (ற–5)

### இன அழிப்பின்

கிழக்கு மாகா ணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பகுதியிலும், வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் மண்ணிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் காலை 11 மணிக்கு கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ற–5)

### வெற்றி

முறையில் கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளது. இலங்கையில் நடந்த போரில் கொல்லப்பட்ட அனைவரும் நினைவு கூரப்படவுள்ளனர்.

மஹிந்த அரசால், மே 18 ஆம் திகதி போர் வெற்றி விழா இந்த ஆண்டு மாத்தறையில் கொண்டாட தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், புதிய அரசு அவற்றை நிறுத்தி, சாதாரணமாக கொல்லப்பட்ட அனைவரையும் நினைவு கூரும் நாளாகப் பிரகடனப்படுத்தவுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

### தமிழின

அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும். ஒரு இஸ்ரேலிய நிறுவனம் பலஸ்தீனத்தில் சென்று வர்த்தகம் செய்ய முடியுமா?. ஆனால் எமது ரத்த சொந்தங்களைக் கொலை செய்த அரசுக்கு, லாபம் ஈட்டிக் கொடுக்கும் வர்த்தக நிலையங்களை நாம் தமிழகத்தில் செயற்பட அனுமதித்திருக்கின்றோம். – என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர்.

இனிமேலும் இவ்வாறு செயற்பட அனுமதிக்க முடியாது. தமிழக சட்டமன்றத்தில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அது செயல் வடிவம் பெற வேண்டும். தமிழீழ நாடு நோக்கிய நமது லட்சிய பயணத்தில் சிங்கள இனவெறிக்கு எதிரான நமது அடுத்த கட்ட போராட்டம் தமிழகத்தில் இயங்கி வரும் சிங்கள நிறுவனங்களை முழுமையாக அகற்றுவதாக அமைய வேண்டும். இதனைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் – என்று போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் அமைப்புக்களும் இளைஞர் இயக்கங்களும் மேலும் தெரிவித்தனர். (ற–5)

### காணாமல்போனோர்

வழங்கியுள்ளதையடுத்து, காணாமற்போகச்செய்யப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா. பணிக்குழு ஓகஸ்ட் மாதம் இலங் கைக்குப் பயணம் செய்யவுள்ளது.

இந்தக் குழுவினர் போரின் போது காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும், இந்தப் பிரச்சினைக் கான தீர்வு குறித்து ஆய்வுகளையும், கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளனர். இவர்கள் வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கும் பயணம் செய்வர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

### ஜூலை

பட்டதன் பின்னர் எதிர்வரும் பொதுத் தேர்தல் தற்போதைய முறையில் நடத்துவதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

புதிய முறைமையின் கீழ் தேர்தல் பிரிவுகள் மறுபங்கீடு செய்யப்படுவது மற்றும் அது தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்குக் குறைந்த பட்சம் 6 மாத காலங்கள் தேவைப்படும் என்பதனால் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய விரைவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்த [illegible] இணக்கப்பா [illegible] கத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் பல எதிர்வரும் பொதுத் தேர்தலை புதிய தேர்தல் முறைமையின் கீழ் நடத்தப்படவேண்டும் எனவும் 19 ஆம் திருத்தச்சட்டத்துக்கு ஆதரவு வழங்கியதற்கான பிரதான ஒப்பந்தங்களில் ஒன்று இதுவெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய தேர்தல் முறைமையின் கீழ் நடத்துவதற்குப் பல மாதங்கள் தேவைப்படுவதனால் தற்போதைய முறையில் நடத்துவதற்கே இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. (ற–சி)

### காணாமல்போன

குறித்த குடும்பஸ்தர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் நிலையில் அதே இடத்தைச் சேர்ந்த இருவரை பொது மக்கள் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வன்னேரிக்குளம், சோலை என்னும் கிராமத்தைச் சேர்ந்த பரமேஸ்வரன் கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து வீடு திரும்பவில்லை. குடும்பத்தினரும் அயலவர்களும் அவரைத் தேடியபோதும் எதுவிதத் தகவல்களும் கிடைக்கவில்லை. அந்தக் கிராமத்தைச் சேர்ந்த இருவர் மீது சந்தேகம் கொண்ட கிராம மக்கள் அவர்களில் ஒருவரைப் பிடித்து விசாரித்துள்ளனர். அந்த நபர் அவர்களை அங்குள்ள காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு பரமேஸ்வரன் இல்லை என்றும், குறித்த இடத்தில் கசிப்பு இருப்பதாகவும் அதனால் தான் அங்கு சென்றுவருவதாகக் கூறினார் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

அங்கு சென்ற பொதுமக்களில் சிலர் அந்தச் சமயம் காட்டுக்குள் கழிவு நீர் செல்லும் ஆற்றங்கரையோரம் தேடிச் சென்றபோது துர்நாற்றம் வீசியது என்றும், அதையடுத்து ஆற்றுக்குள் சென்று பார்த்தபோது சிறிதளவு நீருக்குள் அமிழ்ந்து – அழுகிய நிலையில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதையடுத்து அக்கராயன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது என்றும் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், பொது மக்களால் பிடித்து வைக்கப்பட்டிருந்த இருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரா யன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற–21,426)

### ரணிலுக்கு

தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டிய அபயராம விகாரையில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


நாங்கள் ஏற்கனவே பொது பாதுகாப்பு மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் ஊழல் மற்றும் மோசடி ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவி தில்ருக்ஷி விக்கிரமசிங்க ஆகியோருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த வாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மீதும் இன்னும் சில வாரங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படும். – என்று அவர் அங்கு தெரிவித்தார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை பல வாரங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அந்தப் பிரேரணை மீது இன்று வரை விவாதம் நடத்தப்படவில்லை. இந்த நிலையில் நீங்கள் சமர்ப்பித்துள்ள சமர்ப்பிக்கப் போகும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் எப்போது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுமென செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, அது எமது கைகளில் இல்லையென தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு பயணித்த மலேசிய விமானம் திடீரென தரையிறக்கம்

*நீடிக்கின்றது மர்மம்*



கொழும்பு, மே 11

மலேசியாவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த மலேசிய விமான நிறுவனத்துக்கு சொந்தமான எம்.எச்-179 என்ற விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டமை தொடர்பில் மர்மம் நீடிக்கின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமானம் புறப்பட்டு சில மணி நேரங்களில் கோலாலம்பூர் விமான நிலையத்துக்கு விமானம் திரும்பியுள்ளது. மலேசியாவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இந்த விமானம் மலாக்கா நீரிணைக்கு மேலாக இரண்டு மணி நேரம் வட்டமிட்டதன் பின்னரே கோலாலம்பூரில் தரையிறங்கியுள்ளது. விமானத்தில் கூடுதலாக எரிபொருள்கள் இருந்த நிலையில், அது தரையிறக்கப்பட்டமை ஆபத்தானது என்றும் மலாக்கா நீரிணைக்கு மேலாக விமானத்தை வட்டமடிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்றும் மலேசிய ஊடகங்கள் தெரிவித்தன.

இரவு 11.30க்கு புறப்பட்ட விமானம் மீண்டும் கோலாலம்பூர் விமான நிலையத்தில் அதிகாலை 1.30க்கு தரையிறங்கியுள்ளது. விமானம் மீண்டும் தரையிறங்கியமைக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. அது மர்மமாகவே இருக் கின்றது.

இந்த விமானம் கோலாலம்பூரிலிருந்து புறப்பட்டு நேற்று ஞாயிற்[illegible]கிழமை அதிகாலை 12.18க்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அண்மிக்கவிருந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. (வ)

# முன்பள்ளி ஆசிரியர்களை மகிழ்விக்கும் செயற்பாடுகள் விரைவில் முன்னெடுப்பு

### யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட எம்.பி. சரவணபவன் தெரிவிப்பு







தென்மராட்சி, மே 11

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் முன்பள்ளிகள் அனைத்தும் சிறப்பாகச் செயற்படுகின்ற போதிலும், மாணவர்களை வழி நடத்துகின்ற ஆசிரியைகளின் நிலையோ பரிதாபமானது. குறைந்த சம்பளத்துடன் நிறைந்த சேவைகளை வழங்கும் எமது பிரதேச ஆசிரியர்களும் மகிழ்ச்சியடையும் செயற்பாடுகள் விரைவில் இடம்பெறவுள்ளன. இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப் பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ்.றோட்டரிக் கழக முன்னாள் தலைவருமான ஈ.சரவணபவன்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற யாழ்.றோட்டரிக் கழகத்தின் உதவிகள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"வடக்கு மாகாண சபையின் முன்பள்ளிகள் தொடர்பான நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும், மாகாணத்தில் உள்ள அனைத்து முன்பள்ளிகளும் மாகாண அரசில் பதிவு செயற்பட்டு சிறார்களும், ஆசிரியர்களும் பயன்பெற முடி யும்.

முன்பள்ளிகள் உள்ளூராட்சி சபைகளால் நிர்வகிக்கப்பட்ட போது சிறப்பாச் செயற்பட்டன. பின்னர் கல்வித் திணைக்களத்திடமும் அதன் பின்னர் ஆளு நரிடம் முன்பள்ளிகள் கையளிக்கப்பட்டதால் ஆசிரியர்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்ற னர். வன்னிப்பகுதியில் சில முன் பள்ளிகள் படையால் நிர்வகிக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது.

முன்பள்ளி நியதிச் சட்டம் மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டதும் ஆசிரியர்களும், முன்பள்ளிச் சிறார்களும் போதிய பயன்களைப் பெறமுடியும். இதுவரை முன்பள்ளி ஆசிரியர்களுடன் பெற்றோரும் இணைந்து இளம் சிறார்களுக்கு சிறந்த கல்வி அறிவை ஊட்ட வேண்டும். முன் பள்ளிச் சிறார்களின் எதிர்கால நலன் கருதி கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் யாழ். றோட்டறிக் கழகத்துக்குப் பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன்' என்றார். (வ-9)

# வீடுகளில் மலம் அகற்றல் தற்காலிகமாக நிறுத்தம்

### கொட்டுவதற்கு இடம் இல்லை என்கிறது வலி.தென் மேற்கு பிரதேச சபை

வலிமேற்கு, மே 11

வீடுகளில் உள்ள மலக் குழிகளில் இருந்து வெளியேற்றப்படும் மலக் கழிவுகளைக் கொட்டுவதற்கு பொருத்தமான இடம் கிடைக்காமையால் மலக்கழிவுகளை ஏற்றி அப்புறப் படுத்துவதை வலி தென் மேற்கு பிரதேச சபை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

இதனால் பிரதேச சபைக்கு மாதாந்தம் கிடைத்து வந்த வருமானத்தில் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் வீடுகளில் உள்ள மலக்குழிகளில் நிரம்பியிருக்கும் மலக்கழிவுகள் கட்டண அடிப்படையில் பிரதேச சபையால் அதற்குரிய வாகனத்தில் ஏற்றி பிரதேச சபைக்கு சொந்தமான காக்கைதீவு கல்லுண்டாய் கடற்கரையில் கொட்டுவதே வழமையான செயற்பாடாகும்.

காக்கைதீவு பகுதியில் யாழ்.மாநகர சபையினால் தினசரி கொட்டப்பட்டு வரும் திண்மக்கழிவுகள் தொடர்பில் வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கும், யாழ் மாநகர சபைக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதுடன் அந்தப்பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்களால் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களும் நடைபெற்றிருந்தன.

இந்தநிலையில் மலக்கழிவு, திண்மக்கழிவு கொட்டப்படுவது தொடர்பில் வலி.தென்மேற்கு பிரதேச சபையால் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அதையடுத்து கல்லுண் டாய் வெளியில் மலக்கழிவு கொட்டுவதை வலி.தென்மேற்கு பிரதேச சபை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

வீடுகளில் உள்ள மலக்குழிகளில் இருந்து மலக்கழிவுகளை வாகனம் மூலம் அப்புறப்படுத்துவதை பிரதேச சபை நிறுத்தியுள்ளதால் பிரதேச சபைக்குக் கிடைக்க வேண்டிய மாதாந்த வருமானத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் பொது மக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். (வ-115)

## சைக்கிள் உரிமத்தை பெற்றுக்கொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 11

யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சைக்கிள்கள் அனைத்தும் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தமது சைக்கிள் உரிமத்தினை மாநகர எல்லை யில் பெற்றுக்கொள்ள வேண் டும் என்று மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மாநகர சபை எல்லைக்குள் கட்டாக்காலி கால்நடைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (வ)

# சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போஷாக்கின்மை விழிப்புணர்வு



மட்டக்களப்பு, மே 11

உலக செயற்பாட்டு வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு–கிரான் பிரதேசத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போஷாக்கின்மை பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்[illegible]ம் பேரணி நடத்தப்பட்டது.

வேள்ட் விஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிரான் பிரதேச திட்ட முகாமையாளர் இந்து றோகாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி ஆர். ரவிச்சந்திரன், பிரதேச செயலர் கே.தனபாலசுந்தரம், சுகாதாரத் திணைக்களத்தினர், பாடசாலை மாணவர்கள் பொது மக்கள் எனப் பலரும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

கிரான் சுற்றுவட்டச் சந்தியிலிருந்து ஆரம்பமான இப்பேரணி பிரதான வீதி வழியாக சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து றெஜி காலாசார மண்டபத்தை அடைந்தது. அங்கு விஷேட செயலமர்வு நடைபெற்றது. பேரணியில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்திச்சென்றனர்.

'உலகளாவிய ரீதியில் அனைத்து கதாநாயகர்களுடனும் இணைந்து நானும் நிற்பேன். எதுவுமில்லை என்ற பூச்சிய மட்டத்தை அடைவதற்காக நாம் ஒன்றிணைந்து அனைத்து தலைவர்களையும் அழைப்போம்' என்ற சத்தியவாக்கும் அங்கு பங்குபற்றுநர்களால் மேற்கொள்ளப்பட்டது. (வ-10)

# சாவகச்சேரியில் இரு வீதிகள் திருத்தும் பணிகள் ஆரம்பம்



தென்மராட்சி, மே 11

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட இரு வீதிகள் புனரமைப்பதற்கு ஆரம்பக் கட்ட வேலைகள் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

நகரசபை தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை மற்றும் உறுப்பினர்கள் அந்தந்தப்பகுதி மக்கள் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நகரசபையின் 4 ஆம் வட்டாரத்தில் உள்ள சித்தன்மாவடி வீதி, 5 ஆம் வட்டாரத்தில் உள்ள காண்டைக் காடு வீதி ஆகியவை சபை நிதியிலிருந்து 26 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

சபை உறுப்பினர்களான த.சுதர்சன், க.மயில்வாகனம் ஆகியோருக்கு சபையால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து குறித்த வீதிகள் புனரமைக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2011 ஆம் ஆண்டு பதவியேற்ற சபை உறுப்பினர்கள் 11 பேரும் கடந்த 4 வருடங்களில் தமக்கு ஒதுக்கப் பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப் பட்ட 104,105 ஆவது வீதி புனரமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (வ-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 26

# வடமாகாண அரைமரதன் முடிவுகள்






யாழ்ப்பாணம், மே 11
வடமாகாண கல்வி அமைச்சினால் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையில் வருடாவருடம் நடத்தப்படும் பெருவிளையாட்டுக்களில் நடப்பாண்டுக்கான பெரு விளையாட்டுக்கள் நேற்றுமுன்தினம் அரைமரதன் ஓட்டத்துடன் ஆரம்பமாகின. இந்த அரை மரதனில் போட்டியில் ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல் லூரியைச் சேர்ந்த ரி.மாதவன் முதலிடத்தையும் பெண்கள் பிரி வில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.டின்சியா முதலிடத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

**ஆண்கள் பிரிவு**
ஆண்கள் பிரிவில் வடமாராட்சி கல்வி வலய நெல்லியடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி.மாதவன் 1 மணி 12 நிமிடங்களில் நிறைவு செய்து முதலிடத்தைக் கைப்பற்றினார். இரண்டாம் இடத்தை கோட்டை கட்டிய குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.ஜனதனும் மூன்றாம் இடத்தை முல்லைத்தீவு மகா வித்தியாலயத் தைச் சேர்ந்த எஸ்.அவிசனும் நான்காம் இடத்தை கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.நிர்மலும், ஐந்தாம் இடத்தை கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.தேனுஜனும், ஆறாம் இடத்தை புன்னை நீராவி அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த எ.ராஜ்குமாரும், ஏழாம் இடத்தை உருத்திரபுரம் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த ஆர்.அனுஜனும் எட்டாம் இடத்தை கோட்டை கட்டிய குளத்தைச் சேர்ந்த எஸ்.அலக்ஸிம் ஒன்பதாம் இடத்தை தர்மபுரம் மத்திய கல் லூரியைச் சேர்ந்த வ.பகலவனும் பத்தாம் இடத்தை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.நிவின்சனும் கைப்பற்றினர்.

**பெண்கள் பிரிவு**
பெண்கள் பிரிவில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.டின்சியா ஒரு மணி 28 நிமிடங்களில் ஓடி முடித்து முதலாம் இடத்தை கைப்பற்றினார். இரண்டாம் இடத்தை புதுக்குடியி ருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். டிலக்சனாவும் மூன்றாம் இடத்தை கற்சிலைமடு அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த எஸ்.விதுசாவும் நான்காம் இடத்தை கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.தமிழினியும் ஐந்தாம் இடத்தை முள்ளியவளை வித்தி யானந்தா கல்லூரியைச் சேர்ந்த ரி.மதுப்பிரியாவும் ஆறாம் இடத்தை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த வை.நிதர்சனாவும் ஏழாம் இடத்தை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த த.பிரார்த்தனாவும் எட்டாம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆர். சிவராஜினியும் ஒன்பதாம் இடத்தை முல்லைத்தீவு சுதந்திரபுரம் அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த எஸ். சந்திரமதியும் பத்தாம் இடத்தை முல்லைத்தீவு பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த கி.கஜனிகாவும் கைப்பற்றினர். (ரி)

## இன்றைய மோதல்கள்

**கே.ஸி.ஸி.ஸி. வி.க.தொடர்**
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் நடந்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்கான ஆண் பெண் இருபலாருக்கான கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் யாழ் பல்கலைக் கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. 4.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோரதவுள்ளது. (ரி–23)

**புனித தோமையார் வி.க. தொடர்**
மாதகல் புனித தோமையார் தேவாலயத்தின் பெருவிழாவையும்புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக 36 கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் உதைபந்தாட்டத் தொடர் மேற்படி கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.
குறித்த தொடரின் இன்றைய ஆட்டத்தில் மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அராலி அண்ணா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் இளவாலை விளான் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடமராட்சி வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ரி–86)

## தெல்லிப்பழை, பருத்தித்துறை அபாரம்



யாழ்ப்பாணம், மே 11
யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களிற்கான கபடித் தொடரின் ஆண்கள் பிரிவில் தெல்லிப்பளை பிரதேச செயலகமும், பெண்கள் பிரிவில் பருத்தித்துறைப் பிரதேச செயலகமும் கிண்ணத்தைக் கைப்பற்றின.
கடந்த சனிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டங்களில் ஆண்களிற்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது. இரு அணி வீரர்களின் ஆட்டமும் அனல் பறந்தது. இதனால் இரு அணிபக்கமும் புள்ளிகள் உயர்ந்து கொண்டே சென்றது. இருந்த போதும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியினரின் ஆதிக்கம் சற்று மேலோங்க முடிவில் 31:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.
பெண்களிற்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்தது முதல் பருத்தித்துறை பிரதேச செயலக அணியினர் ஆதிக்கம் செலுத்தினர். இதனால் பருத்தித்துறை பிரதேச செயலக அணியின் ஆட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வேலணை பிரதேச செயலக அணியினர் திண்டாடினர். இதனால் ஆட்ட நேர முடிவில் 58:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனாகியது. (ரி–106–422–23)



## கே.ஸி.ஸி.ஸி. கூடைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 11
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் நடந்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்கான ஆண் பெண் இருபலாருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரிகூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றது.
அதில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி 41:37 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 89:59 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.
இதே வேளை கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பட்டபிளை விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 53:35 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. ஆண்களுக்கான ஆட்டத்தில் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். பல்கலை பழைய மாணவர் அணி மோதிக் கொண்டது. இதில் ஜொலிஸ்ரார்ஸ் அணி 64:54 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.(ரி–23)

## சென்றலைட்ஸ் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், மே 11
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் 30 பந்துப்பரி மாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் நேற்று சனிக்கிழமை காலை இடம் பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் (புளூஸ்) விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
சென்றலைட்ஸ் (புளூஸ்) விளை [illegible] டுக்கழக அணி மோதிக்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் விளையாட்டுக் கழக அணியினர் 21 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக கவாஸ்கர் ஆட்டம் இழக்காமல் 18 ஓட்டங்களையும் ஜனன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் அலன் 4 இலக்குகளையும் டிசாந்தன் 3 இலக்குகளையும் நிதுசன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
180 பந்துகளில் 76 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் (புளூஸ்) விளையாட்டுக்கழக அணியினர் 13 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மட்டும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக சஞ்சேயன் 22ஓட்டங்களையும் கரன் 9ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணி சார்பில் சதிஸ், யதுசன், கவிந்தன் ஆகியோர் தலா ஒரு இலக்கை கைப்பற்றினர். (ரி–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்




## சகலதுறை வீரர்கள் தரவரிசையில் முதலிடம் பெறவேண்டும் -மத்தியூஸ்



இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் சிறந்த வீரருக்கான விஸ்டன் இந்தியா விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
ஒவ்வொரு ஆண்டும் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதினை விஸ்டன் இந்தியா அமைப்பு வழங்கி வருகிறது. கடந்த ஆண்டு சிறப்பாக செயல்பட்ட சகலதுறை வீரர் என்ற வகையில் இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ் இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
விஸ்டன் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக மத்தியூஸ் தெரிவித்ததாவது நான் பொதுவாக சூழ்நிலைக்கு ஏற்றவாறு விளையாடுவேன். நான் மேற்கொண்ட பயிற்சியில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. இது ஒவ்வொரு இன்னிங்ஸிலும் எனக்கு கைகொடுக்கிறது. உலகின் சகலதுறை வீரருக்கான தரவரிசைப் பட்டியலில் முதலிடம் பிடிக்க வேண்டும் என்பது கனவாக இருக்கிறது. இதற்காக கடந்த வருடம் சில முயற்சிகளை மேற்கொண்டேன்–என்றார். (ரி)

## வில்லியர்ஸ் சதம், ஹோக்லி அரைச்சதம்

# மும்பையை முடக்கியது பெங்களூர்

வில்லியர்ஸின் அதிரடிச் சதமும் ஹோக்லியின் அரைச்சதமும் கைகொடுக்க 39 ஓட்டங்களால் மும்பையை வீழ்த்தி இருப்பை பலப்படுத்தியது பெங்களூர்.
பெங்களூர் எதிர் மும்பை அணிகளுக்கிடையிலான ஆட்டம். தொடர்ச்சியாக ஐந்து வெற்றிகள் பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறுவதில் முனைப்போடு இருக்கும் அணி மும்பை. அதே முனைப்பில் அதிரடியில் வேடிக்கை காட்டிக்கொண்டிருக்கும் அணி பெங்களூர். பெங்களூரின் துடுப்பாட்டம் அந்த அணிக்கு பலம் என்றால் பந்துவீச்சு வரிசை இரட்டிப்பு பலம்.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் கெயிலுடன் ஹோக்லி. கடந்த ஆட்டத்தில் சதம் அடித்த குஷியில் இந்த ஆட்டத்தில் துடுப்பெடுத்தாடும் பொழுதே சிவப்பு நிறக் கண்ணாடியுடன் களமிறங்கினார் கெயில். மும்பையின் பந்துவீச்சுக்கு முன்னால் கெயிலின் ஆட்டம் எடுபடவில்லை. பதின்மத்துடன் பவிலியன் திரும்பினார். களத்தில் ஹோக்லியுடன் வில்லியர்ஸ். கெயிலின் இலக்குச் சரிவால் ஆரம்பத்தில் சற்று நிதானித்தார்கள். ஓரிரு பந்துப்பரிமாற்றங்கள் ஓடிமறைய வில்லியர்ஸின் ஆட்டம் ஆரம்பமானது. ஹோக்லியும் விட்டுவிடவில்லை. இருவருமாக இணைந்து மும்பையின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்தனர். 11ஆவது பந்துப்பரிமாற்றத்தில் பெங்களூர் நூறு ஓட்டங்களை எட்டிப்பிடித்தது. சிறிது நேரத்திலேயே வில்லியர்ஸ் அரைச்சதம் கடந்தார். ஹோக்லியும் அரைச்சதம் கடந்ததும் இருவரினதும் அதிரடி இரட்டிப்பானது. நடப்புத் தொடரில் இரண்டாவது தடவையாக பெங்களூர் இரட்டைச்சதத்தை எட்டப் போகிறது என்ற நிலைப்பாடு பதினைந்தாவது பந்துப்பரிமாற்றத்திலேயே வெளிச்சமாகியது. ஓட்டங்கள் மின்னல் வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது இலக்குகள் மட்டும் விழுந்தபாடில்லை. மக்கலம், கெயில் வரிசையில் சதத்தை விளாசினார் வில்லியர்ஸ். பெங்களூர் இருநூறு ஓட்டங்களை ஊதித்தள்ளி தொடர்ந்தும் பயணித்தது முடிவில் பெங்களூர் 235–1. வில்லியர்ஸ் 59 பந்துகளில் 133 ஓட்டங்கள். ஹோக்லி 50 பந்துகளில் 82 ஓட்டங்கள். இணைப்பாட்டம் 215.



பெங்களூரின் பந்துவீச்சுக்கு எதிராக 120 பந்துகளில் 236 ஓட்டங்களை நிச்சயம் பெற முடியாது. ஆனாலும் கௌரவ ஓட்டங்களையாவது பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் களத்தில் சிம்மொன்ஸுடன் பார்த்திவ் பட்டேல். வழக்கம் போல பட்டேல் சொதப்பினார். ரோகித் சர்மாவும் நிலைக்கவில்லை. இருவரும் பதின்மத்துடன் விடைபெற மும்பை 63–2. ஒரு முனையில் போராடிக் கொண்டிருந்த சிம்மொன்ஸிற்கு கைகொடுத்தார் பொலார்ட். இருவரும் இணைந்து மும்பையின் வெற்றிக்காக முனைப்போடு பாடுபட்டனர். சிம்மொன்ஸ் பெரிதாக அதிரடியில்லை. ஆனால் இருநூறுக்கும் அதிகமான சராசரியில் சென்றுகொண்டிருந்தார் பொலார்ட். இமாலய சிக்சர்களும் இல்லாமல் இல்லை. 49 ஓட்டங்களுடன் பொலார்டுக்கு ஓய்வுகொடுத்தார் அரவிந். பின்வரிசை வீரர்களும் நிலைப்பதாக இல்லை. அதிரடிக்கு ஆசைப்பட்டு அடுக்கடுக்காக பவிலியன் திரும்ப முடிவில் 196–7 என்ற ஓட்டங்களை மட்டுமே எட்டி 39 ஓட்டங்களால் தோல்வியடைந்து மும்பை. (ரி)

## முதல்தடவையாக முதலிடத்தில் கொல்கத்தா



ஐ . பி . எல் . வரலாற்றில் முதல் தடவையாக கொல்கத்தா அணி முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளது.
ஐ.பி.எல். தொடரில் கிண்ணத்தைக்கைப்பற்றிய அணிகளுள் ஒன்றாக இருப்பது மட்டுமன்றி நடப்புச் சம்பியன் அந்தஸ்துடனும் உள்ள அணி கொல்கத்தா. ஆனால் ஐ.பி.எல். வரலாற்றில் ஒரு தடவையேனும் கொல்கத்தா தரப்படுத்தலில் முதலிடத்துக்கு முன்னேறவில்லை. இந்த நிலையில் நடப்பு தொடரில் பஞ்சாப்புக்கு எதிரான லீக் ஆட்டத்தில் பஞ்சாப்பை வீழ்த்தியதன் மூலம் முதல் தடவையாக முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது கொல்கத்தா.
முதலிடத்தைக் கைப்பற்றிய ஆட்டத்தின் ஆட்டநாயகனான ரசல் இது தொடர்பாக தெரிவித்ததாவது ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா பலவற்றைச் சாதித்துள்ளது. இன்னும் சொல்லப்போனால் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்தில் உள்ளதும் நாங்கள்தான். ஆனால் ஒரு முறையேனும் முதலிடத்தைக் கைப்பற்றவில்லை என்ற குறை எமக்குள் தொடர்ச்சியாக இருந்து வந்தது. ஆனால் இன்று அதையும் அடைந்து விட்டோம் மொத்தத்தில் அனைத்தையும் சாதித்தது போன்று உணர்கிறோம்– என்றார். (ரி)

## இதுதான் றொனால்டோ




போர்த்துக்கல் உதைபந்தாட்ட அணியின் தலைவரும் ரியல் மாட்ரிட் கழகத்தின் நட்சத்திர வீரருமான கிறிஸ்டியானோ றொனால்டோ நேபாள நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 140 கோடி நிதியுதவி அளித்துள்ளார்.
கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நேபாளத்தில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பலியாகினர். பலர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். ஏராளமான குழந்தைகள் பெற்றோர்களை இழந்து தவித்து வருகின்றன. பல நாடுகளும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவிகளை அளித்து வருகிறன.
இந்நிலையில் போர்த்துக்கல் அணியின் அணித்தலைவரான றொனால்டோ நேபாள நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 140 கோடி ரூபாயை நிதியுதவியாக கொடுத்துள்ளார். அத்துடன் நின்றுவிடாது தனது சமூக வலைத்தளங்களில் எனது நண்பர்களே; இந்த உலகில் உதவியென்பது மிக அவசியமானது. தற்பொழுது நேபாள மக்களுக்கு அது தேவைப்படுகிறது. அவசியம் உதவுங்கள் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.
இதனையடுத்து றொனாட்டோவின் ரசிகர்களும் தற்பொழுது நேபாள மக்களுக்கு உதவ ஆர்வம்காட்டி வருகின்றனர். றொனால்டோ தொடர்ச்சியாக பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.இவற்றில் அதிகம் குழந்தைகள் சார்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)


## பிரேசிலின் தங்க மகன் மருத்துவமனையில் அனுமதி

பிரேசில் நாட்டின் கால்பந்து ஜாம்பவானாக திகழ்ந்தவர் பீலே. சிறுநீர் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த இவர் அறுவை சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளார்.
கடந்த ஆண்டு சிறுநீரகத்தில் கல்லடைப்பு ஏற்பட்டதற்காக சிகிச்சை மேற்கொண்டார். சிறுநீரக கற்கள் அகற்றப்பட்டபின் மருத்துவமனையில் சிறுநீர் நோய்த்தொற்று தொடர்பாக சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் அறுவை சிகிச்சை செய்துகொள்வதற்காக சாவோ பவுலோவில் உள்ள அல்பேர்ட் ஐன்ஸ்டீன் மருத்துவமனையில் தற்பொழுது அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த தகவலை மருத்துவமனை [illegible] உடல்நிலை மற்றும் சிகிச்சை குறித்து தகவல் அளிக்க மறுத்து [illegible]
பிரேசில் நாட்டிற்காக 92 ஆட்டங்களில் விளையாடிய பீலே 77 கோல்கள் அடித்துள்ளார். கழக அணிகளுக்காக 650 கோல்கள் அடித்துள்ளார். பிரேசிலுக்கு 3 முறை உலகக்கிண்ணம் வென்றுகொடுத்த பெருமையும் இவரையே சேரும்.(ரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அடிபட்ட புலியே யுவராஜ் -சங்கா

## சென்னையே கிண்ணம் வெல்லும் -மஹேல

நடப்பு ஐ.பி.எல். தொடரில் இலங்கை ஜாம்பவான்களான மஹேலவையும் சங்காவையும் எந்த அணியும் ஏலத்தில் எடுக்கவில்லை. ஐ.பி.எல். தொடரில் இவர்கள் இல்லாததனால் ஏமாற்றத்திலிருந்தனர் இலங்கை ரசிகர்கள் இந்த நிலையில் மீண்டும் ஐ.பி.எல். தொடரில் இணைந்துள்ளனர் சங்காவும் மஹேலவும். ஆனால் இந்த தடவை விளையாட்டு வீரர்களாக அல்லாமல் வீரர்களின் திறமைகளைப் பற்றி கலந்துரையாடும் விமர்சகர்களாக இணைந்துள்ளனர்.

இங்கிலாந்தில் கழக அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் தொடரில் சங்காவும் மஹேலவும் வெவ்வேறு கழகங்களுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டு தற்பொழுது இருவரும் இங்கிலாந்தில் உள்ளனர். இந்த நிலையில் ஐ.பி.எல். நிர்வாகக் குழு சங்காவுடனும் மஹேலவுடனும் தொடர்புகொண்டு இங்கிலாந்தில் இருந்தபடியே ஆட்டத்தைப் பற்றியும் வீரர்க்ளைப் பற்றியும் கலந்துரையாடுமாறு கேட்டுள்ளது. இதற்கு ஒப்புக்கொண்ட சங்காவும் மஹேலவும் ஹைதராபாத் எதிர் டெல்லி அணிகள் நேற்றுமுன்தினம் மோதிய ஆட்டம் தொடர்பாக விமர்சித்துக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது இடதுகை பழக்கமுடைய வீரர் என்ற வகையில் யுவராஜ்ஜின் செயற்பாடு தொடர்பாக கருத்துத் தெரிவிக்குமாறு சங்காவிடம் கேட்ட பொழுது யுவராஜ் அடிபட்ட புலி. காயம் பட்டுள்ளதே தவிர மற்றும்படி அவர் புலிதான். ஓர்நாள் புலி பாயும் அப்பொழுது வேடிக்கை பார்ப்பதைத் தவிர எதிர் அணியால் வேறொன்றும் செய்ய முடியாது என்றார் சிரித்துக்கொண்டு. எந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றும் என்ற கேள்விக்கு பதிலளித்த மஹேல சென்னையின் வாய்ப்புக்கள் அதிகப்படியாக உள்ளன. இறுதியாட்டத்துக்கு பெங்களூர் முன்னேறலாம் என்றார் இவரிடமும் சிரிப்புத்தவறவில்லை. (ரி)

# கிண்ணம் குவித்தோவாவிடம்

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் முன்னணி வீராங்கனை பெத்ரா குவித்தோவா வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

அரை இறுதியில் முதல்தர வீராங்கனை செரீனா வில்லியம்ஸை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறிய குவித்தோவா இறுதியாட்டத்தில் கஸ்னட்சோவாவுடன் மோதினார். இந்த ஆட்டத்தில் 6:1, 6:2 என்ற நேர் செற்களில் கஸ்னட்சோவாவை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றினார். ஸ்பெயின் கிண்ணத்தை குவித்தோவா இரண்டாவது தடவையாக கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றி தொடர்பாக குவித்தோவா தெரிவித்ததாவது இறுதியாட்டத்தில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியதை விட அரையிறுதியில் செரீனாவை வீழ்த்தியதே பெருமையாக நினைக்கின்றேன். மொத்தத்தில் இந்தத் தொடரில் பலமான வீராங்கனைகளையெல்லாம் வீழ்த்தியுள்ளேன். இது ஒரு திருப்திகரமான தொடர் என்றார். (ரி)





ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af

வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.

உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.

INTERNATIONAL DIPLOMAS.

ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

SPOKEN ENGLISH

தொழில்புரிவோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கானது.

சனி, ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 16.05.2015

பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : முப 10.00-12.00
பிரிவு 3 : பிப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00


SAAMSON

077 621 4567
021 320 3313


# நான்காம் ஆண்டு நினைவுடன்...

## பொன்னப்பா காசிப்பிள்ளை

(வட்டுவினி அம்மன் கோயிலடி இணுவில் மேற்கு)



பிறப்பு
30.03.1930

இறப்பு
11.05.2011

எங்கள் குலவிளக்கே ஏற்றம்
பெறவைத்த -அப்பாவே !
உங்கள் முகம் காணாமல்
இன்றோடு - நான்காண்டுகள்
பாசத்தின் இருப்பிடமாய் அன்பின்
உறைவிடமாய்
பக்குவமாய் எம்மை வளர்த்து
விட்ட எம் தந்தையே !
வாழவழி சமைத்து எம்மை
எல்லாம்
வையகத்தில் சிறப்புற வைத்த
எம் தெய்வமே !
எம்மைப்பிரிந்து தான்
சென்றாலும்
உம் பிரிவு தான் ஆறுமோ ?

என்றும் உங்கள் நினைவுடன்

**குடும்பத்தினர்.**

"பொன்னப்பா பதி",
வட்டுவினி அம்மன் கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
05.06.1924



உதிர்வு
11.04.2015

## திருமதி இராசமணி கந்தையா

அன்பு, பண்பு, பாசத்திற்கு இலக்கணமாய்
எம் நல்வாழ்வுக்கு வழிகாட்டியாய் - இருந்த
எங்கள் அன்புத் தெய்வமே எம்மை
நீங்காத் துயரினிலே நிலை கொள்ளச்செய்துவிட்டு
மீளாத்துயிலில் சென்றதேனம்மா
எத்தனை காலம் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம்முள் நிலைத்திருக்கும்

எங்கள் குடும்பத்தலைவி திருமதி இராசமணி கந்தையா அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த உள்ளங்களுக்கும் நேரடியாகவும் தொலைபேசியிலும் ஆறுதல் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அன்னாரின் குடும்பத்தாராகிய நாம் உள்ளத்தால் நன்றி நவில்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"அன்னை இல்லம்"
[illegible]ட்டம், கோண்டாவில்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.